# உதயன்

சுடர் 30 கதிர் 349 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 24, செவ்வாய்க்கிழமை 10.11.2015



நீரோகா

இன்றைய சுப்பர் பரிசு

ரூ.2,732,813.50

தேசிய லொத்தர் சபை




அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும்

உதயனின்

தீபாவளி வாழ்த்துக்கள்

# பதவி விலகினார் திலக் மாரப்பன

## அவன்கார்ட் விவகாரத்தில் எழுந்த சர்ச்சையால்



கொழும்பு, நவ.10

அவன்கார்ட்சர்ச்சையில்சிக்கிய, சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன தனது அமைச்சுப் பதவியை விட்டு விலகியுள்ளார்.

இது தொடர்பில் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அத்துடன் நேற்றுக் காலை நடந்த அமைச்சரவையின் சிறப்புக் கூட்டத்தில், திலக் மாரப்பன பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய அவன்கார்ட் ஆயுதக் கப்பல் விவகாரத்தில், திலக் மாரப்பன கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பினால், அரசுக்குள் பெரும் விரிசல் ஏற்பட்டிருந்தது.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவருக்கு சட்ட ஆலோசனைகளை

பக். 24

# உறுதியளித்தபடி அரசு கைதிகளை விடுவிக்கவில்லை

## இதனால் தொடர்கின்றது உணவு தவிர்ப்புப் போர்

யாழ்ப்பாணம், நவம்பர் 10

தமிழ் அரசியல் கைதிகள் முதல் கட்டமாக நேற்றுத் திங்கட்கிழமை விடுவிக்கப்படுவர் என்று அரசு உறுதி வழங்கியிருந்தபோதிலும், எந்தவொரு தமிழ் அரசியல் கைதியும் அவ்வாறு விடுவிக்கப்படவில்லை.

அதேவேளை, அரசியல் கைதிகளினால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட உணவுதவிர்ப்புப் போராட்டம் நேற்றையதினமும் தொடர்ந்தது.

தமிழ் அரசியல் கைதிகளில் 32 பேர் நேற்றையதினம் விடுவிக்கப்படுவார்கள் என்று ஜனாதிபதி - பிரதமர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அறிவிக்கப்பட்டதைப் போன்று - உறுதிவழங்கப்பட்டதைப் போன்று நேற்று தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு இடம்பெறவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளால் கடந்த மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது உறுதியளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் கைதிகள் விடுதலை தொடர்பில்

பக். 24

# யாழ். மீள்குடியமர்வு குறித்து நாளை மைத்திரியுடன் பேச்சு

## ஆளுநர், முதலமைச்சர், அரச அதிபர் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணத்தின் மீள்குடியமர்வு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளை புதன் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பளிக்கார, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசு கடந்த ஜனவரி மாதம் பதவியேற்ற பின்னர் யாழ். குடாநாட்டில் ஒரு தொகுதிக் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. சுமார் ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு மக்களின் மீள்குடியமர்வு இடம்பெற்றிருந்தது. இதன் பின்னர் எந்தவொரு காணியும் விடுவிக்கப்படவில்லை. இதற்கு மேலாக, உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மயிலிட்டி துறைமுகத்தை வேறு இடத்தில் அமைப்பதற்கான முன் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

முப்படையினர் வசம் 7ஆயிரத்து 500 இற்கும் அதிகமான ஏக்கர்கள் இன்னமும் இருப் பது. மாவட்டச்

பக். 24

# வித்தியாவின் தாயாருடைய இரத்த மாதிரியும் பரிசோதனைக்கு

யாழ்ப்பாணம், நவ. 10

புங்குடுதீவு மாணவி கூட்டுவன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் மாணவியின் தாயாருடைய இரத்த மாதிரியைப் பெற்று ஆய்வுக்கு அனுப்புமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்றுக் கூறியுள்ளது.

குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாணவியைக் கூட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 பேரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கில் ஏற்கனவே குறித்த மாணவியினதும் சந்தேகநபர்களினதும் இரத்த மாதிரிகள்

பக். 24

# 119 இந்திய மீனவர் நேற்று விடுவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 10

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில்நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 119 பேரும் நீதிமன்றங்களால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். எனினும் அவர்களது படகுகள் விடுவிக்கப்படவில்லை.

அதேவேளை, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் படகை மோதிச் சேதம் ஏற்படுத்தினர் என்று மன்னார் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பொலிஸாரால் மீளப் பெறப்பட்டது. எனினும் பளைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட இதே குற்றச்சாட்டு வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. பளைப் பொலிஸில் இந்திய மீனவர் 10 பேருக்கு எதிராகப்

பக். 24

# சட்டம், ஒழுங்கு அமைச்சராக சாகல?



கொழும்பு, நவ. 10

தென்மாகாண அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகிக்கும் சாகல ரத்னாயக்க சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சட்டம், ஒழுங்கு அமைச்சராகக் கடமையாற்றி வந்த திலக் மாரப்பன தனது பதவியில் இருந்து நேற்று விலகியுள்ளார்.

அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களால் திலக் மாரப்பன பதவி விலகியிருந்தார்.

திலக் மாரப்பன வகித்துவந்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுப் பதவி டி.எம்.சுவாமிநாதனுக்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சாகல ரத்நாயக்க ஐக்கிய

பக். 24

# கைதிகள் விடுதலைக்காக பொது வேலைநிறுத்தம்

## நடத்துவதற்குத் தயாராகிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவ.10

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் அவர்களால் முன்னெடுக்கப்படும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையிலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகி வருவதாக அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் நாள்களில் அதற்கான அழைப்பு விடுக்கப்படுமென அது குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களும், நீதிமன்றத் தீர்ப்பில் சிறைவைக்கப்பட்டவர்களுமான எமது தமிழ் உறவுகள்

பக். 24

# கடத்தல்களின் பின்னணியில் கோத்தா

## விசாரணை நடத்துமாறு கோருகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, நவ.10

மகிந்த ஆட்சியின்போது இடம்பெற்ற கடத் தல் சம்பவங்களின் பின்னணியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச இருக்கின்றார் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று பரபரப்புத் தகவலைவெளியிட்டுள்ளார்.

எனவே, இவை தொடர்பில் கோத்தபாயவிடம் விசாரணை நடத்தப்பட்டு, அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி

பக். 24

# ஐ.நா. செயற்குழுவுக்கு ஒத்துழைக்கவேண்டும்

## அரசிடம் கோருகிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, நவ.10

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக இலங்கைக்கு வருகை தந்துள்ள, ஐ.நா. செயற்குழுவுக்கு இலங்கை அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இது தொடர்பாக, சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்

பக். 24

# உச்ச நலனை கருத்தில் கொண்டே வடக்கில் பாதுகாப்பு இல்லங்கள்

## வடக்கு மகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

சிறுவர் மற்றும் பெண்களின் உச்சநலனைக் கருத்தில் கொண்டே வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றால் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கமுடியும் என்பதே எமது எதிர்பார்ப்பு. - இவ்வாறு வடமகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி செல்வநாயகபுரம் பேன்காம் பாடசாலையின் நந்தவனம் திறப்பு விழா நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது--

பாதிக்கப்பட்ட சிறுவர், பெண்களின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் இல்லங்கள் உறுதுணையாக உள்ளன. இங்கே வாழக்கூடிய பெண்பிள்ளைகளை அன்பாகவும், கனிவுடனும் பேணிப்பாதுகாக்கின்றபோது இல்லத்தில் இருந்து தப்பியோடுதல் சம்பந்தமான சட்டங்கள் தேவையற்ற தாகி விடுகின்றன. இவற்றை எழுத்திலோ அல்லது சொல் வடிவங்களிலோ எடுத்துரைப்பது சிரமமானது. உள்ளத்திலே உண்மையான அன்பு இருந்தால் தான் நடைமுறையிலே அன்பும் கரிசனையும் பிரதிபலிக்கும்.

கைக்குழந்தைகள் பராமரிக்கப்படும் கைதடி இல்லத்துக்கு நான் ஒருமுறை சென்றிருந்தேன். அங்கே அந்த சின்னஞ்சிறு குழந்தைகளை பராமரிப்பதற்காக பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த செவிலித் தாய்மார்கள் பரிவுடனும், பாசத்துடனும் அந்தக் குழந்தைகளைப் பாலூட்டி சீராட்டி வளர்க்கின்றார்கள். அதனை நேரடியாகவே கண்டு மனம் பூரிப்படைந்தேன். அவர்கள் பல மாதங்களாகக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படாத நிலையிலும் தமது கடமைகளில் எதுவித குறைவுமின்றிக் கடமைகள் புரிவதையும் அறிந்து கொண்டேன். தற்போது அவர்களின் நியமனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தும் சீராகியுள்ளது என்று எண்ணுகின்றேன்.

பராமரிப்போர் மனதில் மனநிறைவு ஏற்பட்டால் தான் பராமரிக்கப்படுவோர் வாழ்வும் மகிழ்ச்சி உறும் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. இல்லங்களில் சேர்க்கப்படுகின்ற பிள்ளைகள் பல கோணங்களில் பாதிப்புக்குள்ளாக் கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் உரியவழிகளில் அணுகி அவர்களின் குறைகளை அடையாளம் கண்டு அவர்களைப் பராமரிக்க நாங்கள் முன்வர வேண்டும். சிறுவர்கள் பாதுகாப்புத் தொடர்பில் பல கோணங்களில் பேசப்படுகின்றது. அதிலும் பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகள் பாதிப்புக்குள்ளாக்கப்படுவது மிகவும் அதிகமாக உள்ளது. போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் குற்றச் செயல்கள் போன்ற பலதரப்பட்ட குற்றச் செயல்களுக்கு இந்தப்பிள்ளைகள் உள்ளாக்கப்படுகின்றனர். சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக வடமாகாணசபையும் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது. எமதுஎதிர் காலத்தின் சொத்துக்களான இந்த நாட்டின் தலைவர்களாக மாறக் கூடிய சிறுவர்களைப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

நாம் யாவரும் போரின் போதுபாதிக்கப்பட்டமக்கள். எமது மனங்களில் பயம், பீதி, வெறுப்பு, வன்சிந்தனைகள் போன்றவை இன்னமும் குடிகொண்டிருக் கக்கூடும். அவற்றுடன் தான் நாங்கள் குழந்தைகளையும் இளம்பெண்களையும் இங்கு அணுகவேண்டியுள்ளது. எங்கள் கடந்த காலப் பாதிப்புக்கள் நிகழ்காலப் பணிகளில் எந்தளவுக்கு ஆதிக்கஞ் செலுத்துகின்றன என்பதை நாங்களே பரிசீலித்துப் பார்க்க வேண்டிய ஒரு கடப்பாடுடையோராக நாங்கள் இருக்கின்றோம். எங்கள் ஒவ்வொருவரையும் மூன்றுவிதமாகப் புறச்சூழல்களும் சில அகச்சூழல்களும் வாழ்க்கையின் போது பாதிக்கின்றன என்பதைநாங்கள் மறக்கக் கூடாது. புறச் சூழல்கள் எனும் போது எமது கலாசார, பாரம்பரிய, சமூகச் சூழலை முதலில் கூறலாம். நாம் நடந்து கொள்ளும் விதம் எமது சமூகச் சூழலுக்கு ஏற்பவே நடக்கின்றது.

ஆகவே வன்முறையோடு கலந்த தாறுமாறான சூழலில் வளர்ந்த ஒரு குழந்தைக்கும் மென்மையான சூழலில் வளர்ந்த ஒரு குழந்தைக்கும் இடையில் பல சூழல் வேறுபாடுகள் இருப்பதைப் பராமரிப்பாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லோருடனும் ஒரேவிதமாக நாங்கள் நடந்துகொள்ள முடியாது. நாங்கள் வெறும் சம்பளத்திற்காக வேலைசெய்யாமல் சமூக நலன்களைக் கருத்தில் எடுத்துப்பணியாற்றினோமானால் சமூகப் புரட்சியை ஏற்படுத்தமுடியும். அகச் சூழல்கள் குழந்தைகளைப் பாதிக்கின்றன என்பதைநாம் மறத்தல் ஆகாது. அவற்றை அனுசரித்து அறிந்து உரிய நடவடிக்கைகளில் இறங்குவது எமது பராமரிப்புச் செவிலித் தாய்மார்களின் கடமையாகும்.- என்றார்.

(ற-10)



# 15 சத வீதமான பிள்ளைகளையே பாடசாலைக்கு அனுப்புகின்றனர்

## வெருகல் பிரதேச செயலாளர் கவலை

மட்டக்களப்பு, நவ.10

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் எல்லையிலுள்ள வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 15 வீதமான பிள்ளைகளையே பெற்றோர் பாலர் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். இது கவலையளிக்கும் விடயம். - இவ்வாறு வெருகல் பிரதேச செயலாளர் எம். தயாபரன் தெரிவித்தார்.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பெற்றோருக்கு கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்பூட்டும் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை வெருகல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பாடசாலைக் கல்வி என்பது சிறார்களின் உரிமையாகும். இதனை பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்கு மாணவர்களைக் கட்டாயம் அனுப்ப வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும் இருக்கின்றது. பாடசாலைக்குச் செல்ல வேண்டிய பருவத்தில் பிள்ளைகளை தமது சொந்த அலுவல்களுக்காகவும் தொழில்களுக்காகவும் பயன்படுத்தும் பெற்றோருக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையிட்டு பெற்றோர் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இந்தப் பிரதேச செயலகப் பிரிவில் கல்விக்கான பாடசாலைகள், ஆசிரியர்கள், மற்றும் போக்குவரத்து உட்பட சகல வசதிகளும் உள்ளன. இதற்கும் மேலதிகமாக இலவச பாடசாலைப் புத்தகங்கள், இலவச சீருடைத்துணி, இலவசக் கல்வி என்பனவற்றை அரசு வழங்குகின்றது. அரசசார்பற்றநிறுவனங்களும் கல்விக்காக உதவுகின்றன. எனவே, இந்த வாய்ப்பை பெற்றோர் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எதிர்வருகின்ற 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் தரத்துக்குச்சேர்ப்பிக்கின்றவயதையடைந்த எந்தப் பிள்ளையையும் பாடசாலைக்குச் சேர்ப்பிக்காது பெற்றோர் வீட்டில் வைத்திருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க பிரதேச செயலக அதிகாரிகள் தயங்க மாட்டார்கள்.- என்றார்.

(ற)

# மட்டு. வாவியில் சட்டவிரோத மீன் பிடி வலைகள் பறிமுதல்

மன்னார், நவ.10

8.5 இலட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத மீன்பிடி வலைகள் மட்டக்களப்பு வாவியில் மேற் கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப் பின்போது கைப்பற்றப்பட்டுள்ளன என்று மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவி பணிப்பாளர் ருக்ஸான் குரூஸ் தெரிவித்தார்.

கடந்த மூன்று தினங்களாக மட்டக்களப்பு வாவியில் நாவலடி, முகத்துவாரம், பாமீன்மடு உட்பட பல இடங்களில் கடற்றொழில் அமைச்சால் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத வலைகளைக்கொண்டு மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மீனவர்கள் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

இந் நடவடிக்கையின்போது சட்டவிரோத வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் தப்பியோடிவிட்ட நிலையில் அவர்கள் பாவித்த வலைகள் அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட சட்டவிரோத வலைகள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன என்று உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ற)

# உள்ளூராட்சி சபை முறைகேடுகள் குறித்து நீதிமன்றங்களில் வழக்கு

அச்சுவேலி, நவ. 10

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்தில் செயற்பட்ட காலப் பகுதியில் நடைபெற்ற முறைகேடுகள், நிதிமோசடிகள் மற்றும் ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன. இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் அனுமதியை கோரியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்தில் இருந்த காலப் பகுதியில் சில சபைகளில் வியாபார நிலையங்களுக்கான கேள்விப் பத்திரம் கோரல் மற்றும் வேலைத்திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை கையளித்தல் மற்றும் கடை வாடகை நடைமுறையில் முறை கேடுகள் சபைகளுக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் உடைமைகளை கையாளுவதில் நடைபெற்ற மோசடிகள் மற்றும் நிதி மோசடிகள் தொடர்பாக உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சில சபைகளின் ஆளும்தரப்பு உறுப்பினர்களே விலாவாரியாக முறைகேடுகளை அட்டவணைப்படுத்தி முறையீடு செய்துள்ளனர். முறையீடுகள் தொடர்பாக உள்ளூராட்சித்திணைக்கள அதிகாரிகள் உரிய முறையில் விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்கள் சபைக்கு செலுத்த வேண்டிய நிதி தொடர்பாக அறிவிக்கப்பட்டு கால அவகாசமும் வழங்கி இருந்தனர்.

சம்பந்தப்பட்டவர்கள் சபைக்கு செலுத்த வேண்டிய நிதியை மற்றும்கொடுப்பனவுகளை உரிய காலப் பகுதியில் செலுத்த முற்படாமல் இருந்ததோடு சபைகளின் பதவிக்காலம் கடந்த ஜூலை மாதம் முடி வடைந்த பின்னர் இன்று வரையிலும் செலுத் தாமல் இருந்து வருவதாக கூறப்ப டுகின்றது.

உள்ளூராட்சித் திணைக்கள உயர் அதிகாரிகளால் மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தால் கண்டறியப்பட்ட முறைகேடுகள் மற்றும் ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன. வழக்குகள் தாக்கல் செய்வதற் கான அனுமதி மற்றும்மேல்நடவடிக்கை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி மற்றும் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.- என திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ற-11)

BA 1St YEAR

பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

மேற்படி பல்கலைக்கழகத்திற்கு புதிய பாடத்திட்டத்தின் கீழ் பதிவினை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்த மாணவர் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தினால் நேரடியாக பல்கலைக்கழகத்திற்கு உரிய ஆவணங்களுடன் வருகை தரும்படி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் 14.11.2015 அன்று காலை 8மணிக்கு புதிய உயர் கல்லூரிக்கு சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். பயண ஒழுங்குகளும், பதிவுகளும் எம்மால் செய்து தரப்படும்.

S.அருள்நங்கை(நிர்வாகி)

T.P No
021 222 8148, 021 568 9477
077 801 9187, 077 662 1856

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.





கடந்த இரண்டு நாள்களாகக் கொட்டித் தீர்த்த மழை நேற்றுச் சற்று ஓய்ந்தது. அதனால் வடக்கில் தீபாவளி வியாபாரம் களை கட்டியது. யாழ். நகரப் பகுதியில் நேற்று மக்கள் அதிகளவில் குழுமியிருந்தனர். வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் தீபாவளி வியாபாரம் களை கட்டியிருந்தது என்று அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் நகரப் பகுதிகளில் வழமையை விட மக்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள். கடந்த இரு நாள்களாகப் பெய்த கடும் மழையால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன என்று வியாபாரிகள் கவலை தெரிவித்திருந்தனர். (ரு-21)

# மூத்த பத்திரிகையாளர் "சிற்பி" காலமானார்



யாழ்ப்பாணம், நவ.10

ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், "கலைச்செல்வி" மாத இதழின் ஆசிரியரும், வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான சிவசரவணவபன் (சிற்பி) நேற்றுக் கொழும்பில் காலமானார். அவருக்கு வயது - 98.

இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து வழங்கிய முதலாமவர் அவரே. தமது சஞ்சிகையில் ஈழத்துத் தமிழ் இளம் எழுத்தாளர்களின் படைப்புகளை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டு அவர்களை வளர்த்தவர் சிற்பி ஐயா. இலங்கைத் தமிழ் சஞ்சிகை உலகின் ஜாம்பவானாகவும் அவர் விளங்கினார்.

58 ஆண்டுகளாக அவரது எழுத்துக்கள் தொடர்ந்தன.

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் அரசியல் மற்றும் இலக்கியப் பத்திகளை வெவ்வேறு புனை பெயர்களில் தாம் நோய் வாய்ப்படும் வரை எழுதியவர் "சிற்பி" ஐயா. தமிழ் உணர்வாளரான அவர் தமது அரசியல் சார் எண்ணக் கருக்களை எழுத்தில் காத்திரமாகப் பதித்தவர். அவரது எழுத்துக்கள் மட்டுமன்றி, மற்றவர்களை அணைத்து ஊக்குவிக்கும் பாங்கும் தனித்தன்மை வாய்ந்தவை.

அவரது இறுதிச் சடங்குகள் கந்தரோடையில் இன்று மாலை நடைபெறும். (அ)

# கைதிகளை விடுவிக்கக் கோரி மன்னாரில் இன்று கவனவீர்ப்பு

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி மன்னாரில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. சிறைக்கைதிகளின் உறவினர்கள் மற்றும் மன்னார் பிரசைகள் குழுவினர் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

மு.ப. 10 மணியளவில் குறித்த கவனவீர்ப்பு போராட்டம் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு, மன்னார் நகரத்தின் ஊடாக ஊர்வலமாகச் சென்று, மன்னார் பிரதான நகரத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதேவேளை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைவலியுறுத்திவடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியான கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# அபிவிருத்தி பயிற்சி நிலையத்தை மீளத் திறக்குமாறு கோரிக்கை

அச்சுவேலியில் உள்ள மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பயிற்சி நிலையம் மீள் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட வேண்டும் என சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச தலைவர் ச.செல்வரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சமாசத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அச்சுவேலியில் அனைத்து வசதிகளுடனான கட்டடம் ஒன்று உள்ளது. அதில் ஏற்கனவே பயிற்சி நிலையம் இயங்கிவந்தது. கைவிடப்பட்டதைத் தொடர்ந்து அதன் செயற்பாடுகள் நின்றுபோய்விட்டன. அத்துடன் அங்கு ஒரு நீர்த் தாங்கியும் உள்ளது. அந்த நீர்த் தாங்கி மீள் புனரமைப்புச்செய்யப்படவேண்டும். அதன் பின்னர் இந்தப் பயிற்சி நிலையம் திறக்கப்பட வேண்டும். இதற்கு மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் முன்வந்து உரிய நடவடிக்கைகளைச் செய்யவேண் டும். இதன்மூலம் பயனுள்ள சேவைகள் மீளக் கிடைக்கும் - என்றார்.

இது தொடர்பில் மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. டெலீசியனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இந்த விடயம் தொடர்பில் முன்னரும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்கின்றேன். குறித்த இடத்தில் ஏற்கனவே பயிற்சி நிலைய நிலம் இருந்திருக்கின்றது. குறித்த பயிற்சி நிலையத்தை மீளத்திறக்க நிதித் தேவை உள்ளது. அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுக்கிறோம்- என்றார். (ரு-10,50)

# விசேட தேவையுடையோர் சேவைக்கு புதிய அலுவலர்

யாழ்ப்பாணம், நவ. 10

விசேட தேவையுடையவர்களின் சேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்.மாவட்டச் செயலகத்தில் அலுவலர் ஒருவர் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

விசேட தேவையுடையவர்கள் தங்களது சேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரச அலுவலகங்களை அ[illegible]கும்போது இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இதனை நிவர்த்தி செய்வதற்காக, விசேட தேவையுடையவர்களின் மொழி தெரிந்த (சைகை மொழி) அலுவலர் ஒருவர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த உத்தியோகத்தர் விசேட தேவையுடையவர்கள் என்ன சேவைகளைப் பெற விரும்புகின்றனரோ அதற்குரிய சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வார் என்று அரச அதிபர் குறிப்பிட்டார். மாவட்டச் செயலகத்தின் வரவேற்பாளர் பிரிவில் குறித்த உத்தியோகத்தர் கடமையில் இருப்பார்என்றும்அரசஅதிபர்நா.வேதநாயகன் தெரிவித்தார். (ரு-5)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வீட்டுத் திட்டத்தில் வீடு வழங்க உத்தரவு

## கல்முனை மேல் நீதிமன்றம் பிறப்பித்தது

அம்பாறை, நவ.10

சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த முஸ்லிம் பெண்மணி ஒருவருக்கு மருதமுனை சுனாமி வீடமைப்புத் திட்டத்தில் வீடு ஒன்றை ஒதுக்கிக் கொடுக்குமாறு அம்பாறை மாவட்ட அரச அதிபருக்கு உத்தரவிட்டு, கல்முனை மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

குறித்த பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்மணி தாக்கல் செய்த உறுதிகேள் எழுத்தாணை வழக்கு விசாரணைக்கென பிரதம நீதியரசரால் விசேட நியமனம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இடரில் பாதிக்கப்பட்ட குறித்த முஸ்லிம் பெண்மணிக்கு வீடு ஒன்றைத் திருத்தி அமைத்துக்கொள்வதற்காக அம்பாறை கச்சேரியால் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதுடன் அதில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வீடு திருத்தப்படவில்லை என்ற காரணத்தால் மிகுதித் தொகை வழங்கப்படாது நிறுத்தப்பட்டது.

இந்தக் கால கட்டத்தில் மருதமுனையில் மீரிகாவத்தை எனும் பெயரில் சுனாமி வீடமைப்புத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டதால் இதில் பாதிக்கப்பட்ட தனக்கு ஒரு வீட்டைத் தருமாறும், வீடு திருத்தவெனத் தரப்பட்ட ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாவையும் தான் திருப்பித் தருவதாகவும் குறித்த பெண் அரச அதிபருக்குச் செய்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து அம்பாறை மாவட்ட அரச அதிபர் தன்து வீடமைப்பு விடயத்தில் விடுத்திருந்த கட்டளையை இரத்துச் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறும் தனக்கு மருதமுனை சுனாமி வீடமைப்புத் திட்டத்தில் ஒரு வீட்டை வழங்குமாறும் அரச அதிபருக்கு உத்தரவிடுமாறும் கோரி குறித்த பெண்மணி கல்முனை மேல் நீதிமன்றத்தில் உறுதிகேள் எழுத்தாணை வழக்கு ஒன்றை தாக்கல் செய்து விசாரணை நடைபெற்று வந்தது.

முன்னர் கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் பிரதம நீதியரசரின் விசேட நியமனத்தின் பேரில் இந்த வழக்கு விசாரணைக்கென நியமிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கினார்.

அகில உலக பொருளாதார, சமூக, கலாசார மனித உரிமைகள் சட்டத்தை 1980 இல் இலங்கை ஏற்றுள்ளதுடன் அதில் 11 ஆவது சரத்து வீடமைப்புத் திட்டங்கள் குறித்த உரிமைகள் பற்றிக் கூறுகின்றது எனத் தீர்ப்பின் போது தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன்.

இலங்கை உச்ச நீதிமன்றத்தீர்ப்பின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சமமான நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

குறித்த பெண்மணி சுனாமி இடரில் பாதிக்கப்பட்டவர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், அவரது விடயத்தில் அம்பாறை மாவட்ட அரச அதிபரின் தீர்மானம் இயற்கை நீதிக் கோட்பாட்டுக்கு முரணானது, சர்வதேச சட்டத்துக்கு முரணானது எனவும் சுட்டிக் காட்டிய நீதிபதி இளஞ் செழியன் - மருதமுனை சுனாமி வீடமைப்புத் திட்டத்தில் குறித்த முஸ்லிம் பெண்மணிக்கு வீடு ஒன்றை ஒதுக்கிக் கொடுக்குமாறு அரச அதிபருக்கு உத்தரவிட்டுத் தீர்ப்பை வழங்கினார்.

அதேவேளை குறிப்பிட்ட பெண்மணி தான் பெற்றுக்கொண்ட ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவையும் திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்திருந்தார். (ரு-30)

# மருந்துக் கலவையாளர் பதவிக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

வடக்கு மாகாண வைத்திய சாலைகளில் வெற்றிடமாகக் காணப்படும் மருந்துக் கலவையாளர் பதவிகளுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 13 பேருக்கான பயிற்சி வகுப்பு [illegible]கடந்த ஏப்ரல் மாதம் முதல் மாகாண சுகாதாரத் திணைக் களக் கட்டடத்தில் ஆறு மாதங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. குறித்த ஆறு மாதப் பயிற்சியை முடித்தவர்கள் தற்போது வைத்தியசாலைகளுக்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் பரீட்சை நடைபெற்று, மூன்று மாத உள்ளகப் பயிற்சியின் பின்னர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை-ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மேலும் 25 பேருக்கும் பயிற்சி மருந்துக்கலவையாளர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவர்களும் பயிற்சிகளை முடித்து வெளியேறியதும் மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துக்கலவையாளர்கள் பற்றாக்குறை குறையும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை- தற்போது மருந்துக் கலவையாளர் தரத்தில் பணிபுரியும் பலர் மருந்தாளர் பதவிகளுக்குரிய தகைமைகளைப் பெற்றுள்ளதால் அவர்களும் பதவியுயர்வு வழங்கப்பட்டு வைத்தியசாலைகளுக்கு மருந்தாளர்களாக நியமிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாகாண வைத்தியசாலைகளில் மருந்தாளர்கள் மருந்துக் கலவையாளர்கள் பற்றாக்குறையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். பல வைத்திய சாலைகளில் பயிற்றப்பட்ட சிறு பணியாளர்கள் மருந்துக் கலவையாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். (ரு-9)

# பெய்து வரும் கடும் மழையால் நெற் செய்கை பெரும் அழிவு

## நட்டஈடு வழங்குமாறு குமிழமுனை விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 10

ஓட்டுசுட்டான் குமிழமுனை பகுதியில் 800 ஏக்கர் பெரும் போக நெற் பயிர் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளது என்றும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை எனவும் அந்தப் பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

எனினும் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கமலநல சேவைகள் திணைக்கள அதிகாரி குறித்த இழப்புகள் தொடர்பான விவரங்கள் தம்மால் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளதாவது–

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட குமிழமுனை பகுதியில் காலபோக நெற்பயிர்ச் செய்கை மேற்கொண்ட 800 ஏக்கர் வரையிலான நெற்செய்கை கடந்த சில நாள்களாக பெய்த அடைமழை காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து அழிவடைந்துள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு அறிவித்த போதும் எவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு ஏக்கருக்கு 8ஆயிரம் ருபா வீதம் 8லட்சத்திற்கும் அதிகமாக பணம் செலவிடப்பட்டுள்ளது. அதற்கான நட்ட ஈட்டை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்று தெரிவித் தனர்.

இது தொடர்பாக கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி கந்தசாமியை தொடர்புகொண்டு கேட்டபோது;

விவசாயிகளுடைய வயல் நிலங்கள் வெள்ளத்தால் அழிந்துள்ளன. தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கால் பல வயல் நிலங்களின் பயிர்கள் அழிவடைந்துள்ளன. இது தொர்பான தகவல்களைச் சேகரித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். இனியும் பயிர்கள் அழிவுகளை எதிர் நோக்கும். எனவே எல்லாவற்றையும் தொகுத்துத்தான் மாவட்ட செயலகத்துக்கு அனுப்ப முடியும். அவர்கள் தான் முடிவுகளை மேற்கொள்வார்கள். நட்டஈடு வழங்கப்படுமா என்று தெரியாது. ஆனால் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்படும். – என்றார். (ற-21, ரி7)

# மேய்ச்சல் தரவையில்லாததால் கால்நடை வளர்ப்போர் சிரமம்



முல்லைத்தீவு, நவ.10

முல்லைத்தீவு துணுக்காயின் கோட்டைக் கட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களின் கால்நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சல் தரவையில்லாததன் காரணமாக பெரும் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

தற்போது காலபோக நெற்செய்கை இரு கிராமங்களிலும் மேற் கொண்டுள்ளதன் காரணமாக கால்நடைகளை எந்த இடத்தில் மேயவிடுவதென்ற நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. நீண்ட தூரங்களிலுள்ள காடுகளில் மேய்ச்சலில் ஈடுபடுத்தவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் நடத்தப் பட்ட கூட்டங்களில் மேய்ச்சல் தரவைக்கான இடங்களை அடையாளப்படுத்தித் தருமாறு மேற்படி கிராமங்களின் கால்நடை வளர்ப்பாளர்கள் விடுத்தகோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்று கால்நடை வளர்ப்போர் தெரிவித் தனர்.

இதன்காரணமாக, தற்போதும் கால்நடை வளர்ப்பாளர்கள் தங்களுடைய கால்நடைகளை வளர்ப்பதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பில் முக்கியமான கிராமங்களாகும். (ற)

# ஐ.நா. குழுவினர் மன்னார் பயணம்

மன்னார், நவ.10

காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் ஐ.நா சபையின் செயற்குழுவின் பிரதிநிதிகள் நாளை மன்னார் செல்லவுள்ளனர்.அவர்கள் மன்னாரில் கீரி ஞானோதயம் மண்டபத்தில் காணாமல்போனோர்களின் உறவினர்களை சந்திக்கவுள்ளதுடன் அவர்களுடன் கலந்தரையாடவுமுள்ளனர்.

இந்தச் சந்தின்பின்போது காணாமல்போனோர் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தபடவுள் ளது. ஐந்து நாள் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள குறித்த ஐ.நா செயற்குழு இலங்கையின் பலமாகாணங்களுக்கும் நேரில் சென்று காணாமல் போனோர் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். (ற)



*தீபாவளியை முன்னிட்டு பட்டாசு விற்பனை சூடு பிடித்துள்ளது என்று பட்டாசு வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை பட்டாசு விற்பனை குறைவுதான் என்று கூறும் அவர்கள் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழையே அதற்குக் காரணம் என்றும் தெரிவித்தனர். ஆயினும் மக்கள் ஆர்வத்துடன் பட்டாசுகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-10)*

# வழமைக்குத் திரும்பின யாழ்.பெருமாள் கோவில் பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது. கடந்த சில மாதங்களாக இந்தியப் பட்டாச்சாரியார்களால் வைஷ்ணவ ஆகம முறைப்படி பூசைகள் நடைபெற்று வந்தநிலையில் மீண்டும் கடந்த சனிக்கிழமை காலை 6.45 மணிப் பூசையுடன் சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ இ.ரமணீதரக் குருக்களின் தலைமையில் பூசைகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பூசை செய்து வந்த இந்திய பட்டாச்சாரியார்கள் ஆலயத்தை முன்பிருந்த குருக்களிடம் பூசை நடவடிக்கைகளை ஒப்படைத்து விட்டுத் இந்தியா திரும்பியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# கூரை பிரித்து பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.10

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் கடையின் கூரை வழியாக இறங்கிய திருடர்கள் அங்கிருந்து 5 மூடை சீனி, மா மூடைகள், தீப்பெட்டிகள் உட்பட பலபொருள்களையும் அங்கிருந்த பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு வரணி சந்தையில் உள்ள வர்த்தக நிலையத்தில் நடந்துள்ளது.

கொடிகாமம்– பருத்தித்துறை வீதியின் அருகே உள்ள கடையில் தீபாவளி வியாபாரத்துக்காக பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு கடையினுள் அடுக்கப்பட்டிருந்தன என்றும் இரவு ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் கடையின் கதவைத் திறந்து வாயில் வழியாக பொருள்களை எடுத்து வாகனத்தில் எற்றிச் சென்றிருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-9)

# மருந்து கலவையாளர் பதவிக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

சாவகச்சேரி, நவ.10

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் வெற்றிடமாகக் காணப்படும் மருந்துக் கலவையாளர் பதவிகளுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 13 பேருக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் மாகாண சுகாதாரத் திணைக்களக் கட்டடத்தில் ஆறு மாதங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. குறித்த ஆறு மாதப் பயிற்சியை முடித்தவர்கள் தற்போது வைத்தியசாலைகளுக்குப் பயிற்சிக்காக அனுப்பப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் பரீட்சை நடைபெற்று, மூன்று மாத உள்ளகப் பயிற்சியின் பின்னர் நியமனங்கள் வழங்கப் படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மேலும் 25 பேருக்கும் பயிற்சி மருந்துக் கலவையாளர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவர்களும் பயிற்சிகளை முடித்து வெளியேறியதும் மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து கலவையாளர்கள் பற்றாக்குறை குறையும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தற்போது மருந்து கலவையாளர் தரத்தில் பணிபுரியும் பலர் மருந்தாளர் பதவிகளுக்குரிய தகைமைகளைப் பெற்றுள்ளதால் அவர்களும் பதவியுயர்வு வழங்கப்பட்டு வைத்தியசாலைகளுக்கு மருந்தாளர்களாக நியமிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# கழுதைகளின் நடமாட்டத்தால் மன்னாரில் மக்கள் அசௌகரியம்

மன்னார், நவ.10

மன்னாரில் கழுதைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளளோடு மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில் கழுதைகள் வேகமாக ஓடித் திரிவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகமான கழுதைகள் காணப்படுகின்றன. குறித்த கழுதைகள் மன்னார் நகர் பகுதியில் ஒன்றோடு ஒன்று சண்டை பிடிப்பதோடு அதி வேகமாக ஓடுகின்றன. குறித்த கழுதைகளின் தாக்குதல்களுக்கு பாதசாரிகள் உள்ளாகுவதோடு, விபத்துக்களும் ஏற்படுகின்றன.

மன்னாரில் உள்ள கழுதைகளைப் பராமரிப்பது தொடர்பாக மன்னாரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று வெளிநாட்டுப் பணத்தைப் பெற்று நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்ற போதும் உரிய முறையில் கழுதைகள் பராமரிக்கப்படுவதில்லை என மன்னார் மக்களும் சமூக ஆர்வலர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது மன்னார்ப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான கழுதைகள் காணப்படுகின்றன. எனவே குறித்த கழுதைகளைப் பராமரிக்க உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் குறிப்பாக கழுதைகளின் தாக்குதல்களில் இருந்து மக்களை பாதுகாக்க அதிகாரிகளும், மன்னார் நகர சபையும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# ஊழல் மோசடியாளருக்கு கருணை காட்டமாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரிபால திட்டவட்டம்

கொழும்பு. நவ.10
ஊழல், மோசடிக்காரர்கள் மற்றும் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடும் எவருக்கும் கருணை காட்டமாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டம் லக்கலை பொலிஸ்மைதானத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இன்று அனைவரும் இணைந்த அரசாங்கமாக முன்னோக்கிச் செல்கின்றோம். ஊழல் மோசடிகள், சட்டவிரோதமான செயற்பாடுகள் அனைத்தையும் இல்லாதொழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்கும்.

அவன்கார்ட் பிரச்சினை தற்போது பூதாகரமாக உருவெடுத்துள்ளது. எனவே இப்பிரச்சினை உட்பட ஊழல் மோசடிகள் மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நியாயமானதாகவும், நீதியானதுமான விதத்தில் இடம்பெற வேண்டும்.



இன்று எவர் எந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தபோதும் நாட்டை கட்டியெழுப்புவதற்காக சிறி லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து ஆட்சியை உருவாக்கியுள்ளன. இதுவே அபிவிருத்திக்குச் சிறந்த அடித்தளமாகும் – என்றார். (ற)



கோட்டை நாக விகாரையின் விஹாராதிபதியும், சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவருமான மறைந்த மாதுளுவாவே சோபித தேரரின் பூதவுடல் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. கோட்டை நாக விகாரையில் அன்னாரின் உடலுக்கு பொது மக்கள் இறுதி மரியாதை செலுத்தினர். உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த மாதுளுவாவே சோபித தேரர் நேற்றுமுன் தினம் சிங்கப்பூரில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றிக் காலமானார். (ற)

# சோபித தேரர் குரல் ஓய்ந்தமை நாட்டுக்குப் பெரும் இழப்பு

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, நவ.10
சமூக நீதிக்காகவும், நல்லாட்சிக்காகவும் உரத்து ஒலித்த மாதுளுவாவே சோபித தேரரின் குரல் ஓய்ந்தமை தேசத்துக்குப் பேரிழப்பு என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

தேரரின் மறைவையொட்டி அந்த முன்னணிவிடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

மாதுளுவாவே சோபித தேரரின் இழப்பு மிகுந்த கவலையை அளிக்கிறது. நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இதனை சம்பிரதாயபூர்வமான அனுதாபச் செய்தியாகக் கருதவில்லை. அதனையும்தாண்டி, நீதிக்கான போராட்டத்தின் சக பயணி ஒருவரை இழந்து விட்டோம் எனும் வலியையும் வேதனையையும் ஆழமாக உணர்கிறோம்.

இலங்கையில் சமூக நீதியையும் நல்லாட்சியையும் நிலை நிறுத்துவதற்காகவும், ஜனநாயக மீட்புக்கும், அதிகார துஷ்பிரயோகத்தை முறியடிப்பதற்குமான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்துக்கு தலைமை வழங்கிய மகத்தான ஆளுமை அவர். கடந்த பல வருடங்களாக அவரது தலைமையில் இயங்கிய சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் செயலூக்கமிக்க பங்காளியாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இருந்து வருகிறது. மரியாதைக்குரிய சோபித தேரர் எம் மீது தனிப்பட்ட முறையில் மதிப்பும் அன்பும் கொண்டிருந்தார். அப்படியான ஒரு நல்ல நண்பரை இழந்து விட்டோம். இந்த இழப்பை ஈடு செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியே.

இந்த நாடு மிகப் பெரிய சவால்களை எதிர்கொண்டிருந்த நெருக்கடி மிக்க தருணத்தில், மரியாதைக்குரிய தேரர் ஆற்றிய துணிகரமான, காலப் பொருத்தம் மிக்க அர்த்தபூர்வமான பங்கையும் பணியையும் வரலாறு அழுத்தமாகப் பதிவு செய்யும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சமூக நீதியையும் நல்லாட்சியையும் நிலை நிறுத்துவதற்கான போராட்டத்தில் எப்போதும் எவருக்கும் அஞ்சாமல் துணிந்து குரல் எழுப்பிய அசைக்க முடியாத ஆளுமை அவர்

பாரபட்சம், பக்கச் சார்பின்றி எல்லாச் சமூகங்களையும் எல்லாத் தரப்பினரையும் அரவணைத்து செயற்பட்ட, இந்த நாட்டின் பன்மைத் தன்மையை– குறிப்பாக சிறுபான்மைச் சமூகங்களின் உள்ளக் கிடக்கைகளை – புரிந்து செயற்பட்ட அவரது மனவிசாலத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மனதார மெச்சுகிறது – என்றுள்ளது. (ற-10)

# நல்லாட்சியை உருவாக்குவதற்கு பாடுபட்டவர் மாதுளுவாவே தேரர்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் இரங்கல்

கொழும்பு, நவ.10
இலங்கையில் ஊழலும், மோசடியும் அற்ற நல்லாட்சி உருவாக வேண்டுமென்று அயராது உழைத்த கோட்டே நாக விஹாரையின் பிரதம குரு மாதுளுவாவே சோபித தேரரின் மறைவு தேசிய ஐக்கியத்துக்கும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்குமான முயற்சியில் இடைவெளியொன்றை ஏற்படுத்தியுள்ளது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மாதுளுவாவே சோபித தேரரின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில்மேலும்தெரிவித்துள்ளதாவது–

கோட்டே நாகவிஹாரையின் பிரதம குருவும் சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவருமான மாதுளுவாவே சோபித தேரர், சிங்கப்பூரில் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைந்தேன். இந்த ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நாட்டில் மலர்ந்த நல்லாட்சிக்கு வழி கோலியவராக மறைந்த தேரர் மதிக்கப்படுகின்றார். அத்துடன் நான்கு தசாப்தங்களாக இந்நாட்டு மக்களுக்கு நேர்மையான ஆட்சி மற்றும் சிறப்பான சமூகக்கட்டமைப்பு என்பவற்றின் அவசியத்தை அவர் வலியுறுத்தி வந்திருக்கின்றார். அநீதிகளுக்கெதிராக அவர் வீதியில் இறங்கிப் போராடியிருக்கின்றார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய தெளிவான விளக்கம் அவருக்கு இருந்தது. அன்னாரிடம் நாம் அவ்வப்போது உரிய ஆலோசனைகளைப் பெற்று வந்துள்ளோம். அண்மையில் நாம் அவருடன் கோட்டே நாக விகாரையில் நடத்திய கலந்துரையாடலின் போது நல்லாட்சி மலர்ந்தும் கூட, அதனால் எதிர்பார்க்கப்படும் அரசியல் மாற்றங்கள் போதியளவு ஏற்பட்டதாக தெரிவில்லையென எங்களிடம் அவர் விசனம் தெரிவித்தார். நோய் வாய்ப்பட்டு அறுவைச் சிகிச்சைக்கு ஆளாகியிருந்த மறைந்த தேரரின் உடல் நலனில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அதிக அக்கறை செலுத்தி வந்தனர்.

நாட்டில் பொதுவாக் சிறுபான்மை மக்களுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் எதிராக சிங்கள பௌத்த தீவிர இனவாத சக்திகள் சில தலைதூக்கியுள்ள இன்றைய காலகட்டத்தில் சோபித தேரர் போன்ற நேர்மையாகச் சிந்தித்துச் செயற்படும் சமய குருமாரின் நடு நிலையான அணுகுமுறை பெரிதும் மெச்சத்தக்கது – என்றுள்ளது. (ற-10)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருள் விநியோக மோசடி



கொழும்பு, நவ.10
அம்பாந்தோட்டை துறைமுக கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகளில் பெரியளவிலான மோசடி இடம்பெற்றுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் எரிபொருள் களஞ்சியத்தை பார்வையிடச்சென்ற அமைச்சர் அர்ஜுனரணதுங்க, பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற இந்த மோசடிகளால் அரசுக்கும் 19.9 மில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# பிரதமரின் பொருளாதார கொள்கை புரட்சிகரமானது

## பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ.10
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ள இடைக்கால பொருளாதாரக் கொள்கை அண்மைக் காலத்தின் மிகச் சிறந்த புரட்சி கரமான கொள்கை என பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரி வித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பொருளாதாரக் கொள்கையா னது மூன்றாம் தலைமுறைக்கான மிக சிறந்த பொருளாதார கொள்கை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக உயர்ந்த கேள்வியுடன் சர்வதேச சந்தையில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நகரங்கள் மற்றும் சிறிய நகரங்கள் என்பன எவ்வாறு நடுத்தர வர்க்க மக்களின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்றன என்பது தொடர்பில் இந்தக் கொள்கை சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் கூட்டுறவு சங்க முறை நடைமுறைப்படுத்தப் பட்டாலும், அது அரசியல் தாக்கத்தின் காரணமாக அசுத்தமடைந்துள்ளாக குறிப்பிட்ட பிரதி அமைச்சர், அவற்றில் விரைவில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# சந்திரிகாவின் ஓய்வூதியத்தை அதிகரிக்க மறுத்தார் மகிந்த!

கொழும்பு, நவ.10
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஓய்வூதியப் பணமாக 25 ஆயிரம் ரூபாவையே பெற்றுக்கொண்டேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் புதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் அது 98 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சம்பளப் பணமாக 25 ஆயிரம் ரூபாவை முதன்முதலில் 1994ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டேன். அந்தத் தொகையில் எவ்வித அதிகரிப்பும் 2005 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எனது ஓய்வுதியப் பணத்தை அதிகரிக்கக் கோரி பல கடிதங்கள் அனுப்பிய போதும் அவை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவால் நிராகரிக்கப்பட்டன. எனினும் தற்போதைய ஜனாதிபதியினால் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது– என்று குறிப்பிட்டார். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன் மடங்கு அதிகரிக்கும். புத்திரர் விருப்பம் அறிந்து நிறை வேற்று வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**இடபம்:** நண்பரின் தேவையறிந்து உதவி செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் கூடும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்பர்.

**மிதுனம்:** சிறிய விடயத்துக்கும் அதிக முயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் வளர்ச்சி ஏற்படும். ஆரோக்கிய விடயத்தில் கவனம் தேவை. பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்கள்.

**கடகம்:** நேர்மை மனம் படைத்தவராகச் செயற்படுவீர்கள். நீண்ட நாள் முயற்சி இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்தி தரும்; இலாபம் உயரும். பெண்கள் குடும்ப நலனுக்காக எதையும் தியாகம் செய்வர்.

**சிங்கம்:** மதிநுட்பமுடன் செயற்பட்டு எதையும் சாதிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க வழிவகுப்பர். பெற்றோர் உடல்நலனுக்காக மருத்துவச் செலவு ஏற்படும்.

**கன்னி:** பேச்சில் மங்கலத் தன்மை நிறைந்திருக்கும். அன்றாடப் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும். உடல்நிலையிலும், மனதிலும் புத்துணர்வு ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வெளியூர்ப் பயணம் பயனறிந்து மேற்கொள்வது நல்லது. பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கைவந்து சேரும்.

**விருச்சிகம்:** அக்கம்பக்கத்தினர் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள், உறவினர்களுடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவர்.

**தனுசு:** எல்லோரிடமும் நட்புப் பாராட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்.

**மகரம்:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். இலாபம் கூடும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். பிள்ளைகளின் செயற்பாடு மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** மனக் குழப்பம் நீங்கித் தெளிவு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபட்டு மகிழ்வர். வாகனப் போக்குவரத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**மீனம்:** இலட்சிய நோக்குடன் செயற்படத் தொடங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

# இளம் தலைமுறைக்காக வருகின்றது ஸ்லெய் பெல்ஸ்




தற்போது வளர்ந்துள்ள தொழில் நுட்பத்தின் பிரகாரம் திரைப்படங்கள் பிரமாண்டத்தை வெளிப்படுத்துபவையாக வெளிவருகின்றன. இவற்றுக்கெல்லாம் அடிப்படையான ஆரம்ப காலச்சினிமாவரலாற்றில்ஒலிஅமைப்புக்கள் வழங்கப்படாத திரைப் படங்கள் முக்கியமானதாக காணப்பட்டன. இவற்றை அறியாதபலர் இன்றைய காலகட்டத்தில் சினிமாவுக்கு ,ரசிகர்களாகஉள்ளனர். தனது நினைவைப் புத்தூட்டும் வகையில் 87 ஆண்டுகளின் பின்னர் இந்தவகைத் திரைப்படம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஊமைப் படங்களின் காலகட்டத்தில் திரைக்கு வந்த டிஸ்னியின் அனிமேன் திரைப்படம் சுமார் 87 ஆண்டுகளுக்கு பிறகு பிரித்தானியத் திரைப்பட நிறுவனத்தின் ஆவண காப்பகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

'ஸ்லெய் பெல்ஸ்' என்ற இந்தப்படம் டிஸ்னி யால் உருவாக்கப்பட்ட மிக்கி மவுஸுக்கும் முன்னோடியான அஸ்வால்ட்'த லக்கி ரேபிட்'இனை முக்கிய கதாபாத்திரமாகக் கொண்டுள்ளது. ஆறு நிமிடப் படமான இது இத்தனை ஆண்டுகளாக திரைப்படச்சுருளில் மிஞ்சியிருப்பது ஆச்சரியமளிக்கும் விடயமா கும். ஸ்லெய் பெல்ஸ்திரைப்படம்பிரித்தானியத்திரைப்பட நிறுவனத்தின் திரையரங்கில் எதிர்வரும் மார்கழி மாதம் 12 ஆம் திகதி திரையிடப்படவுள்ளது. ஊமைப்படங்களின் காலகட்டமான 1928ஆம்ஆண்டு வெளிவந்தஸ்லெய்பெல்ஸ்,டிஸ்னியின்படைப்புகளின் ஆரம்பகட்டத்தை எமது கண்முன் காண்பிக்கவல்லது. அந்தக்காலகட்டத்தில் இருந்த தொழில்நுட்பத்தைக் கொண்டு, தனது படைப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்த டிஸ்னியின் ஒப்பில்லாஆற்றல்,ஸ்லெய்பெல்ஸின்மூலம்இளம்தலைமுறைக் கலைஞர்களுக்கு தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.








## பேஸ் புக்கில் பிடித்தவை...





தூக்கத்தின் மகிமையை விளக்கும் நாய்க்குட்டிகள். கற்றுக் கொள்ளுங்கள் மக்களே. உங்கள் நித்திரைக்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.



புது விதமான வாழைக்குலை. மரமே வித்தியாசத்தை விரும்புது.







# தென்மராட்சியில் தென்னை மரங்கள் மீள்நடுகைத் திட்டம் நாளை ஆரம்பிப்பு

சாவகச்சேரி,நவ.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் அழிக்கப்பட்ட பகுதிகளில் தென்னை மீள் நடுகைத் திட்டம் பிரதேச செயலகத்தினால் நாளை புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. பிரதேசத்தில் இறுதியாக மீள்குடியமர்வு இடம்பெற்ற எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய பகுதிகளில் முதற்கட்டமாக இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. திட்டத்தின்முதற்கட்டமாக தென்னை மரங்கள் அழிக்கப்பட்டதால் பற்றைகளாகக் காணப்படும் காணிகளைத்துப்புரவுசெய்யும்பணிகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளன. கடந்த மாதம் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் இந்தப் பகுதிக்குப் பயணம் செய்து அனைத்துப் பகுதிகளையும்பார்வையிட்டதுடன், அங்குள்ள மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார். அவரது பணிப்பின்பேரில் கடந்த வாரம் பிரதேச செயலக உயர் அதிகாரிகள் உட்பட பெருமளவு அலுவலர்கள் மழையின் மத்தியில் அனைத்து இடங்களையும் பார்வையிட்டு பதிவுகள்மேற்கொண்டு யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அறிக்கை வழங்கியுள்ளனர். இதனையடுத்து தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு பற்றைகளாகக் காணப்படும் காணிகள் துப்புரவு செய்யப்படவுள்ளன. தென்னை மர மீள் நடுகைக்காக ஒரு ஏக்கருக்குதலா 28 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் தினமும் ஆயிரக்கணக்கான தேங்காய்கள் இந்தப் பகுதிகளிலிருந்து தென்மராட்சி, வடமராட்சி சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதுண்டு. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ஐந்துக்கும் மேற்பட்ட பாரவூர்திகளில் தோட்டங்களில் பறிக்கப்படும் தேங்காய்கள் கொண்டு செல்லப்பட்டு வந்தன. இந்தப்பகுதிகளிலிருந்துகொண்டு செல்லப்பட்ட தேங்காய்களால் யாழ்.குடாநாட்டின் 25 வீத தேங்காய்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, கரம்பகம் ஒட்டுவெளி போன்ற பகுதிகளில் ஏக்கர் கணக்கில் காணப்பட்ட தென்னை மரங்கள் போரின் போது முழுமையாக அழிந்தமையும், மீளக்குடியமர்ந்த மக்கள் தமது தேவைகளுக்குக் கொடிகாமம், சாவகச்சேரிச் சந்தைகளிலிருந்து தேங்காயைக் கொள்வனவு செய்து கொண்டு செல்வதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-9)

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி,நவ.10

வடமாகாண சபையின் உள்ளூராட்சித் திணைக்களத்தில் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் சிவில் படவரைஞர் பதவிகளின் பயிலுநர் தரங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களை, இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் சிவில் படவரைஞர் சேவை வகுப்பு 11 பிரிவு 'ஆ' பதவிகளுக்கு நியமனம் வழங்கு வதற்கான தகைமை காண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் கோரப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-9)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம்,நவ.10

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் இளம் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சை 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் நடைபெறவுள்ளதாகவும் விண்ணப்பங்களை இம்மாதம் 30ஆம்திகதிக்கு முன்னர் 'சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தர் இல.153, கே.கே.எஸ். வீதி,கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் செயலாளர் க.நித்தியதசீதரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி6)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.10

சிறுப்பிட்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் மொழித் திறன் விருத்தி முகாம்,சின்னம் சூட்டல் வைபவம், மாணவர் கருத்துப் பெட்டி வைத்தல் ஆகிய நிகழ்வுகள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ் சற்குணராசாவும், விசேட விருந்தினர்களாக போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் அலுவலர் எஸ்.ஜ.தனுக பிரசன்ன, சிறுப்பிட்டி இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி.க.சசிகலா, சிறுப்பிட்டி கிராமஅலுவலர் செ.கார்த்தீபன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ-ரி6)

# குண்டும் குழியுமாக மானிப்பாய் சந்தை

யாழ்ப்பாணம்,நவ.10

பருவமழையைத் தொடர்ந்து மானிப்பாய் மத்திய சந்தை வளாகம் குண்டும் குழியுமாகவும், சேறும் சகதியுமாகவும் காட்சியளிக்கின்றது. இதனால் அங்கு செல்லும் மக்கள் பெரும் சிரமங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகின்றனர். வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சந்தைகளில் மானிப்பாய் மத்திய சந்தை முக்கிய இடம் வகிக்கிறது. இந்தப் பிரதேசத்தில் ஏழு சந்தைகள் இருக்கின்றபோதிலும், பிரதேச சபைக்கு மானிப்பாய் மத்திய சந்தையிலிருந்தே கூடுதலான வருமானம் கிடைக்கின்றது. சிறிய இடத்தில் இடநெருக்கடிக்கு மத்தியில் அமைந்துள்ள சந்தை வளாகத்தில் மரக்கறி, கடலுணவு விற்பனை நிலையங்களுடன்பலவர்த்தகநிலையங்களும் அமைந்துள்ளன. அத்துடன் அங்காடி வியாபாரிகளும் நாளாந்தம் வந்த வண்ணமுள்ளனர். இதனால் தினசரி பல நூற்றுக்கணக்கான மக் கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்தச் சந்தையை நாடி வருகின்றனர். இந்த நிலை யில் குண்டும் குழியுமாக இருக் கும் இந்தச்சந்தைவளாகத்தில்மழை வெள்ளம் தேங்கி நிற்பதால், மக்கள் நடமாட முடியாமல் திண்டாடுகிறார்கள். குறிப்பாக மரக்கறி வாங்கும் மக்கள் மழையில் நனைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள மக்களும் அங்குள்ள வியாபாரிகளும் இந்தச் சந்தைக்கு வரும் மக்களின் நலன்கருதி உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையைக் கோரியுள் ளனர்.

(ஐ-115)

## பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

யாழ்ப்பாணம்,நவ.10

புத்தூர் கிழக்கு ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றன.

புதிய நிர்வாக சபையின் தலைவராக ப.செந்தூரனும், செயலாளராக து. முரளிதரனும், பொருளாளராக வி.தினேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டதுடன் பதினொரு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-288)

## மழையால் அங்காடி வியாபாரம் பாதிப்பு

சாவகச்சேரி,நவ.10

தொடர்ந்து பெய்து வரும் மழையால் தென்மராட்சிப் பிர தேசத்தில் தீபாவளி வியாபாரத்துக்காகத் தென்னிலங்கையிலிருந்து உடுபுடவை களுடன் வருகை தந்த அங்காடி வியாபா ரிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். தொடர் மழை யால் பொதுமக்கள் வருகை தராததால் வியாபார நிலையங்கள் திறக்கப்படாமல் இருந்ததைக் காண முடிந்தது. தற்போது மழை தொடருமென எதிர்வு கூறப்படுவதால் சாவகச்சேரி நகரசபையினர் கடந்தஒருவருடமாக மூடி வைத்திருந்த கட்டடத்தை அங்காடி வியாபாரிகளுக்கு வழங்கியுள்ளனர்.

(ஐ-9)


## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
## உரும்பிராய் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள நான்கு கடைகளும், ஒரு மண்டபமும் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2015

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உரும்பிராய் உபஅலுவலக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கடைகளை 01.01.2016 ஆம் திகதியிலிருந்து நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

குறித்த கடைகளினை பல்பொருள் விற்பனை, சிற்றுண்டிச்சாலை, குளிரகம், காகிதாதிகள் விற்பனை நிலையம், புத்தகசாலை, புதினப்பத்திரிகை விற்பனை, கைத்தொலைபேசி திருத்தகம், கைத்தொலைபேசி விற்பனை நிலையம், போட்டோப்பிரதி செய்யும் கடை, பிஸ்கட் கடை, பல வகை பழவியாபாரம், மிக்சர்கடை, அழகு சாதனப்பொருட்கள் விற்பனை, புடவை விற்பனை, பாதணி விற்பனை போன்ற நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தவேண்டும்.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 11.11.2015 - 26.11.2015
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித்திகதி : 27.11.2015 மதியம் 12.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 27.11.2015 பி.ப 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் : பிரதேசசபை தலைமை அலுவலகம்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | இடம் | ஒரே தடவையில் செலுத்தும் ஆகக் குறைந்த கேள்வித் தொகை (Vat, NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக்கட்டணம் (Vat, NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இலக்கம் 1 | உரும்பிராய் சந்தை வளாகம் | 540000.00 | 10000.00 | 1000.00 |
| 02 | கடை இலக்கம் 2 | உரும்பிராய் சந்தை வளாகம் | 540000.00 | 10000.00 | 1000.00 |
| 03 | கடை இலக்கம் 3 | உரும்பிராய் சந்தை வளாகம் | 540000.00 | 10000.00 | 1000.00 |
| 04 | கடை இலக்கம் 4 | உரும்பிராய் சந்தை வளாகம் | 540000.00 | 10000.00 | 1000.00 |
| 05 | மண்டபம் | உரும்பிராய் சந்தை வளாகம் | 3840000.00 | 25000.00 | 1000.00 |

நிபந்தனைகள்

01. விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த 11.11.2015 - 26.11.2015 வரையான காலப்பகுதிக்குள் படிவத்தினை வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளவும் ஒப்படைக்க வேண்டும்.
02. விண்ணப்பிக்க விரும்புவோர் கோரிக்கைக் கடிதமும், ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
03. பூரணப்படுத்திய கேள்விப்படிவத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்** என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"**. என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும
04. மாதாந்த கடைவாடகையாக பிரதேசசபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். முதல் மாத வாடகைப்பணத்தினை அடுத்து வரும் (ஒவ்வொரு மாதமும்) 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தண்டப்பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.
05. கேள்விச் சித்திகாரராகத் தெரிவு செய்யப்பட்டவர் குறிப்பிடப்படும் திகதியில் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டு பிரதேசசபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ளவேண்டும்.
06. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
07. சபையினால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச்சான்றிதழினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.
08. சித்திகர குத்தகைகாரர் வலிகிழக்கு பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க நடந்துகொள்ள வேண்டும்.
09. மேலதிக விவரங்களை வலிகிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.நா.குமணன்
செயலாளர்,
வலிகிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.



## வீடுகள் முற்பதிவுகளுக்கு...

யாழ்.நகர் மத்தியில், ஆஸ்பத்திரி வீதியில், 5 மாடியில், 10 அதி நவீன வீடுகள், 3 படுக்கையறை, 2 குளியலறை, பெரிய வரவேற்பறை, சமையலறை, லிப்ட், 3 பரப்பு முற்றத்துடன் கட்டப்படவுள்ளது. விலை 10.5மில்லியன். முன்பதிவுக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 077 717 4511

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டில் தீவுப்பகுதி மக்கள் தவிப்பு

## யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10
மக்கள் நீண்டதூரம் குடிதண்ணீருக்காக அலையவேண்டிய நிலை தீவுப்பகுதிப் பிரதேசங்களில் உள்ளது. வறட்சிக் காலங்களில் வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் தீவுப்பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிந்தனையின் கீழ் யாழ்.மாவட்டத்தில் ஆயிரம் தொட்டிகளில் மழை நீரைச் சேமிப்பது என்ற திட்டத்தில் முதலாவது தொட்டி அமைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சரவணையில் நடைபெற்றது. வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தொடர்ந்து தெரிவிக்கும் போது: யாழ். மாவட்டத்தில் குறிப்பாக தீவகத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வடக்கு மாகாண ஆளுநர் எங்களிடம் திட்டம் தொடர்பான விவரங்களைக் கோரியிருந்தார். அவற்றை நாங்கள் வழங்கியிருந்தோம். அதற்கமைய ஆளுநர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக மழை நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டமாக இது இடம்பெறுகிறது. அதன்படி முதலில் ஐம்பது தொட்டிகள் அமைக்கப்படும். மக்கள் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். தீவகம் போன்ற வறட்சியான பகுதிகளுக்கு இவை மிகவும் பயனுள்ளதாக எனவும் தெரிவித்தார். (ஐ-7)

# விசேட தேவைக்குட்பட்டோருக்கு மலசல கூடம் அமைக்க உதவி



யாழ்ப்பாணம்,நவ.10
வடமாகாண சுகாதார அமைச்சரால் வவுனியா மாவட்டத்தில் உள்ள விசேட தேவைக்குட்பட் டோருக்கான மலசலகூடம் அமைப்பதற்குத் தேவையான நிதியைக் கையளிக்கும் முதலாவது நிகழ்வு வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலாளர் கா.உதயராஜா தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, தர்மபால செனவிரத்னா, ஜெயதிலக, இ.இந்திரராஜா, வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி மோகனதாஸ், மேலதிக பிரதேசசெயலாளர், திருமதி கண்ணன், அமைச்சின் செயலாளர், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது மலசல கூடம் அமைப்பதற்கான காசோலைகள் 37 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# 23 ஆவது நினைவு தினம்



வவுனியா,நவ.10
தமிழர் விடுதலைக் கூட்டணியின் வவுனியாத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் 23ஆவது நினைவு தினம் நேற்று அவரது நினைவு மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி அகளங்கன், ஜனாதிபதி சட்டத்தரணியும் வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான மு.சிற்றம்பலம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் சந்திரகுமார், புரட்சிக் கவிஞர் மாணிக்கம் ஜெகன், வடமாகாண சுகாதார அமைச்சின் பிரத்தியேக செயலாளர் சத்தியசீலன், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் நா. சேனாதிராசா, மற்றும் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# சர்வதேச நினைவு கூரல்

யாழ்ப்பாணம்,நவ.10
சர்வதேச நினைவு கூரல் தினத்தை முன்னிட்டு யாழ்.தென்னிந்தியத் திருச்சபை அத்தியட்சகர் ஆதீனம் அன்றைய நாளை சர்வமத நினைவாக அனுஷ்டிக்கவுள்ளது. யாழ். தென்னிந்தியத் திருச் சபையின் பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா தலைமையில் வட்டுக் கோட்டை ஆசனக் கோயிலில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்த நிகழ்வு இடம் பெறும். இந்த நிகழ்வில் பௌத்த, இந்து, முஸ்லிம் மதத் தலைவர்கள் கலந்து கொள்வர். தேவாரம், துதிப் பாடல்கள், கீர்த்தனைகள் போன்றவற்றுடன் தங்களுக்கு அன்பானவர்களின் இழப்புக்களும் நினைவு கூரப்படவுள்ளது. (ஐ-7)

# மரநடுகை மாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்குக

## கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.10
தற்போதைய மரநடுகை மாதத்தில் கூட்டுறவுச் சங்கங்களும் பயன்தரும் மரங்கன்றுகளைப் பெற்று பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு விநியோகிப்பதற்கு முன்வர வேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் கேட்டுள்ளார். கார்த்திகை மாதத்தை மரம் நடுகை மாதமாக வடமாகாண விவசாயக் கூட்டுறவு அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கமைய கூட்டுறவுச் சங்கங்களும் இந்த மரநடுகை மாதத்துக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சங்கங்கள் பயன்தரும் மரங் கன்றுகளைக் கூடுதலாகப் பெற்றுத் தமது பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு விநியோகிக்க வேண்டும். பனை தென்னை வளச் சங்கங்கள் சில கூடுதலாக தென்னம்பிள்ளைகளைப் பெற்று பணியாளர்களுக்கு விநியோகித்தும் வருகின்றன. இந்தச் சங்கங்களின் இவ்வாறான முன்மாதிரியான செயற்பாடுகளைப் பாராட்டிய ஆணையாளர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பயன்தரும் மரக்கன்றுகளைப் பெற்று பணியாளர்களுக்கு விநியோகிக்க வேண்டும். அதனைவிட சங்க வளாகங்கள் மற்றும் பொது இடங்களில் பயன்தரும் மரங்களை நட்டு வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-17)

# தமிழ்த் தினப் போட்டியில் முதலாம் இடம்

கொழும்பு,நவ.10
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் இசையும் அசைவும் – பிரிவு– 1 இல், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுவாமிநாதன் சர்மா நந்தினி முதலாம் இடத்தைப் பெற்று, தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். இதேவேளைகுறித்த மாணவி இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாவட்ட ரீதியில் நான்காம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# விபத்தில் பொலிஸார் படுகாயம்

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற தீபாவளி நிகழ்வுக்குச் சென்ற வவுனியாப் பொலிஸார் நிகழ்வு நிறைவு பெற்று திரும்பி வரும் போது இடம்பெற்ற விபத்தில் இரு பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் சிறுகாயத்துக்குட்பட்ட நால்வர் மதவாச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற தீபாவளிப் பண்டிகை நிகழ்வுக்குச் சென்ற வவுனியா பொலிஸார் நிகழ்வில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பி வவுனியா பொலிஸ் நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்த போது மதவாச்சியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ்ஸுடன் கன்ரர் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் சிக்கி இரு பொலிஸாரும் படுகாயமடைந்தனர். மேலதிக விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கரந்தன் வீதி விரைவில் திருத்தியமைக்கப்படும்

## வடமாகாண சபை நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.10
கடந்த பல வருடங்களாக புனரமைப்பு இன்றி மக்கள் பயணிக்க முடியாத நிலையில் உள்ள கரந்தன் வீதி விரைவில் திருத்தியமைக்கப்படும் என்று வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார். புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு வீதி அபிவிருத்தித் திணைக்களம் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யவுள்ளது.

சபையின் அபிவிருத்தித் திட்டத்தில் இந்த வீதி விரைவாக புனரமைப்புச் செய்யவும் உள்வாங்கப்பட்டுள்ளது. கரந்தன் சந்தியில் இருந்து ஊரெழு சந்தி வரையாக இந்தப் பிரதான வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மிகவும் சேதமாக்கப்பட்டுள்ளது. தற்போது மழை காலம் ஆரம்பித்த நிலையில் வீதி சேதமடைந்த இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர். அத்துடன் பாடசாலை செல்லும் மாணவர்கள் இந்த வீதியைப் பயன்படுத்துவதால் மழை வெள்ளத்தில் மாணவர்களின் சீருடைகள் நனைந்தும் பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகள் தமது விவசாயப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளுக்குச் செல்லும் வேளை இந்த வீதியைப் பயன்படுத்தி சிரமப்பட்டே பயணித்து வருகின்றனர். குடாநாட்டில் அனேகமான வீதிகள் புனரமைக் கப்பட்டும் இந்த வீதி ஏன் புனரமைக்கப்படவில்லை என்று விவசாயிகள் கேள்வி எழுப்புவதோடு எப்போது இந்த வீதிக்கு விமோசனம் கிடைக்கும் என்றும் அவர்கள் அங்கலாய்த்தும் வருகின்றனர். (ஐ-17)

# தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள்

## 3 வருடங்களுக்குள் திட்டம் நடைமுறையில்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கப் பணியகத்துடன் இணைந்த வகையில், உட்கட்டுமான அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்திக்கு அடுத்து வரும் மூன்றாண்டுகளில் முன்னுரிமை கொடுக்கப்படவுள்ளது. இந்தத் திட்டதை 2016 இல் இருந்து மூன்று ஆண்டுகளுக்குள் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மூன்றாண்டுகளில் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள், 2016 ஆம் ஆண்டுக்கான விசேட பாதீட்டுமதிப்பீட்டில் சமர்ப்பிப்பதற்கு மாவட்ட செயலாளர் ஊடாக விவரங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே சகல திணைக்களங்களும் தமக்கு மூன்றாண்டுகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்களின் விவரங்களை அரச அதிபர் ஊடாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் இந்த அபிவிருத்திகளை தேசிய திட்டமிடல் திணைக்களம் முன்னெடுக்கும். இந்தத் திட்டங்கள் யாவும் பின்தங்கிய பிரதேசங்களில் கிராம அபிவிருத்திகளை மையப் படுத்தியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-50)

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாக, சங்கானை மரக்கறிச் சந்தைக்கு அருகில் அமைந்துள்ள வீதியின் திருத்தப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. இந்த வீதி சங்கானை முதல் அராலி வரை செல்கின்றது. அத்துடன் வீதி அபிவிருத்தித் திணைக் களத்துக்குட்பட்ட வீதியுமாகும். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த வீதி குறிப்பிட்ட திணைக் களத்தால் புனரமைப்புச் செய்து, திருத்தப்பட்டது. ஆனால், அராலி முதல் சங்கானை குடி யேற்றத்துடன் திருத்தம் செய்யப்பட்டு, தொடர்ந்து குடியேற்றத்திலிருந்து சங்கானை மரக்கறிச் சந்தை வரை, இது வரையிலும் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. இந்த வீதியை யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மற்றும் சங்கானைக்கு வரும் பொதுமக்கள், வியாபாரிகள், நுகர்வோர் எனத் தினமும் பலர் பாவித்து வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட தூரம் வரை இந்த வீதி திருத்தப்படாததோடு, குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. குறிப்பிட்ட திணைக்களம் இந்த வீதியைத் திருத்தம் செய்து மக்களின் பாவனைக்கு உகந்ததாக மாற்றம் செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ஐ-29)

## விபத்தில் 9 பேர் படுகாயம்

ஹற்றன், நவ.10

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒன்பது பேர் கடுங்காயங்களுக்கு உள்ளாகி வட்ட வளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹற்றனிலிருந்து கொழும் புப் பகுதியை நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் கொழும்பிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றும் ஹற்றன் கொழும்பு பிர தான வீதியில் ஹற்றன் வூட் லேண்ட் பகுதியில் வைத்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் சென்ற பயணிகளில் 9 பேர் படுகாயங்களுக்குள்ளாகி வட்ட வளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர்களில் 5 பேர் மேலதிக சிகிச்சைக்காக 5 பேர் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள னர். தனியார் பஸ் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயராணி நவரட்ணராஜா



பருத்தித்துறை, பூதராயர் கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும்,லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயராணி நவரட்ணராஜா 08.11.2015 ஞாயிற்றுக்கிழமை லண்டனின் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம்-விருத்தாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம்- செல்வமணி தம்பதியரின் அன்பு மருமகளும் நவரட்ணராஜாவின் அன்பு மனைவியும் பிரியா(லண்டன்), பிரித்திகா (லண்டன்), பிரதீஷினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருள்வேல் (லண்டன்), உதயகரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காவ்யா(லண்டன்), சங்கீதன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் ஜெயராணி, சிவராசா, ஜீவராணி, இராசநாயகி, இரகுநாதன், ரங்கராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

63, Albon house
Wandsworth
London

(62198)(12..17)

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
சறோஜாதேவி சிறிதரன் (பாபு)

தோற்றம்
21.09.1963

மறைவு
14.10.2015

கடந்த (14.10.2015) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதி நிகழ்வில் கலந்து ஆறுதல் கூறி உறுதுணை புரிந்த உறவினர், நண்பர்களுக்கும், துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.11.2015) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (13.11.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இந்த அழைப்பை; அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்களும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

சண்டிலிப்பாய் றோட்,
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

(66003)(11,17)

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### அருட்சகோதரி மரிய றொசாறியோ அ.கா

அதிபர், யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

எண்ணத்தி லூறி எழுமோசை சொல்லாகி
வண்ணஎழுத்தாய் கல்வியதை மாணவர்க்கு - மாண்புடனே
கற்பித்த அருட்சகோதரியே உங்கள் ஆத்மசாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம் நாம் இன்று!

ஆண்டவன் பணிக்காய் வாழ்வதனை அர்ப்பணித்து
நீண்டநாள் பூண்டீர்கள் துறக்கோலம் - இன்று
பணிஓய்விற்கு முன்னமே துயில் கொண்டதேனோ
துயருறுகின்றோம் நாம் இங்கு!

அன்பும் பண்பும் பரிவும் பாசமும்
என்றும் மாறாத எங்கள் - அன்புச்சோதரியே
நீவிரெமைவிட்டு நீங்கினாலும் நின்நினைவுகள்
என்றும் நீங்கா எம்முள்!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை வேண்டுகின்றோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள்
பாடசாலை அபிவிருத்திக் குழு.
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

# தமிழ் மீதும் தமிழர் மீதும் அதிக பற்று கொண்டவர் பேராசிரியர் துரைராஜா

கே.ரீ.கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

**பேராசிரியர் அழகையா துரைராஜாவின் 81 ஆவது பிறந்ததினம் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

பேராசிரியர் அழகையா துரைராஜாவினது சிரார்த்த தினத்தை நினைவு கொள்வது தமிழ் சமூகத்தின் தனித்துவத்தை நினைவு கொள்வதற்கு சமமானது. உயரிய எண்ணமும் சிந்தனையும், தூரநோக்கும், நேர்த்தியான பார்வையும் கொண்ட உன்னதமான மனிதனையும் அவரது வாழ்வியல் தடத்தையும் இன்றைய சமூகத்தின் முன் நிறுத்துவது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உயரிய கடமையாகும்.அவரது 81 ஆவது பிறந்த தினமாகிய (10.11.2015) இன்று அவரையும் அவரது சேவையையும் நினைவு கொள்வது பெருமைக்குரிய அம்சமாகும்.

பேராசிரியர் அவர்களது கல்வித் தகைமை, பண்பாட்டின் பேணுகை, சேவையின் உயரிய இலட்சியம், எவரையும் இலகுவில் கவரக் கூடிய உடலமைப்பு, புன்னகைக்கும் தோற்றம் என்பதெல்லாம் எங்கள் முன்னே நாம் கண்டு கொண்ட பண்பாகவே உள்ளது. அவற்றில் எல்லாம் எவரும் கண்டறிய முடியாத தனித்துவத்தையும், மனித நேயத்தையும் கொண்டவர். அவரது இலட்சியத்தில் கலந்திருந்த பண்பாடு வாழ்வின் அடிச்சுவடுகளாக அமைந்திருந்தது. அதனைத் தமிழ் சமூகத்தின் முதலீடாகக் கொள்ள வேண்டிய இன்றைய சூழல் அவரை நன்கு உணரவும், தெளிவடையவும், புரிந்து கொள்ளவும் துணை புரிகின்றது.

பேராசிரியரது புலமைசார் வல்லமை உலகம் போற்றும் அளவுக்கு உயர்வானது. மண்ணின் பொறிமுறைக் கோட்பாட்டைத் தந்து தவியதோடு, அதனை வெளிப் படுத்தும் உத்தியையும் அதன் விளைவுகளையும் அவரது வாழ்வு முழுவதும் தடம் பதித்துச் சென்றவர். 1961 ஆம் ஆண்டு கேம்பிறிச் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்த எங்கள் பேராசிரியர் 1962 இல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் குடிசார் பொறியியல் துறையின் விரிவுரையாளரானார். அன்றிலிருந்து தனது மறைவு வரையும் தொடர்ச்சியான சேவையைப் புலமைசார் சமூகத்துக்கும் தமிழ் சமூகத்துக்கும் ஆற்றியவர். பேராசிரியரின் புலமையைக் கருத்தில் கொண்ட வோட்டலூ மற்றும் கொலம்பியப் பல்கலைக் கழகங்கள் வருகை விரிவுரையாளராக நியமனம் வழங்கின. அதனூடாகத் தனது திறமையை மெருகூட்டியதுடன் தமிழ் சமூகத்தின் பண்பாட்டையும், பெருமையையும் காக்கும் புலமையாளனாகத் தன்னை மாற்றிக் கொண்டார். அவரது வாழ்வில் இரண்டு பிரதான விடயங்கள் எவராலும் இலகுவில் மறக்க முடியாத பதிவுகளாக விளங்கின.

ஒன்று - தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் அவர் கொண்டிருந்த பற்றுதல். அதற்காக எதனையும் தாங்கும் பக்குவத்தையும் கொண்டிருந்தார். குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தராக பதவி வகிக்க வாய்ப்புக் கிடைத்த போது, அதனைச் சரியாக நேசித்ததுடன் எத்தகைய துயரிலும் அதனைச் சுமந்தார். எந்த சௌகரியமான வாழ்வையும் மனதில் கொள்ளாது எல்லாத் துயரங்களையும் சுமந்து கொண்டு சேவையைத் தந்த பெருமை பேராசிரியர் துரைராஜாவையே சாரும். அன்றைய பொருளாதாரத் தடையிலும், போர் அச்சுறுத்தலிலும் தாக்குதல் ஓசையிலும் தவறாது சேவையே உயர்வாகக் கொண்ட உன்னதமான பணியாளனாக விளங்கியவர் பேராசிரியர். நேரம் தவறாது பணிபுரியும் பக்குவம் காலை 8.30 மணிக்கு எவரைக் காணாதுவிட்டாலும் பேராசிரியரை அவரது ஆசனத்தில் காண முடியும். அது அவரது கடமையின் மீதான பற்றுதல் மட்டுமல்ல. தமிழ்ச் சமூகத்தின் மீது கொண்ட காதல் என்றும் கூறவேண்டும். எத்தனையோ வாய்ப்புக்களை உலகம் முழுவதுமுள்ள பல்கலைக்கழகங்கள் வழங்க முன் வந்த போதும், தமிழ்ச் சமூகத்துக்கு தாம் செய்ய வேண்டிய பணி என நினைத்து வாழ்ந்தவர் பேராசிரியர்.தமிழ்மக்கள்துயர்கண்டு அது தன் துயர்என உணரும்ஒருவராலேயே அவ்வாறு செயற்பட முடியும். அதனையே பேராசிரியர் ஆற்றியிருந்தார்.

பல்கலைக்கழகத்தின் பணிசார்ந்து எத்தனையோ தடவை போக்குவரத்துக் கெடுபிடிக்கும் மத்தியில் உலகம் போற்றும் புலமையாளன் கிளாலி இறங்கு துறைக் கூடாகப் பயணம் செய்திருக்கிறார். எந்தச் சுகங்களையும் அனுபவிக்காது எந்த சுகமும் இல்லாத காலத்தில் பேரவையை, மூதவையை இயக்கியதுடன் அவற்றின் மத்தியில் தனது பண்பையும், தனித்துவத்தையும், பிறர் மத்தியில் எப்படி தமிழரின் கல்வி நிறுவனம் இயங்குகின்றது என்பதையும் காட்டியவர். அவரால் தமிழ் சமூகம் இன்னும் பெருமை அடைகிறது. தமிழரின் புலமைமிக்க குணத்தை பேராசிரியர் துரைராஜாவிடம் காண முடியுமென்பதை வெளிப்படுத்தியவர். அந்தவகையில் தமிழினத்தையும் தமிழ் தேசியத்தையும் நேசித்த புலமையாளனாகப் பேராசிரியர் விளங்கினார்.



இரண்டாவது- தமிழரின் புலமை சார் பண்புகள் உயர்வடையப் பாடுபட்டார். குறிப்பாக அவரது புலமைசார் கண்டுபிடிப்பு மட்டுமென்றல்லாது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புதிய திசையில் பயணிக்கவும் அரும்பாடுபட்டார். யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை உருவாக்கவும், வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பிக்கவும், பல புதிய துறைகளை விரிவுபடுத்தவும், ஆய்வுப்புலத்தை வளர்க்கப் பல நிதியுதவிகளையும், நிதியங்களையும் உருவாக்கப் பெரும் பிரயத்தனம் செய்தார். அத்தகைய புலமைசார் பணிகளை ஆரம்பிப்பதில் முறையோடு செயற்பட்டதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது கிளைகளை வவுனியாவிலும், கிளிநொச்சியிலும் விஸ்தரிக்க முடிந்தது. தனது புலமையால் மண்ணையும் அதில் வாழ்ந்த சமூகத்தையும் நேசித்தது போல் பிறரையும் நேசிக்க வேண்டும் என்ற அவாக் கொண்டிருந்தார்.

தமிழ் மக்களின் புலமையை உருவாக்க வேண்டும் என்ற அவரது அவாவே அவரை தேசியம் மீதான ஈடுபாட்டை ஆரம்பிக்க வைத்தது. அவர் தமிழ்த் தேசியத்தின் தனித்துவமான தூணாகச் செயற்பட்டவர். அவரது எண்ணிலடங்காத பங்களிப்புகள் சமூகத்துக்குத் தெரியாமலே உள்ளன. அவற்றை வெளிக் கொண்டுவர வேண்டிய தேவை இருந்தும் அதற்கான காலம் கனியவில்லை என்றே கூறவேண்டும். அதற்கான காலத்தைக் நோக்கிய நிலையிலே அவரது எண்ணிலடங்காத சேவைகளைக் குறிப்பிட முடியும்.

அவரது சேவையும் பண்பும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல தமிழ் சமூகமே தனது ஊழிக்காலம் முழு வதும் நினைவு கொள்ள வேண்டியவைகளாகும். இன்றைய உலகமயமாக்கச் சிக் கலுக்குள் அகப்பட்டுள்ள தமிழ் சமூகம் பேராசிரியரின் நினைவுகளை காட்சிப் படுத்திக் கொள்வதன் மூலம் தன்னைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். அவரது பாதையில் இன்றைய சமூகங் களை வழி நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவரது சேவையும் உணர்வும், பண்பும் எமது பல்கலைக் கழகத்துக்கும், தமிழ் சமூ கத்துக்கும் படிப்பினையாக அமைய வேண்டும். அந்த அளவுக்கு கௌரவமான சமூகத்தை நடத்திக் காட்டிய பெருமகனார் எங்கள் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜாவை நினைவு கொள்வது தமிழ் சமூகம் அன்னாருக்கு வழங்கும் உயரிய கௌரவமாகும்.


## 15 ஆம் ஆண்டு நினைவில்



வாழ்வுக்காக 08.01.1960

ஓய்வுக்காக 25.10.2000

அமரர் கந்தப்பு தவராசா (பவா)

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம் - நாம் ஆற
வந்து ஒருதரம் பார்க்காயோ அப்பா ?
சந்தை சந்ததிகள் கூறும் உங்கள் நாமம்
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தே விடுங்கள் எம்மிடம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.
(c19830) (14,15)

நினைவுத்துயரில்
மனைவி, பிள்ளைகள்.



**பல் சமய நம்பிக்கை சார் சர்வதேச நினைவுகூரல் நாள் அனுஷ்டிப்புக்கான அழைப்பு**

**"ஒப்புரவுக்கான நினைவுகூரல்"**

*நவம்பர் 11, 2015 மாலை 3.30 மணிக்கு
*தென்னிந்தியத் திருச்சபை ஆதீனப் பேராலயம், வட்டுக்கோட்டை

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் இறந்துபோன அனைத்து மக்களின் உறவுகள் மற்றும் நண்பர்களை நினைத்து கவலையோடுஇருக்கின்ற அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

இந்து, முஸ்லிம், பௌத்த மற்றும் கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் தங்கள் சமூகத்தினரோடு வந்து இந்த அனுஷ்டிப்பில் கலந்து கொள்ள அழைக்கப்படுகின்றீர்கள்.

இந்த அழைப்பு தென்னிந்தியத் திருச்சபை
யாழ்.பேராயத்தின்
பேராயர் அதி.வண.கலாநிதி டானியல்
எஸ்.தியாகராஜா மற்றும்
யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒப்புரவாக்கல் கல்விக்கான
சிறப்பு மையத்தின்
தலைவர் வண.சஞ்சீவ வீரரட்ண
அவர்களாலும் விடுக்கப்படுகின்றது.

(c 19861) (14.15.16)

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்க:

| | | |
|---|---|---|
| வண. | அன்டனி சவரிமுத்து | 077 657 1679(In Sinhala) |
| வண. | சதீஸ் டானியல் | 077 352 0782(தமிழில்) |



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**அன்னலட்சுமி பரஞ்சோதி**

மண்ணில் 25.06.1946

விண்ணில் 22.10.2014

எங்கள் குடும்பத்தின் கருணை ஜோதி
காலமாகி ஓராண்டு சென்றாலும்
ஓயவில்லை உம் நினைவலைகள்
இரு விழிகளில் இன்னும் உம் உருவம்
கலையவில்லை அம்மா
முப்பொழுதும் உம் கற்பனையில்
காலங்கள் கழிந்தாலும்
எப்பொழுதும் உம் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.
என்றும் உங்கள் நினைவினில்...



குடும்பத்தினர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
([illegible])


உலகெங்கும் வாழும் உள்ளங்கள் பாசத்தின் ஒலியினை
பரிமாறிக்கொள்ளும் இந் நன்னாளில்,
ஒவ்வொரு தலைமுறையினரின் மனங்களிலும்
பாரம்பரியத்தின் ஒளி துலங்கட்டும்...
அனைவருக்கும் மொபிடெலின் தீபத்திருநாள் வாழ்த்துக்கள்!
Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே. என்றும்.

## ஊடகவியலாளர் எகிப்தில் கைது

கெய்ரோ, நவ.10
எகிப்திய புலனாய்வு ஊடக வியலாளரும், மனித உரிமை ஆர்வலருமான ஹொசம் பஹ்காட் கைது செய்யப்பட்டுள்ளார்.
இராணுவ உளவுத்துறையினரால் ஒன்பது மணி நேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஹொசம் பின்னர் போலியான செய்திகளை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகின்றது.
அதேவேளை, இந்தக் கைது நடவடிக்கையானது எகிப்தில் கருத்துச்



சுதந்திரத்துக்கு எதிரான மற்றுமொரு சம்பவமாகும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.
கடந்த வியாழக் கிழமை விசாரணைக்கு முன்னிலையாகுமாறு ஹொசத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. விசாரணைகளின் முடிவில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
2013ஆம் ஆண்டு ஜனாதிபதி மொஹமட் மூர்சி இராணுவத்தால் பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கானோர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். (ற)



டுபாயில் பிளை எமிரேட்ஸ் நிறுவனத்தின் எயார் 380 ரக விமானத்துடன் இணைந்து இரு ஜெட் மனிதர்கள் பறந்து சாதனை படைத்துள்ளனர். யூவ்ஸ் ரோசி மற்றும் வின்செண்ட் ரெஃபே ஆகியோரே இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர். டுபாய் நகரின் மேல் பிளை எமிரேட்சுடன் இ எவரும் இதுவரை செய்யாத அரிய சாதனையை இவர்கள் இருவரும் படைத்துள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பொம்மையை திருமணம் செய்த புற்றுநோயாளியான இளைஞர்



பீஜிங், நவ.20
புற்றுநோயால் அவதியுறும் சீன வாலிபர் ஒருவர் திருமணம் செய்து கொள்ளும் தமது ஆசையை நிறைவேற்றும் பொருட்டு பொம்மையைத் திருமணம் முடித்துள்ளார்.
புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 28 வயது சீனத்து வாலிபரொருவர், தமது திருமணத்தை நடத்திப் பார்க்க ஆசைப்பட்டார். ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் தமது இறப்பின் பின்னால் அந்தப் பெண்ணுக்கு அது சோகத்தைத் தரலாம் என அந்த வாலிபர் எண்ணினார்.
அதனால் சீனாவில் வாலிபர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒருவகைப் பொம்மையைத் தெரிவு செய்து, அதனைத் திருமணம் செய்ய முடிவு செய்தார்.
நிஜத்தில் திருமணம் நடைபெறுவது போலவே அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொண்ட அந்த வாலிபர், சீனாவின் பாரம்பரிய முறைப்படியே திருமணமும் செய்து கொண்டுள்ளார்.
இதுவரை குறிப்பிட்ட அந்த வாலிபர் குறித்த எந்த தகவலும் வெளியாகாத நிலையில் இணையத்தில் வெளியாகியுள்ள புகைப்படங்களுக்குப் பலர் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.
இது திருமண அலங்காரம் செய்யும் நிறுவனத்தின் விளம்பர உத்தி எனவும், மக்களைக் கவர நடத்தப்படும் புதுமையான விளம்பரம் இது எனவும் இணையத்தில் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
ஆனால் உண்மையிலேயே அந்த வாலிபருக்கு புற்றுநோய் உள்ளது என்றும், தமது கடைசி ஆசையையே அவர் நிறைவேற்றியுள்ளார் என்றும் சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ற)

# ரஷ்ய பயணிகள் விமானம் குண்டு

## கருப்புப் பெட்டியை ஆராயும் நிபுணர்கள் தகவல்

லண்டன், நவ.10
எகிப்தில் விபத்துக்குள்ளான ரஷ்ய விமானம் வெடிகுண்டு வைத்தே தகர்க்கப்பட்டுள்ளது என்பது 90 சதவீதம் உறுதியாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. விமானத்தில் கருப்புப் பெட்டி ஆராயப்பட்டு வரும் நிலையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.
கடந்த மாதம் 31 ஆம் திகதி அதிகாலை ரஷ்யாவுக்குச் சொந்தமான பயணிகள் விமானம் எகிப்தின் சினாய் பகுதியில் விபத்துக்குள்ளானது. அதில் 224 பேர் உயிரிழந்தனர்.
விபத்துக்கான காரணம் தெரியாதிருந்த நிலையில் விபத்து நடந்த சில மணி நேரத்தில் விமானத்தைத் தாமே தாக்கி வீழ்த்தியதாக என்றுஐ.எஸ். தீவிரவாதிகள் உரிமைகோரியிருந்தனர். ஆயினும் அதற்கான சாத்தியம் இல்லை எகிப்து திட்டவட்டமாக மறுத்திருந்தது.
இந்த நிலையில் விமானத்தின் கருப்புப் பெட்டி மீட்கப்பட்டு அதில் உள்ள தகவல்களை பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.



குறித்த விமானத்தைப் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த தொழில்நுட்பப் பொறியாளர்கள் வடிவமைத்ததால் அவர்கள் கருப்புப்பெட்டியை மீட்டு எகிப்து, ஜேர்மனி மற்றும் ஐயர்லாந்து தொழில்நுட்பப் பொறியாளர்களுடன்


இணைந்து அத
தகவல்களைச்
வருகின்றனர். இ
பெட்டியில் பதிவ
வெளியாகியுள்ள
விமானம் புறப்ப
விமானம் அமை
ளது. விமானத்தி
எந்தக் குறைபாடு
நிரூபணம் ஆகிய
வில் ஈடுபடும் நி
துள்ளனர். அதே
மூலமும் எந்தத் த
படவில்லை என்ப
யுள்ளது. ஆனா
இருந்த விமா னத
ஓசை ஏற்பட்டதுடன் வி
மாறியுள்ளது என்றும்
அதேவேளை, ரஷ்ய நா
காரிகள் இந்தத் தகவ

# கிறிஸ்மஸ் தீவில் பதற்ற நிலைமை

## தடுப்பு முகாமில் உள்ளவர்கள் போராட்டம்



மெல்போர்ன், நவ.10
ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் அமைந்துள்ள தடுப்பு நிலையத்தில் பதற்றம் நிலவுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு தடுப்புக் காவலில் இருந்தவர்கள் நிலையத்திற்கு தீ மூட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதன் காரணமாக மருத்துவ, கல்வி மற்றும் விளையாட்டு வசதிகள் சேதமடைந்துள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த சனிக்கிழமை தடுப்பு நிலையத்தில் இருந்து தப்ப முற்பட்ட ஈரானைச் சேர்ந்த பாசல் செஜெனியின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாகவே தடுப்புக் காவலில் உள்ளவர்கள் இந்த அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ளனர் என்று நம்பப்படுகின்றது.
இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள அந்த நாட்டு குடிவரவுத் திணைக்களம், பாதுகாப்புக் காரணங்கள் கருதி அங்கிருந்த பாதுகாப்புப் படையினர் மீள அழைக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.
குறித்த தடுப்பு நிலையத்தில் பெரியளஅளவிலானகலவரம்இடம்பெற்று வருகின்றது என்று வெளியான செய்தியை குறித்த அறிக்கை நிராகரித்துள்ளது. எனினும், அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள்தங்கியுள்ளநிலையத்தில் பதற்றம் நிலவுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



.த்துள்ளனர். சுவிட்சர்லாந்தை சேர்ந்த ஜெட் மனிதர் என்று அழைக்கப்படும்
பிரேட்சுடன் இந்த மனிதர்கள் இணைந்து பறப்பது பிரமிக்க வைத்துள்ளது.
ட்டுள்ளன. (ற)

# ...ண்டு மூலமே தகர்ந்தது!

...ணைந்து அதில் பதிவாகியுள்ள
...வல்களைச் சேகரிக்க முயன்று
...கின்றனர். இந்தநிலையில் கருப்புப்
...டியில் பதிவான சில தகவல்கள்
...ரியாகியுள்ளன.
...ானம் புறப்பட்ட நேரத்திலிருந்து
...ானம் அமைதியாகவே பறந்துள்
... விமானத்தின் இயந்திரங்களில்
...க் குறைபாடும் இல்லை என்பதும்
...பணம் ஆகியுள்ளது என்று ஆய்
... ஈடுபடும் நிபுணர்கள் தெரிவித்
...ளனர். அதேபோல், விமானிகள்
...மும் எந்தத் தவறும் மேற்கொள்ளப்
...ல்லை என்பதும் அதில் பதிவாகி
...ளது. ஆனால், பறந்துக்கொண்டு
...ந்த விமா னத்தில் திடீரென பலத்த
...ட்டதுடன் விமானமே அமைதியாக
...து என்றும் தெரிவித்துள்ளனர்.
...ள, ரஷ்ய நாட்டு விசாரணை அதி
...இந்தத் தகவலை மறுத்து வேறு
விதமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். விமானம் புறப்பட்ட 20 நிமிடங்களில் அதில் இருந்த கருப்பு பெட்டி திடீரென செயல் படாமல் போயுள்ளது என்று ஒரு புதுத் தகவலொன்றை வெளியிட்டுள்ளனர். வானிலை மாற்றம் காரணமாக வெளிப் புறத்தில் இருந்து இயற்கை சீற்றம் காரணமாக விமானம் வெடித்துச் சிதறி இருக்கலாம் எனக் கூறியுள்ளனர். விமானம் கீழே விழுவதற்கு முன்னர் நடு வானிலேயே வெடித்துச் சிதறியுள்ளமை உறுதியாகியுள்ள நிலையில், ஒவ்வொரு தரப்பினரும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். ஆயினும் வெடிகுண்டின் மூலமே விமானம் தகர்க்கப்பட்டுள்ளது என்பது 90 சதவீதம் உறுதி யாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கருப்புப் பெட்டியில் பதிவாகியுள்ள தகவலைப் பிரான்ஸ் மற்றும் எகிப்து விசாரணை அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக வெளியிடும்போதே உறுதியான தகவல்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

# இரண்டாவது பனிப்போரை அமெரிக்கா விரும்பவில்லை

## பாதுகாப்பு அமைச்சர் ஆஷ் கார்ட்டர் தெரிவிப்பு


வொஷிங்டன், நவ.10

ரஷ்யாவுடன் இரண்டாவது பனிப் போர் ஏற்படுவதை அமெரிக்கா ஒருபோதும் விரும்பவில்லை என்று அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஆஷ் கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

கலிபோர்னியாவில் கடந்த சனிக் கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதோ கார்ட்டர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது–

உக்ரைனை ஆக்கிரமித்தமை மற்றும் சிரியாவுக்குப் படைகளை அனுப்பியமை போன்ற செயல்களை ரஷ்யா செய்து வருகின்றது. நாங்கள் ரஷ்யாவை எதிரியாக மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. அதே போன்று ரஷ்யாவுடன் பனிப் போரையோ அல்லது நேரடிப் போரையோ அமெரிக்கா விரும்பவில்லை. அதே சமயம் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பதில் எந்த சமரசமும் செய்து கொள்ள மாட்டோம்.



தரை, கடல் மற்றும் இணைய வெளியில் பல சர்ச்சைக் குரிய சவாலான செயற்பாடுகளை ரஷ்யா செய்து வருகின்றது. அதேசமயம் தென் சீனக் கடற் பகுதியில் சீனாவின் செயற்பாடுகள் தொடர்பிலும் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கவலை அடைந்துள்ளன.– என்றார். (ற)




உலகப் புகழ் பெற்ற இசைக் கலைஞர் ஜோன் லெனினின் கிற்றார் இசைக்கருவி 2.4 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஜுலியன்ஸ் ஏல விற்பனை நிறுவனம் நடத்திய ஏல விற்பனையில் 1962 ஆம் ஆண்டு, 161 பவுண்ஸ்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட கிற்றாரே ஏலமிடப்பட்டது.

# மிகப் பழைமையான மின் நிலையம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது

டின்டோரிற், நவ.10

மிச்சிகனில் அமைந்திருந்த 93 ஆண்டுகள் பழைமைவாய்ந்த மின் உற்பத்தி நிலையம் நேற்றுமுன்தினம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டில் அதன் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்ட நிலையிலேயே குறித்த நிலையம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

இதனைக் காண்பதற்காகக் கனடாவின் ஒன்ராறியோவையும் அமெரிக்காவின் மிச்சிகனையும் பிரிக்கும் சென் கிளைர் ஆற்றின் இரு மருங்குகளிலும் ஆயிரக்கணக்கான கனேடியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் கூடியிருந்தனர்.

பல்வேறு பெரும் கட்டடத் தொகுதிகளைக் கொண்டு அமைந்திருந்த அந்த மின் உற்பத்தி நிலையம், ஒரு சில நிமிடங்களில் பெரும் சத்தத்துடன் துகள்களாக தரைமட்டமானது அங்கிருந்தவர்களுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

வெறும் இருபது வினாடிகளிலேயே அனைத்தும் இடிந்து அடங்கி விட்டன என்று அதனை நேரில் பார்த்த ஒருவர் ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

திட்டமிடப்பட்டவாறு எதுவித அசம்பாவிதமும் ஏற்படாத வகையில் கட்டடத்தைத் தகர்க்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று அந்த பிராந்தியத்தின் அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ற)



# தீவிரவாதத்துக்கு எதிரான அழைப்பை சர்வதேசம் பொருட்படுத்தவில்லை

## குற்றஞ்சாட்டுகின்றது எகிப்து

கெய்ரோ, நவ.10

தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதற்காக தாம் விடுத்த அழைப்புக்களை சர்வதேச சக்திகள் பொருட்படுத்தவில்லை என எகிப்தின் வெளியுறவு அமைச்சர் குற்றம்சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கடந்த வாரம் சினாயில் ரஷ்ய விமானம் ஒன்று வீழ்ந்து நொறுங்கியது. அதற்கு குண்டு ஒன்றே காரணம் என தெரிவிக்கும் வெளிநாட்டு புலனாய்வுத் தகவல்கள், அது குறித்து தமது பாதுகாப்பு அதிகாரிகளுடன் எந்தவித செய்திகளையும் பகிரவில்லை.

நாம் தீவிரவாத செயற்பாடுகளை ஒழிப்பதற்காக சர்வதேச நாடுகளிடம் நெருக்கமான ஒத்துழைப்புக்காக அழைப்பை விடுத்திருந்தோம். எனினும் சர்வதேச சக்திகள் அதனைப் பொருட்படுத்தவில்லை.

அண்மையில் விபத்துக்குள்ளான ரஷ்ய விமானம் குண்டு ஒன்றின் தாக்குதலுக்கே உள்ளாகியிருக்கக் கூடும் என அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகள் தெரிவித்திருந்தன.– என்றார். (ற)

# யேமனில் சூறாவளி 8 பேர் உயிரிழப்பு

முகல்லா, நவ.10

யேமனின் கிழக்கு கடலோரப் பகுதியில் உள்ள காட்ரமவுண் மாகாணத்தின் முகல்லா நகரைத் தாக்கிய அரிய வெப்பமண்டல சூறாவளியை அடுத்து ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கால் குறித்த பகுதியின் வீதிகள், பாலங்கள் மற்றும் வீடுகள் என்பன பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

அதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை வீசிய கடும் சூறாவளியைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவால் சுமார் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. தசாப்த காலங்களுக்குப் பின் யேமனைத் தாக்கிய கடும் சூறாவளியாக இது கருதப்படுகின்றது எனக் கூறப்படுகிறது.

# சிரியாவில் கந்தக வாயுத் தாக்குதல்

## இரசாயன ஆயுத நிபுணர்கள் தெரிவிப்பு

டமஸ்கஸ், நவ.10

வட சிரியாவில் உள்ள நகரொன்றில் கடந்த ஓகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலொன்றில் கந்தக வாயு பயன்படுத்தப்பட்டுள்ளதை இரசாயன ஆயுத நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மரியா நகரில் இடம்பெற்ற தாக்குதலின்போது கந்தகவாயு பயன் படுத்தப்பட்டுள்ளது என்று இரசாயன ஆயுதங்கள் தடை அமைப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் உள்ளூர் கிளர்ச்சிக் குழுக் களுடனான மோதலின் போது ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் கந்தக வாயுவை பயன்படுத்தினர் என்று அவர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டது. குறித்த தாக்குதலில் கந்தகவாயு தாக்கத்தால் குழந்தையொன்று உயிரிழந்தது. நால்வர் மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி தாக்குதலில் கந்தக வாயுப் பயன்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கந்த வாயுவானது தோலை எரிக்கும் அபாயம் கொண்டதுடன் பெரும் சுவாச பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும். எனவே கந்தக வாயு பயன்பாட்டுக்குச் சர்வதேச சட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ற)



# 2015 தீபாவளி ஆசிச் செய்திகள்

## எல்லோரும் இன்புற்று இனிதாய் வாழ்வோம்



இன்று தீபாவளித் திருநாள். இது ஒரு சிறப்பு வாய்ந்த இனிய பண்டிகையாகும். தமிழ் மக்கள் விரும்பிக் கொண்டாடி மகிழ்கின்ற இந்தத்தீபாவளி ஒருமகோன்னதமான மாண்பு மிகுந்த மங்கலகரமான இனிய நன்னாளாகும். தீப ஒளியிலே இறைவனைக் கண்டு தரிசிக்கும்பண்புவெளிப்படுகின்ற இந்தப் பெருநாளிலே அதனை அன்புடன் வரவேற்று, இதுவரை காலமும் பட்ட வேதனைகள் மாறி, இனிமேல் நல்ல மகிழ்ச்சியான நல்வாழ்வு மலரவேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். ஈழவள நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் சீரோடும் சிறப்போடும் நன்கு வாழ அருள்புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தனைப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். இன்றைய தீபாவளி நன்னாளில் எல்லோரும் இன்புற்று இனிதாய் வாழ்கின்ற நிலை உருவாக வேண்டும். சமநிலையில் உயர்ந்து சமாதானம் நிலவுகின்ற அதேவேளையில் மக்கள் துன்ப துயரங்கள் நீங்கப்பெற்று புத்தாடையணிந்து புத்துணர்ச்சியுடனே மகிழ்ச்சி நிறைந்த வாழ்வில் திளைக்கத் திருவருள் பொங்கிப் பரவ வேண்டுமென்று ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்

## தமிழர் வாழ்வில் இருள் அகன்று ஒளி பிறக்கட்டும்



அன்புசால் தமிழ் உலகுக்கு இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும். இறையருளால் அனைவரும் சகல செல்வயோகம் மிக்க நல்வாழ்வை அடைய இனிய நன்நாளிலே வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். தமிழ் மக்களாகிய எமக்குள் சிலர் துன்பத்தை அனுபவிக்க, ஒருசிலர் இன்பத்தை அனுபவிக்கத் தீபாவளித்திருநாளை முழுமனத்துடன் கொண்டாட முழுமனமும் இடம்கொடுக்கவில்லை. பண்டிகைகளும் விழாக்களும் அனைவரையும் மகிழ்விப்பதாகும். ஆனால் எமது சகோதரர்கள் மீளமுடியாத துன்பத்துடன், தீபாவளி மகிழ்வைத் தமது குடும்பங்களுடன் ஒன்று கூடி கொண்டாட முடியாதவர்களாக சிறைகளில் வருந்துகின்றார்கள். அவர்களது வாழ்வுக்கு இறையருள் ஒளிகொடுக்கட்டும். சகோதரத்துவ உணர்வுடன் ஒன்றுபட்டு விட்டுக்கொடுத்து, இருக்கவேண்டிய இந்திய மீனவர்கள் தமது சகோதர இலங்கை மீனவர்களுடன் போட்டியிட்டுக்கொள்ளாமல் இருக்கவும். மீனவ மக்களுடைய வாழ்வுக்கு விடிவு கிட்டவும் ஒளிகிடைக்கட்டும். மீண்டும் மீண்டும் அரசியலில் தீர்வுகளால் ஏமாற்றப்படாமல் எமது தமிழ் இனம் தலைநிமிர இறையருள் வழிகாட்டட்டும். ஒவ்வொரு மக்களும் தத்தமது அபிலாசைகள் நல்லெண்ணெங்களை நிறைவேற்ற இறைஒளி கிடைக்கட்டும். எமது சைவத்தமிழ் பண்டிகைத் திருநாளில் எமது நல்வாழ்வுக்காகவும் எமது உயர்வுக்காகவும் தமது வாழ்வையே அர்ப்பணித்துக்கொண்ட எமது முன்னோர்கள் பெரியவர்கள், மண்ணின் மைந்தர்கள் அனைவரது வாழ்த்துக்களும் கிடைக்கப்பெற்று எமது மக்கள் நல்வாழ்வு வாழ இறையருள் கிட்ட வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
குருமார் சந்நிதானம், சித்தன்கேணி.

## தித்திக்கும் தீபாவளியைக் கொண்டாடுவோம்!

இன்று தீபாவளித் திருநாள். இது ஒரு சிறப்பு மிகுந்த பெருநாள். தமிழ் மக்களுடைய பொன்னான நாளான இந்தத் தீபாவளியை நாம் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்வோம். எல்லோரும் ஒற்றுமையாகக் கூடியிருந்து தித்திக்கும் இனிப்புப் பண்டங்களைப் பரிமாறி நண்பர்களுடன் இணைந்து புத்தாடை அணிந்து ஆனந்திப்போம். தித்திக்கும் தீபாவளியை ஒற்றுமையே பலம் என்பதை மனதில் கொண்டு 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' என்றபடி நாம் அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாடி மகிழ்வோம். 'ஆண்டிலொரு தீபாவளியாம் அதை ஆண்டியும் கொண்டாட வேண்டுமாம்' என்பது முதுமொழி. ஆகவே தமிழ் மக்களாகிய நாம் இனித்திடும் இன்பத் தீபாவளியை முழுமனதுடன் குதூகலித்துக் கொண்டாடி எல்லாம் வல்ல இறையருளை மனதில் கொண்டு வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றோம். தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு நல்ல மாற்றத்தையும் ஒரு அமைதியான திருப்பத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று நாம் ஒருசேர இறையருளைப் பிரார்த்திக்க வேண்டும். எமது வாழ்க்கை வளமாகவும் சிறப்பாகவும் சீராகவும் மங்கலகரமாகவும் சுபீட்சமாகவும் விளங்க நாம் எல்லோரும் ஒற்றுமையாகக் கடவுளைப் பிரார்த்தனை செய்தால் நிச்சயம் நிலைமை மாறும். எனவே, தித்திக்கும் இனிய தீபாவளித் திருநாளில் புத்தாடையணிந்து மகிழ்ச்சியோடு இறைவனை வணங்கி இன்புற்றிருப்போமாக.

"தெய்வத் தமிழ்ச்சுடர்" இராசையா ஸ்ரீதரன்.

# கேதார கௌரி நோன்பின் மகத்துவம்

கலாபூசணம் க.லோகேஸ்வரன்
தொல்புரத்தூர்.

கைலயங்கிரியின் சிகரத்தில் உமா சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபையை ஏற்படுத்தி அதில் வீற்றிருக்கின்றார். அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திர நாடகமொன்றை ஆடிக்காட்டுகின்றார். பார்வதி தேவியும் அங்கே இருக்கின்றார். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள்.

பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கின்றார். பரமசிவனது அனுக்கிரகமும் பிருங்கிக்குக் கிடைக்கின்றது. அதனைக் கண்டு சபையோர் பிருங்கி மகரிஷிசைப் பாராட்டுகின்றனர். அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியுடன் பார்வதியை நீக்கி பரமசிவனை வலம் வந்து வணங்குகின்றார்.


இதனால் பார்வதிதேவி கவலையடைந்தாள். இதனைக் கண்ணுற்ற சிவபெருமான், தேவி சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முத்தி நிலையை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லை என்ற திடசித்தம் கொண்டார். அதனால் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார் என்று பார்வதிக்கு விளக்கம் கூறினார்.

பார்வதி தேவி வருத்தப்பட்டு பரமசிவனிடம் கோபங்கொள்கிறாள். கோபாவேசத்தால் தனது சக்தியின் கூறு பிருங்கி மகரிஷியினின்றும் அகலக் கடவது என்று கூறிவிடுகிறாள். பிருங்கி மகரிஷியின் உதிரம் பிழிந்து சக்கையாகிறது. அவர் நிற்பதற்கு முடியாது தள்ளாடுகிறார். அப்பொழுது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச்செய்கிறார். பிருங்கி தண்டின் உதவியுடன் ஆச்சிரமம் போய்ச் சேருகிறார்.

தேவிக்கு மேலும் கோபமுண்டாகிறது. கைலையை விட்டு பூலோகத்துக்கு வருகிறாள். வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கும் பூங்காவனத்தில் ஒரு விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கின்றாள். அந்த இடத்தில் 12 வருடங்களாக மழையின்றி கிடந்த விருட்சங்கள் எல்லாம் பூத்து மணம் வீசுவதைக் கண்டு மக்கள் அதிசயிக்கின்றனர்.

தேவி தாங்கள் கைலாசத்தைவிட்டு பூலோகத்துக்கு எழுந்தருளக் காரணம் என்ன? என்று கேட்டுவிடுகின்றனர். தேவியும் தான் பூலோகத்துக்கு வந்த கதையைச் சொல்கிறார். தேவியும் ஆச்சிரமம் சென்று வால்மீகி மகரிஷி தேவிக்கென்று அமைத்துக் கொடுத்த ஆச்சிரமத்தில் நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து மகரிஷியே 'பூலோகத்தில் நான் விரதமொன்று அனுட்டிக்க வேண்டும். இதற்குவழி இருக்குமானால் அதனை எனக்குக் கூறுங்கள்' என்றார்.

'மகரிஷி தாயே, தாங்கள் விரத முகத்தோடு எழுந்தருளி இருக்கின்றீர்கள். அதைவிடவா பூலோகத்தில் சிறந்த விரதமொன்றுண்டு என்று கூற தேவி புன்னகைத்துத் தன் விரதத்தை ஆலவிருட்சத்தின் கீழ் அமர்ந்து ஆரம்பிக்கின்றாள். மண்ணிலே இலிங்கம் பிடித்து ஈஸ்வரனாகப் பாவித்து பூசை செய்கின்றாள். 21 நாள் பூசை நிகழ்கின்றது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்ல உருண்டை, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை நைவேத்தியமாக வைத்து தூபங்காட்டி வணங்குகிறாள். 21 இழை எடுத்து தரித்து 21 முடிமுடிந்து ஈஸ்வரனை தியானம் செய்து காப்புக்கட்டுகின்றாள். காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்கு காட்சி கொடுத்து 'தேவி உனக்கு என்ன வரம் வேண்டும்' எனக் கேட்கிறார். தேவி ஈசனைப் பார்த்து "உமது தேகத்தில் பாதி எனக்கருள வேண்டும்' என்று கேட்கிறாள். ஆகட்டும் என்றார் ஈஸ்வரன். 'என்னை நோக்கி நோன்பு நோற்று, வரம்பெற்ற உன்னை நோக்கி, யார் இந்த 21 நாள்களும் விரதம் அனுட்டிக்கின்றார்களோ அவர்கள் உன் மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவர்' என்றார்



ஈஸ்வரன். பரமசிவன் பார்வதி சமேதரராய் அர்த்த நாரீஸ்வர வடிவத்தோடு கைலயங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து பூலோக வாசிகளால் கௌரி நோன்பு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கௌரி நோன்பு அனுட்டித்து கைமேல் பயன் கண்டவர்கள் பலர். இந்த விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை சங்கற்பம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை வலம் வருதல் என்பனவாகும்.

ஆகவே இவற்றை ஒவ்வொருவரும் தாமாகவே செய்து விரதத்தை நிறைவேற்றுதல் விரும்பத்தக்கதாகும். விரும்பினால் அவரவர் இல்லங்களிலும் இதனை செய்து கொள்ளலாம். ஆனால் புனிதமான சூழ்நிலை அமைய வேண்டும். இலிங்கத்தின் அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்து பூசை செய்தல் மேலானது. 21 நாள் இந்த விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் இறுதி நாளில் எல்லாப் பூசைகளையும் முடித்துக்கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்ப[illegible]



# 2015 தீபாவளி ஆசிச் செய்திகள்

## கோபத்தை மறந்து அனைவரையும் நேசிப்போம்



இருளை நீக்கி, இனிய ஒளி விளக்கு ஏற்றி, இறைவனை மன்றாடும் இனிய திருநாள் தீபாவளி. இந்துக்களின் பாரம்பரிய விழாக்களில் ஒன்றான தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் வாழ்த்துக் கூறுவதில் ஆனந்தமடைகிறேன். எமது மண்ணில் வாழும் மக்கள் இடர் இன்றி மகிழ்வாய் வாழ அனைவரும் இந்தநாளில் பிரார்த்திப்போம். சிறைக்கூடங்களில் வாழும் அப்பாவிகள் விடுதலைபெற்று அவர்களின் வாழ்வும் விடிய வேண்டும் என வேண்டுதல் செய்வோம். அகதி முகாம்களில் சுமார் இருபத்தைந்து ஆண்டு காலமாக வாழும் மக்களுக்கு வாழ்வு கேட்டு பிரார்த்திப்போம். எமது மண்ணில் பரவி வரும் மதுபாவனை மற்றும் போதை போன்ற உபாதைகள் தொடராமல் இருக்க வேண்டுதல் செய்வோம். எமது மண்ணில் இரக்கமற்ற கொடூரத்தனங்கள் இனிமேலும் நடக்கக்கூடாது என வேண்டுதல் செய்வோம். எங்களிடம் எங்களை அறியாமல் குடிகொண்டிருக்கும் அஞ்ஞானம் அகல வேண்டுதல் செய்வோம். ஆதரவற்று அல்லல் உறும் குழந்தைகளுக்காக பிரார்த்தனை செய்வோம். பெற்றவர்கள் உற்றவர்கள் கைவிட்டு உதவியின்றி தவிக்கும் மூத்தோர்களுக்காக பிரார்த்தனை செய்வோம். வைத்தியசாலைகளில் நோய்களினால் நொந்து போய் துன்புறும் அன்பர்களுக்காக ஆறுதல் வேண்டிப் பிரார்த்திப்போம். நாங்கள் அறிந்தும் அறியாமலும் விட்ட தவறுகளுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு பிரார்த்திப்போம். இதுவரை எமக்கு கிடைத்த நன்மைகளை நினைத்துக் கடவுளுக்கு நன்றி சொல்லிப் பிரார்த்திப்போம். ஆக இருளைப் போக்கும் தீபாவளித் திருநாளில் அன்பை வளர்ப்போம். உற்றார் உறவினர்கள் நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் நேசிப்போம். கோபங்களை மறந்து அனைவரையும் இனிதாய் வரவேற்போம். இனிய தீபாவளி நாளில் அனைவரும் இதயபூர்வமாக வாழ்த்துக்களைப் பரிமாறி வாழ்வாங்கு வாழ்வோமாக!

கலாநிதி ஆறு.திருமுருகன்.
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவரின் ஆசிகள்

தமிழர் திருநாளாம் தீபாவளி நன்னாளை வருடாவருடம் சிறப்புடன் கொண்டாடி மகிழ்கின்றோம். மலர்ந்துள்ள புதியதொரு நல் ஆட்சியில் மீள் குடியேற வேண்டிய மக்கள் அனைவரும் தத்தம் சொந்த இடங்களில் மீள் குடியேற வாய்ப்பமைய வேண்டியும், நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் அனைவரும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நீதியை வலியுறுத்தியும், 21நாள்கள் கௌரி விரதம் அனுஷ்டித்து இறைவனின் இடப்பாகத்தை பெற்று அர்த்தநாரீஸ்வரப் பெருமானை வேண்டி ஏகோபித்த முறையில் பிரார்த்தனை செய்வோமாக. தீபாவளித் திருநாள் நல் ஆசிகளும் வாழ்த் துக்களும் அனைத்து இன மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! சர்வே ஜனகா சுகினோபவந்து

சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்

## தீபத்திருநாள் வாழ்த்துக்கள்



தமிழர் தம் பண்பாட்டுக் கோலங்களில் பல்வேறு பண்டிகைகளும் பல்வேறு விடயங்களை எடுத்துக்காட்டும் நிலை காணப்படுகின்றது. இந்த வகையில் இந்தத் தீபத்திருநாள் கொடிய நரகாசுரனை வீழ்த்தி அதன் வாயிலாக உலகத்தாருக்கு இன்பத்தை அள்ளி வழங்கிய புனித நாள். இந்த நன் நாளில் கொடுமைகள் அகன்றும் இன்றும் எம்மீது இறுக்கப்பட்டுள்ள அடிமைத் தழைகள் அகன்றிட இந்த புனிதமான காத்திகை மாதத்தின் உயரிய உன்னத மான புனிதத்தன்மைக்கு மேலும் உரம் சேர்த்திட தீபத்தை தியாகத்தின் உன்னதமான உதிரத்தினை நெய்யாக்கி மண்ணை மீட்டிட புனிதராகிவிட்ட எம் காவியர்களின் கனவு மெய்ப்பட அவர்களின் உணர்வுகளைத் திரியாக்கி எதிரியின் கோரங்கள் எரிந்து சாம்பலாகிட மலரும் எம் இனிய வசந்தம் என நினைந்து. சிறையில் அடைக் கப்பட்ட எம் உறவுகளின் விடுதலை மெய்ப்பட மனதில் உரம் கொண்டு உயர்த்திடும் எம் கரங்களை உறுதியாக பற்றிக் கொண்டு தீபத்தை ஏற்றி வணங்கிடுவோம் இந்நாளில்.

என்றும் மக்களின் சேவையில்,
திருமதி நாகரஞ்சினி.ஐங்கரன்,
முன்னாள் தவிசாளர்,வலி மேற்கு பிரதேச சபை.

## கடந்த காலத் துன்பங்களை மறந்து மன அமைதி பெறுவோம் இந்நாளில்

நெறிமுறை வழுவாது நாட்டில் ஆட்சி நடைபெற வேண்டும் என்று இந்துக்கள் என்றும், தமது வழிபாட்டில் இறைவனை வேண்டிக்கொள்வது வழமை. அந்த வகையில் தீபாவளி தினத்தில் நரகாசுரனின் ஆட்சி முடிவு பெற்றதை நினைவு கூர்ந்து, அத்தகைய ஆட்சி ஒருபோதும் எமது நாட்டில் நடைபெறக்கூடாது என்று பிரார்த்திப்பது மரபு. சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்த நமது தமிழ்ச் சமூகம் அத்தகைய கொடிய போரும், கொடிய வாழ்வும் ஒருபோதும் வரக்கூடாது என்று இறைவனைத் தியானிப்பதோடு, இந்த நாட்டை நிர்வகிப்பவர்கள் நீதி வழுவாது நாட்டை ஆள வேண்டும் என இறைவனை வேண்டிக்கொள்வதை விட வேறெம்மால் என்ன செய்ய முடியும். தாயை இழந்த பிள்ளைகளும்,தந்தையை இழந்த உறவுகளும், தமது பல உற்றாரை இழந்த மக்களும், அங்கவீனமடைந்த உறவுகளும், கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனும், பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும், பெற்றோர்களை இழந்த பிள்ளைகளும் எனப் பல்வேறு வகையில் இழப்புக்களைச் சந்தித்த எமது உடன் பிறவாச் சகோதரங்களை எண்ணும்போது மனம் வெதும்புகிறது. அவ்வளவில்லாது வீடுகளையும், சொத்துக்களையும் இழந்து இன்று ஏதிலிகளாகத் தெருவில்; அலைவதைக் காணும் போது கண்ணீர் மல்காது எப்படி இருக்க முடியும். யாம் ஏதும் செய்யமுடியாது போனாலும் இந்தப் புனித தீபாவளி தினத்தில் எம்மை ஆட்சி செய்யும் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேதத்தில்லைக்கூத்தனை ஒரு கணம் தியானித்து துன்பக் கடலில் சிக்குண்டுள்ள அனைவரும் ஆறுதலடைந்து மன அமைதி பெற எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அனைவரும் தத்தம் தகுதிக்கேற்ப தான தர்மங்களில் ஈடுபடுமாறு மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சி. சக்திகிரீவன்,
இந்து சமயப் பேரவைச் செயலாளர்

## தீதகற்றும் தீபாவளியே

தீபாவளித் திருநாளை சிறப்பாக எதிர்நோக்கி காத்திருக்கும் அனைத்து தமிழ் உறவுகளுக்கும் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தீய எண்ணங்கள் தீய செயல்கள் என்பவற்றில் இருந்து விடுபட்டு நாம் அனைவரும் சந்தோசமாகவும் சௌபாக்கியம் நிறைந்தும் வாழ்ந்து வளம் பல பெற்றுக் கொள்ள இந்த நல்ல நாள் எமக்கு கால்கோளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தீப ஒளி வீசும் இல்லங்களும் உள்ளங்களும் இனிதாய் வாழ்ந்து நாடும் வீடும் வேற்றுமையற்ற ஒற்றுமையுடன் மனக்கசப்புக்கள் இல்லாத விழுமியத்துடன் வாழ வாழ்த்துகிறேன்!

அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் மௌலவி
(காஸிமி)
யாழ்./கிளி. மாவட்ட உலமா சபைத் தலைவர்,
யாழ்ப்பாணம்.

## நிலையான மகிழ்ச்சி எல்லோருக்கும் அமைய வேண்டும்

இந்தத் தீபாவளியும் எனக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. போர் முடிவுக்கு வந்து ஆறு வருடங்கள் மறைந்தோடிவிட்ட போதும், போர் பாதிப்புக்களிலிருந்தும், அதன் வடுக்களிலிருந்தும் விடுபட்டு எமது மக்கள் முழுமையாக மகிழ்ச்சி கொள்ளமுடியவில்லை.

இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படாததும், இன்னமும் அகதி முகாம்களில் துயரப்படும் எமது மக்கள் அவர்களது சொந்த வாழ்விடங்களில் அர்த்தபூர்வமான வகையில் மீளக் குடியேற்றம் செய்யப்படாததும் கவலைக்குரிய விடயங்களாகும். ஆனாலும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தீபாவளியைக் கொண்டாடும் உறவுகளுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா, செயலாளர்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி.

## தீபாவளித் திருநாளில் மகிழ்ச்சி உண்டாகட்டும்

சர்வதேசம் எங்கும் வாழும் இந்து மக்கள் அனைவரும் தமது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக தீபாவளியை கொண்டாடுகின்ற இந்த நல்ல நாளில் அனைவரது உள்ளத்திலும் தூய அன்பும் மகிழ்ச்சியும் என்றும் நிலைபெற வாழ்த்துகிறேன்.

எமது நாட்டில் இன்றுவரை தமிழ்த் தேசிய இனம் தன்னை அடக்கியாள நினைக்கும் பேரினவாதிகளிடம் தம்மையும் மனிதப்பண்புகளுடன் சமத்துவமாக நடத்துமாறு கோரியே பல தசாப்தங்களாகப் போராடி வருகின்றது. அதனைத் தரமறுக்கின்ற ஆட்சியாளர்கள் அதற்காகக் குரல்கொடுப்போரை சிறைகளில் அடைத்தும் பல்வேறு துன்புறுத்தல்களை மேற்கொண்டும் மீண்டும் மீண்டும் தவறுகளை இழைக்கின்றனர்.

கடந்த ஆண்டுவரை இந்த நாட்டில் நடைபெற்ற ஆட்சியை ஒரு அசுரனின் ஆட்சியுடன்தான் எம்மால் ஒப்பிடமுடிகிறது. அப்பொழுது இம் என்றால் வனவாசம் ஏன் என்றால் சிறைவாசம் என்ற நிலைதான் இருந்தது. தர்மத்துக்கும் நீதிக்கும் இந்த நாட்டில் இடமில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. அதன் கோரத் தாண்டவத்தை இந்த நாடும் உலகமும் நன்கறியும். கடந்த ஆண்டு ஓர் சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படுவது போல் தோன்றியது. அதனைப் பற்றிப் பிடிப்பதற்கு நாமும் எமது பங்களிப்பைச் செய்திருந்தோம்.



அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில், எமது உறவுகளான அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்த்தோம். கடந்த ஆட்சிக்காலத்தில் அவர்களுக்கு எதிரான வழக்குகளை முறையாக விசாரியுங்கள், அவர்கள் குற்றம் புரிந்திருந்தால் சட்ட நடவடிக்கை எடுங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கைகள் எம்மாலும் அரசியல் கைதிகளினாலும் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவர்களால் அதைக்கூடச் செய்ய முடியவில்லை. அதற்கான போராட்டங்கள் நடைபெற்றபோதெல்லாம் சிறப்பு நீதிமன்றம் அமைக்கிறோம். அவர்களின் வழக்குகளை துரிதமாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்களே தவிர, அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில், அந்த அசுர அரசுக்கு மாற்றீடாகப் புதிய அரசு வந்துவிட்டதாகவும் அது நல்லாட்சி நடத்துமென்றும் பறைசாற்றப்பட்டது.

பல்வேறு வழிகளிலும் மானுடத்தைத் துன்புறுத்தி வந்த நரகாசுரன் கிருஷ்ண பகவானால் வதம் செய்யப்பட்டு தர்மம் நிலைநாட்டப்பட்டதைப்போல் பழைய அரசு தூக்கியெறியப்பட்டு புதிய அரசு பதவியேற்றிருக்கிறது.

ஆகவே ஆட்சியாளர்கள் தாம் செய்த தவறுகளை நினைத்து மனம் வருந்தி தர்மத்திற்கு விரோதமாக தாம் தடுத்து வைத்திருக்கும் அரசியல் கைதிகளை விடுவித்து அவர்களை மீண்டும் அவர்களது குடும்பங்களுடன் இணைத்து, ஒடுக்கப்பட்ட தேசிய இனமான தமிழினத்தின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட போரில் குற்றமிழைத்தவர்களை இனங்கண்டு, அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தர்மத்தை நிலைநாட்டி, தமிழ்ச் சமூகத்தின் சமத்துவ சகவாழ்வுக்கு முறையான நிரந்தர அரசியல் தீர்வைக் கண்டு நாட்டில் நிரந்தர அமைதியையும் மகிழ்ச்சியையும் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும். இதுவே உண்மையான தீபாவளியாக இருக்கமுடியும்.

ந.சிவசக்தி ஆனந்தன்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 492 7474, 021-492 7475,
021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 493 1111
விநியோகம் : 021 493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழ் கைதிகள் விவகாரம்; கந்தறுந்து போகும் நிலை....!

இன்று தீபாவளித் திருநாள். இது இந்துக்களின் விசேட நாள்களில் ஒன்று. திருமால் தமது கிருஷ்ண அவதாரத்தின் போது, மக்களுக்கு அட்டூழியங்கள் பல செய்த நரகாசுரன் என்ற அரக்கனைக் கொன்று ஒழித்த நாள். அவனது விருப்பத்தின் பிரகாரம், வேண்டுதலின் பிரகாரம் இந்த நாள் தீபாவளி என்றானது. இந்துக்களால் திருநாளாகக் கொண்டாடப் படும் ஒரு தினம்.

தீபங்களின் வரிசை, இருள் நீக்கி ஒளி தர வல்லவை. அதேபோன்று அகங்காரம், பொறாமை, தலைக்கனம் ஆகியவற்றை அகற்றும் நாள், -- எரிக்கும் நாள் என்றும் ஆகியுள்ளது. ஒரு வரைக் கண்டு மற்றொருவர் மகிழ்ச்சி தெரிவிக்கும் தினமாகவும், இன்றைய நாள் அமைகிறது.

உன்னைக் கண்டு நான் ஆட, என்னைக் கண்டு நீ ஆட உல்லாசம் பொங்கும் நாளாகவும் இன்றைய தினம்-தீபாவளிக் கொண்டாட்டம் அமைகிறது.

ஆயினும், இன்றைய சிறப்பான தினத்தன்று, கைதிகளின் விடுதலைக்குப் பிரார்த்தியுங்கள்; களியாட்டங்களை முற்றாகத் தவிர்த்து விடுங்கள் என்று இந்துமா மன்றம் மக்களிடம், இந்து மக்களிடம் மிகப் பொருத்தமான வேண்டுகோளை விடுத்துள்ளது.

ஆண்டவனால் ஆகாதது எதுவும் இல்லை என்ற நம்பிக்கையுடன், எல்லோருக்கும் மேலான ஆண்டவனிடம் மனம் உருகி, அழுதழுது கேளுங்கள்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை, விடுவிப்பதாக அறிவித்த அரச தரப்பு, தமிழ் மக்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றிவிட்டது. முன்னைய காலங்களில் சிங்கள- தமிழ் அரசியல் தலைவர்கள் செய்த ஒப்பந்தங்கள், கிழித்து எறியப்பட்டமை இந்த நாட்டின் கறைபடிந்த அரசியலின் ஒரு பெரும் அங்கம்.

அவை போன்ற ஏமாற்று வித்தையையே, தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று அரியாசனம், ஆட்சிக் கட்டிலில் ஏறிய நல்லாட்சி அரசு, தமிழ் தடுப்புக் காவல் கைதிகளை விடுதலை செய்வதில் கையாளும் சுத்துமாத்து மூலமும், ஏய்க்காட்டல் மூலமும் மேற் கொள்வதாகக் கொள்வதில் தப்பேதும் இல்லை.

மூன்று நாள்களுக்கு முன்னர் (செப்ரெம்பர் ஏழாம் திகதி) தமிழ்த் தடுப்புக்காவல் கைதிகளின் பிரச்சினை முற்றுமுழுதாகத் தீர்க்கப்படும் என்று அரசு உறுதி வழங்கியிருந்தது. தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளி வந்திருந்தன.

பாதிப்புற்ற தமிழ் உறவுகளினதும், ஏனைய தமிழ் மக்களினதும் உள்ளங்களைப் பூரிக்கச் செய்த அந்தத் தகவல், செயல் அளவில் தலைகீழாக மாறிவிட்டது. இந்தப் பத்தி அச்சுக்குப் போகும்வேளைவரை, தமிழ்க் கைதிகளின் விடுவிப்பு என்ற அரசின் சுத்துமாத்துக் கதை, எதனையும் நம்பமுடியாத ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது.

வெகுவிரைவில் விடுவிக்கப்படுவர் என்ற அரசின் "பம்மாத்து", இப்போதைய அவல நிலையே தொடரும், பாதகம் செய்வோர் அது குறித்து "அலட்டிக்" கொள்ள விரும்பாது, தட்டிக் கழித்துக் கொள்வர் என்ற நிலையையே உயர்த்தி வெளிக்காட்டி நிற்கிறது. பச்சைமண்ணும் சுட்ட மண்ணும் ஒருபோதும் ஒட்டிக்கொள்ளாது என்ற நிலை தொடரப் போகிறது. அவ்வளவுதான்....! வேறென் சொல்ல....?




## தமிழ் மக்கள் ஒற்றுமைக்கு வழி வகுக்கட்டும் தீபாவளி



தீபாவளிப் பெருவிழாவைக் கொண்டாடும் இந்து மத சகோதரர்கள் அனைவர்க்கும் தீபாவளி வாழத்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இத்தீபத் திருநாளானது கிறிஸ்தவர்களையும் இந்து சமயத்தவர்களையும் இன்னும் அதிக புரிந்துணர்வுடனும் அன்புணர்வுடனும் வாழ வழி செய்யட்டும்.

இவ்விழாவையொட்டி வத்திக்கானில் இருந்து பாப்பரசரின் திருப்பீட பல்சமய உரையாடல் அவையானது உலகெங்கும் பரந்து வாழும் இந்துமத அன்பர்கள் அனைவர்க்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது. அவ்வாழ்த்துச் செய்தியில் இயற்கையோடு மனிதன் கொண்டுள்ள நல்லுறவானது மனிதர்களுக்கிடையில் இருக்கவேண்டிய நல்லுறவை உறுதி செய்கிறது. இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இணைந்து அன்புறவில் சுற்றுச் சூழலைக்கட்டி எழுப்புவோம். மனிதர்களுக்கிடையே அன்புறவை உருவாக்கி அதனை எமது தொடர்புகளில் வெளிப்படுத்தி சமாதானம் என்னும் மரத்தை எம்மிடையே வளர்த்தெடுப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் மாதம் முதல் தினத்தை பாப்பரசர் பிரான்சீஸ் அவர்கள் இயற்கையை பாதுகாக்கும் உலக செபதினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். இந்த முன்முயற்சியானது இயற்கையை பாதுகாத்து வளர்த்தெடுக்கும் பணியில் எம்மை இன்னும் அதிகரிக்கட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் அனைவரின் உறுதியான ஒற்றுமைக்கு இத் தீபத் திருநாளானது வழி செய்து கிறிஸ்தவர்களையும் இந்து சமயத்தவர்களையும் இன்னும் அதிக புரிந்துணர்வுடனும் அன்புணர்வுடனும் வாழ வழி செய்யட்டும்.

**புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட்**
**ஞானப்பிரகாசம் ஆண்டகை**

## நன்மைகள் பெருகட்டும்

இலங்கைத் திருநாட்டிலும், அயல் நாடுகளிலும் வாழும் அனைத்து இந்துக்களுக்கும் எனது தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இலங்கையில் உள்ள அனை வருக்கும் விசேட விதமாக இந்த தீபத்திருநாள் தீமைகள் அழித்து, நன்மைகள் தினம் தோறும் பெருகிட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது விசேட வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து நிற்கின்றேன்.



**பா.டெனீஸ்வரன்**
**வடக்கு மாகாண மீன்பிடி**
**போக்குவரத்து அமைச்சர்.**

## எல்லோரும் மகிழ்ந்திடும் நாளாக அமையட்டும்

தீபத் திருநாளாம் தீபாவளித் திருநாளை உவகையுடனும் உற்சாகத்துடனும் அனைத்து மக்களும் கொண்டாடும் இந்த இனிய தருணத்தில் மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நரகாசுரன் எனும் கொடிய அரக்கன் தனது கொடுஞ்செயல்களால் மக்களையும் தேவர்களையும் பெருந்துன்பத்துக்கு ஆளாக்கினான். அக்கொடியவனை திருமால் அழித்த தினமே தீபாவளித் திருநாளாக கொண்டாடப்படுகிறது. தீபாவளிப் பண்டிகை தீயவற்றை நன்மை வெற்றி கொண்டதை குறித்துக் கொண்டாடப்படுகின்றது.

இந்த தீபத்திருநாள்நமக்கு அதிகமான அறிவாற்றலை வழங்கி வளர்ச்சி மற்றும் மேன்மையை அளிப்பதோடு அறியாமை எனும் இருள் அகற்றி ஒற்றுமை அர்ப்பணிப்பு உணர்வை ஏற்படுத்தி, நமது நாட்டை உச்சத்துக்கு கொண்டு செல்ல வழிவகுக்கும்.

இது சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வுக்கான மிகுந்த நம்பிக்கையை கொண்டு வருவதோடு மக்களை பிரித்து வைக்கும் எல்லா வேறுபாடுகளையும் களைந்து அவர்கள் மத்தியில் சுபீட்சத்தை ஏற்படுத்துகிறது.

இந்தத் தீபத் திருநாளில் எல்லோர் வாழ்விலும் இன்பம் பெருகிட இறைவனின் அருள் கிடைக்கட்டும். இன்று பெருகும் இன்பம் அனைவரிடமும் என்றும் நிலைக்கட்டும். இந்த விழா கொண்டாடுகிற இந்த தருணத்தில் அதர்மம் ஒழிந்து ஆதிக்க உணர்வு மறைந்து, ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டு எல்லோரும் மகிழ்ந்திடும் ஒரு விழாவாக இவ்விழா அமைய வேண்டும் என்று இந்நன்னாளில் வாழ்த்துகிறேன்.

**டி.எம்.சுவாமிநாதன் புனர்வாழ்வளிப்பு,**
**மீள்குடியேற்றம் மற்றும்**
**இந்துமத அலுவல்கள் அமைச்சர்.**

# கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ வழிகாட்டும் கேதாரகௌரி விரதம்



கேதார கௌரி விரதம் புரட்டாதி மாதப் பூர்வபக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபரபக்கச் சதுர்த்தசியில் நிறைவு பெறும். உலக மாதாவாகிய சக்தி சிவபெருமானை நோக்கிச் சிவபூசை செய்து இந்த விரதத்தை நோற்றுப்பெரும் பேற்றினை அடைந்தாள். நினைத்ததைத் தருகின்ற சக்தி விரதங்களுள் மகிமை வாய்ந்த விரதம் கேதார கௌரி விரதமாகும்.

இருபத்தொரு தினங்கள் சக்தியை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இந்த விரதத்தை இருபத்தொரு தினங்களும் அனுஷ்டிக்க இயலாதவர்கள் சதுர்த்தசி தினத்திலாவது கேதார நாதரை வேண்டி அனுஷ்டிக்கலாம்.

சர்வமும் சிவமயமே என்ற கொள்கையுடையவர் பிருங்கி என்னும் நாமத்தையுடைய முனிவர். இவர் திருக்கைலாயத்திலே சிவனை வழிபடுவதற்காக சென்றிருந்த வேளை அங்கே சிவன் தனித்திருக்காது பார்வதி பரமேஸ்வரராகக் காட்சியளிப்பதைக் கண்டார். சிவனை மட்டும் எப்பொழுது வணங்கிவரும் பிருங்கி முனிவர் வண்டுருத்தாங்கி பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். அம்மையைத் தவிர்த்து விட்டார். முப்பத்து முக்கோடி தேவர்களும் அம்மை அப்பன் இருவரையும் வலம் வந்து வணங்கி நிற்க, பிருங்கி முனிவர் சிவபெருமானை மாத்திரம் வலம் வந்து வணங்கி நின்றமையும் உலக மாதாவாகிய பார்வதி தேவியைப் புறக்கணித்தமையும் அம்மையை ஆத்திரங் கொள்ளச் செய்தன.

இதனால் பார்வதிதேவி பிருங்கி முனிவரை சக்தியற்றவராகவும், ஆற்றலில்லாதவராகவும் ஆக்கிவிட்டார். ஆற்றலை இழந்த முனிவர் மூர்ச்சையானார். முனிவர் மூர்ச்சை தெளிந்ததும் இறைவனே ஊன்றுகோல் கொடுத்து அவரை இருப்பிடம் சேர்த்தார்.

பார்வதி தேவியார் இவற்றையெல்லாம் கண்ணுற்று தாம் வேறு வேறாக அன்றி இறைவனின் இடப்பாகத்தில் ஒரே வடிவில் இருந்தால் இத்தகைய நிலைமை வந்திருக்காது என்பதை உணர்ந்து பூலோகம் சென்று சிவபெருமானின் உடலில் வாமபாகத்தை வேண்டித் தவம் இயற்றினார்.

கௌதம முனிவரின் ஆலோசனைப்படி உமையம்மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வரர் விரதத்தை முறையாக அனுஷ்டித்தார். பரமசிவன் எழுந்தருளி உமையம்மையைத் தமது வாமபாகத்தில் அமர்த்திக் கொண்டார். இறைவன் அர்த்தநாரீஸ்வரர் ஆயினார். பாதிஆண், பாதி பெண் ஆகவுள்ள சிவமூர்த்தமே அர்த்தநாரீஸ்வரர் வடிவம் ஆகும்.

அப்பொழுது இறைவி இறைவனை நோக்கி இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர் நீண்ட ஆயுளையும் சற்புத்திர பேற்றையும் சகல செல்வங்களையும், குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்று இறுதியில் தேவரீர் திருவடித் தாமரைகளையும் அடைவதற்குத் திருவருள் புரிய வேண்டும்"என வேண்டினார். இறைவனும் அவ்வாறு அனுக்கிரகம் செய்து தேவியோடு அர்த்தநாரீஸ்வரராகத் திருக்கயிலாயத்துக்கு எழுந்தருளினார்.

பிருங்கிமுனிவரும்சிவனும்சக்தியும் ஒன்றெனஉணர்ந்து பழைய உருவைப் பெற்றார். சிவமும் சக்தியும் ஒன்றென உலகத்தவர்க்குக்காட்டவே இந்தத்திருவிளையாடல் நடந்தது. குடும்பத்தில் கணவனும் மனை வியும் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழ வேண்டிய கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கப் படுகிறது. அடுத்து திருமணமாகாத கன்னிப்பெண்களும் தமக்கொரு நல்ல கணவன் கிடைக்க வேண்டுமென நினைத்து அனுஷ்டித்தால் திருமணம் நிறைவேறுகிறது. குடும்பம் சீரோடும் சிறப்போடும் செழிப்போடும் சுகத்தோடும் அமைதியுடனும் வாழ சிவசக்தி வழிபாடுமிகவும் அவசியமானதாகும்.

இத்தகு மகிமை வாய்ந்த விரதத்தை அனுஷ்டித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்**
**பணிப்பாளர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்**




# உலக நாடுகளில் தீபாவளி

தீபாவளி... ஆஹா.. இந்தப் பெயரைக் கேட்டவுடன் மனக் கண்களாலே வான வேடிக்கைகளை இரசிக்கிறோம்; நினைவாலேயே இனிப்புக்களை ருசிக்கிறோம்!. தீய பாவங்கள் பலவற்றைச் செய்த கொடிய அரக்கனான நரகாசுரன், கிருஷ்ணபகவானால் அழிக்கப்பட்டு, மக்களின் இன்னல்கள் போக்கப்பட்ட தினம், இராமபிரான் தனது இலங்கை வனவாசத்தை முடித்துக் கொண்டு (இராவணனோடு கடும் போர் புரிந்து சீதா பிராட்டியாரை மீட்டுக் கொண்டு) அயோத்திக்குத் திரும்பி வந்த தினம்... இவ்வாறு தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து கொண்டாடும் தீபாவளி (தீபு ஆவளி - ஆவளி என்றால் வரிசை என்று பொருள்) பண்டிகை, வெவ்வேறு காரணங்களைக் கொண்டு கொண்டாடப்பட்டு வந்தாலும், 'தீமைகள் ஒழிந்து நன்மைகள் மலர வேண்டும்' என்ற சாரத்தைப் பறைசாற்றுவதாலேயே, உலக நாடுகள் முழுவதும் இந்தப்பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**மொறீஷியஸ்**

இந்தத் தீவில் உள்ள மக்கள் தொகையில் 63 சதவிகிதத்தினர் இந்தியர்கள்! இங்கே தீபாவளி எவ்வாறு கொண்டாடப்படும் என்று சொல்ல வேண்டுமா என்ன? இந்தியாவில் கொண்டாடப்படும் முறைகளிலேயே சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவில்கடைக்கொள்ளப்படுவது போன்றே, அதிகாலை துயிலெழுந்து, எண்ணெய்த் தேய்த்துக் குளித்து, புத்தாடைஅணிந்து,தீபங்களைஏற்றித்தொழுது, உற்சாகத்துடன் பட்டாசுகளை வெடித்து, இனிப்புக் களையும் வாழ்த்துக்களையும், நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் பகிர்ந்து இங்கேதீபாவளிகொண்டாடப்படுகிறது.

**நேபாளம்**

இமாலயப் பிரதேசத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்த நாட்டில், தீபாவளி ஐந்து நாள்கள் கொண்டாடப்படுகின்றது. வாண வேடிக்கைகளும், தீபங்களும் ஒளிரும் இந்தப்பண்டிகை, செல்வங்களை அள்ளிக் கொடுக்கும் தெய்வமான லஷ்மியை வரவேற்பதற்காகவும் இங்கே கொண்டாடப்படுகிறது.

**மலேசியா**

வேற்றுமைகளின் இருப்பிடமாகத் திகழும் இந்த நாட்டில், இந்தப் பண்டிகையை 'ஹரி தீபாவளி' என்று அழைக்கும் மலேசியர்களில் பலரும், தென் இந்திய முறைப்படியே கொண்டாடுகின்றனர்.

**இந்தோனேஷியா**

இந்தோனேஷியாவில் உள்ள பாலி பகுதியில் கொண்டாடுப்படும் 'தீபாவளி' பிரசித்தி பெற்றவை.

**சிங்கப்பூர்**

மதம் என்ற உணர்வு மறக்கப்பட்டு, அனைத்துத் தரப்பினராலும் கொண்டாடப்படுவதே 'தீபாவளி'. இதற்கு மிகச் சிறந்த சான்றாகத் திகழும் நாடுதான் 'சிங்கப்பூர்'! நாடு முழுவதும் விழாக் கோலம் பூண்டிருக்கும் இந்த நன்னாளில், வெடிக்கும் பட்டாசுகளுக்குத் தடை (மாசுபாடு காரணமாக) விதித்திருப்பதால், வாண வேடிக்கைக்களால் மட்டுமே தீபாவளி ஜொலிக்கும். தீபாவளியையொட்டி விசேட பூசைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**தென் ஆபிரிக்கா**

பல்வேறு நாடுகளின் கலாசாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நாடுகளில் குறிப்பிடத்தக்கது தென் ஆபிரிக்கா. இங்கு இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். இதன் காரணமாகவே, இந்தியாவில் கொடுக்கப்படும் முக்கியத்துவத்துக்கு இணையாக, தென் ஆபிரிக்காவிலும் தீபாவளி பண்டிகைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

**இங்கிலாந்து**

இந்தியர்கள் பெரும்பாலானோர் வசிக்கும் இங்கிலாந்தில், அனைத்துப் பண்டிகைகளின்போது கூடுவது போன்றே தங்களுக்கான அமைப்பில்கூடி, விழாக்களைச் சிறப்பான வகையில் கொண்டாடுகின்றனர். இந்த நன்னாளில் இந்தியப் பாரம்பரிய உடைகளை அணிந்துகொண்டு, தங்கள் பகுதிகளிலுள்ள லஷ்மி கோயிலுக்குச் சென்று வருவது வழக்கம்.

**அமெரிக்கா**

இந்தியர்களின் பாரம்பரியத்தை தாங்களும் பின்பற்ற வேண்டும் என்ற விழைவு கொண்டவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்கர்கள் எனலாம். அமெரிக்காவில்வசிக்கும் இந்தியர்களுடன் இணைந்து பலரும் தீபாவளியை அதன் பாரம்பரியம் மாறாமல் கொண்டாடி வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட நாடுகள் மட்டுமன்றி உலகில் பல்வேறு பகுதிகளிலும் தீபாவளி சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தப் பண்டிகை கொண்டாடப்பட்டு வரும் முறைகளில் வேண்டுமானால் சில வேறுபாடுகள் இருக்கலாம் கணிப்பொறியில் மட்டுமே வாண வேடிக்கையைக் கண்டு ரசித்து மகிழலாம்! ஆனால், உலக அளவில் சகோதரத்துவத்தை வளர்க்கும் பண்டிகைகளில் குறிப்பிடத்தக்கதான தீபாவளி, நவீன நரகாசுரன்களாகத் திகழும் பயங்கரவாதம், வன்முறை, வறுமை போன்ற தீயனவற்றையும் ஒழிக்க நமக்குத் தூண்டுகோலாய் அமைகிறது!

**இணையவள்**

# உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி

தெய்வத் திருவருள் பெறுவதற்கு விரதங்கள் பெரிதும் துணை புரிகின்றன. பண்டிகைக் காலங்களில் வரும் விரதங்களை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சி மட்டுமன்றி, மனஅமைதியும் கிடைக்கிறது. இந்த வகையில் தீபாவளிப் பண்டிகை மிகவும் பிரசித்தமானது. நாடு முழுவதும் வயது வித்தியாசம் இன்றி சிறுவர் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடும் பண்டிகை. சாதாரணமாக அமாவாசையில் பல வழிபாடுகள் செய்வது இந்துக்களின் வழக்கம். துலாம் ராசியில் சூரியன் இருக்கும்போது வரும் அமாவாசையில் தான் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. கிருஷ்ண பரமாத்மாவிடம் நரகாசுரன் கேட்ட வரத்துக்காக அவன் நினைவாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. இராவணனை விஜயதசமி நாளில் வதம் செய்த ராமபிரான் வனவாசம் முடிந்து தீபாவளியன்று தான் அயோத்தி திரும்பியதாக கூறப்படுகிறது. அகிம்சையின் அடையாளமாக விளங்கிய மகாவீரர் நிர்வாணம் அடைந்த நாளும் இதுதான். எமது மனதில் உள்ள கோபம், அகங்காரம், ஆணவம், பொறாமை போன்ற தீய குணங்கள் எரிந்துபோக வேண்டும் என்பதற்காக எண்ணெய் தேய்த்து குளித்துப் புத்தாடை உடுத்தி பட்டாசு, வாணவேடிக்கை, வெடி வெடித்து குடும்பத்துடன் உற்றார், உறவினர், நண்பர்களுடன் மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் பகிர்ந்துகொள்வதே இதன் சிறப்பு அம்சம்.

தீபாவளி அன்று விரதம் முடித்து நோன்பு எடுப்பது முக்கிய நிகழ்வாகும். இந்த நோன்பு பரம்பரை பரம்பரையாக குடும்ப வழக்கப்படி செய்யப்படும் முக்கிய வழிபாடாகும். சிவனுக்குரிய அஷ்ட மகா விரதங்களில் கேதார கௌரிவிரதம் மிகவும் முக்கியமானதாகும். சக்தி ரூபமான பார்வதிதேவி சிவனை நினைத்து கடும் தவம் புரிந்து சிவனின் உடம்பில் ஐக்கியமாகி அர்த்தநாரியாக பாதி உடம்பைப் பெற்ற விரதமாகும். இந்த நோன்பு சரியாக ஒக்ரோபர் மாத அமாவாசையில் வருகிறது. 21நாள்கள் விரதம் இருந்து தீபாவளி அமாவாசையன்று விரதத்தைப் பூர்த்தி செய்வார்கள். தற்கால சூழ்நிலையில் அவ்வளவு நாள்கள் எவரும் கடைபிடிப்பதில்லை. தீபாவளிக்கு சில நாள்கள் முன்பு விரதம் இருந்து நோன்பு தொடங்குவார் கள். நோன்பு நிறைவேறும் தீபாவளி நாளில் கும்பம் வைத்து காமாட்சி அம்மன் விளக்கேற்றி பழவகைகள், பூக்கள், தேங்காய், வெற்றிலை பாக்கு இனிப்பு வகைகள் வைத்து படைப்பார்கள். அப்பமும், அதிரசமும்தான் இதில் முக்கிய இனிப்பு வகைகள் ஆகும். 21 அப்பம், 21அதிரசம் வைத்து அதனுடன் நோன்பு கயிற்றையும் வைப்பார்கள். பூசை முடிந்த பிறகு, வந்திருப்பவர்களுக்கு பிரசாதமும், நோன்புக் கயிறும் கொடுத்து உபசரிப்பார்கள். பக்தி சிரத்தையுடன் கேதார கௌரிவிரதம் இருந்து பூசை செய்யும் பெண்களுக்குத் தீர்க்க சுமங்கலி பாக்கியமும், சற்புத்திர யோகமும் கிட்டும் என்பது ஐதீகம். இந்த விரதம் மேற்கொண்டால் கணவன் அல்லது மனைவி இடையே மாறாத அன்பு என்னென்றும் நிலைத்திருக்கும். தம்பதி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மறையும். அந்நியோன்னியம் அதிகமாகும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேர்வார்கள். குடும்பத்தில் அன்பும், மகிழ்ச்சியும் தழைக்கும் என்பது நம்பிக்கை. தீபாவளி நன்னாளில் கேதார கௌரி விரத பூசை செய்து சகல நலன்களும் மகிழ்ச்சியான வாழ்வும் பெறுவோமாக.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 6 | | | 4 | | | 2 |
| 5 | | | 6 | | | | | |
| 7 | | | | 9 | | | 1 | |
| 9 | | | | | | | 2 | |
| 2 | 8 | | 7 | 4 | 9 | | 5 | 6 |
| | 6 | | | | | | | 3 |
| | 1 | | | 5 | | | | 8 |
| | | | | | 2 | | | 9 |
| 8 | | | 4 | | | 2 | 3 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக் உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### நல்லொழுக்கம் தெய்வீக இயல்பை வளர்க்கும்

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். மிருக இயல்பு, மனித இயல்பு, தெய்வீக இயல்பு என்ற மூன்றுவிதமான இயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். இதில் தெய்வீக இயல்பை வளர்ப்பது ஒழுக்கமாகும். சாவு என்பது மிக உறுதியாக இருக்கும்போது, நல்ல ஒரு செயலுக்காக நமது உயிரைத் தியாகம் செய்வது மேலானது.

## வெறும் வயிற்றில் இளநீர் சாப்பிடாதீர்கள்!



இயற்கை அளித்துள்ள வரப்பிரசாதமான இளநீர் வெப்பத்தைத் தணித்து, ஜீரண சக்தியை அளிக்கும். இளநீர் குடித்தால் குருதி சுத்தமடைவது மட்டுமல்லாமல், கல்லீரல் நன்றாக இயங்கவும் உதவுகிறது. பெண்களின் மாதவிலக்கின்போது அடிவயிறு வலிக்கும். அதற்கு இளநீர் சிறந்த மருந்து. பேதி சீதபேதி ஆகும்போது பிற உணவுகளைத் தவிர்த்து விட்டு உடனடியாக இளநீர் பருகிவர, உடல் அசதி, மயக்கம் வராது. சிறுநீரகக்கல், சதையடைப்பு, சிறுநீர்க்குழாய்ப் பாதிப்புப் போன்ற கோளாறுகள் வந்துவிட்டால் முதல் மருந்தே இளநீர்தான். மலேரியா, மஞ்சள் காமாலை, அம்மை நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்படும் போது இளநீரைத் தாராளமாகக் குடிக்க வேண்டும். அறுவைச் சிகிச்சைகளுக்குப் பின்னர் திரவ உணவு மட்டுமே சாப்பிட வேண்டிய சமயங்களில் இளநீருக்கு முன்னுரிமை வழங்கி உபயோகித்தால் அறுவைச் சிகிச்சைப் புண் விரைவில் குணமடையும். இவ்வளவு நன்மைகளை மனிதனுக்கு வழங்கும் இளநீரை வெறும் வயிற்றில் குடிப்பதால் உடலில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஏனெனில் தூங்கி எழுந்தவுடன் வயிறு சற்றுச் சூடாக இருப்பதால், இளநீரில் உள்ள அமிலத் தன்மை வயிற்றில் புண்களை உருவாக்கும். ஏதாவது உணவு எடுத்த பின்னரே இளநீரைச் சாப்பிட வேண்டும். இதனால், குருதியில் சர்க்கரையின் அளவும் கூட அதிகரிக்கும் அபாயம் இருக்கிறது. மேலும், வெறும் வயிற்றில் குடிக்கும்போது, இளநீரில் உள்ள அதிகப்படியான பொட்டாசியம், குளுக்கோஸ் போன்ற தாதுக்கள் வெளியேற முடியாமல் சிறுநீரகத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடலாம். எனவே, உணவு இடை வேளையில் தான் இளநீர் அருந்த வேண்டும். அதுவும் வெட்டியவுடன் இளநீரைக் குடித்துவிட வேண்டும், இல்லையெனில் உணவு விஷமாதல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 60 | 80 | 60 | 80 | 60 | 40 |
| கத்தரி | 120 | 120 | 120 | 100 | 120 | 160 | 70 |
| கரட் | 120 | 120 | 60–120 | 120 | 200–220 | 120 | 180 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 50 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 160 | 160–240 | 180 | 200 | 220 | 200 |
| பாகல் | 300 | 260 | 240 | 240 | 240 | 300 | 200 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 100 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 150 | 140 | 160 | 160 | 130 | 150 | 140 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 120 | 140 | 120 | 160 | 130 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 | 40 | 80 | 50 |
| தக்காளி | 160 | 140 | 160 | 160 | 140 | 200 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 40 |
| கீரை | 40 | 50 | 40 | 30 | 40 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 480 | 800 | 450 | 500 | 600 | 420 |
| புடோல் | 120 | 100 | 100 –120 | 100 | 80 | 120 | 100 |
| கோவா | 100 | 120 | 80 | 120 | 140 | 160 | 120 |
| வெண்டி | 120 | 120 | 120 | 100 | 120 | 120 | 80 |
| போஞ்சி | 250 | 240 | 200 | 240 | 220 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 180 | 100 | 120 | 120 | 160 | 90 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40 | 60 | 45 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 | 120 | 120 | 130 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 350 | 400 | 600 | 250 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 10 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 200 | 180 | 200 | 240 | 220 | 280 | 200 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 200 | 160 | 180 | 80 | 140 | 200 | 200 |

## நாளை

**ஐப்பசி-25**
**புதன்கிழமை**
**(11.11.2015)**

திதி:
அமாவாசை மு.இ.11.35 வரை
நட்சத்திரம் :
சுவாதி பி.ப. 2.25 வரை
சுபநேரம்:
04.36–06.06 வரை
இராகு காலம்:
12.06–01.36 வரை




| | சாவகச்சேரி | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | யாழ்ப்பாணம் | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 520 |
| நண்டு | 200 | 400 | 200 | 400 | 300 | 450 |
| கணவாய் | 650 | 600 | 400 | 600 | 700 | - |
| பாரை | - | 500 | 350 | 500 | 500 | 450 |
| சுறா | 1000 | 500 | 350 | 600 | 800 | - |
| சீலா | - | 400 | 300 | 400 | 400 | - |
| விளை | 500 | 400 | 260 | 300 | 500 | 300 |
| முரல் | 200 | 250 | 250 | 300 | 400 | - |
| கும்பிளா | 400 | 300 | 200 | 400 | 300 | - |
| கிழாக்கன் | - | 800 | - | 500 | - | - |
| ஒரா | 500 | 300 | 220 | 450 | - - | 300 |
| திரளி | 100 | 200 | 150 | 300 | 200 | 250 |
| நகரை | 200 | 200 | 100 | 100 | 200 | 250 |
| சூடை | 200 | 100 | 50 | 120 | 100 | - |
| ஒட்டி | - | 150 | 180 | 300 | 200 | 200 |
| திருக்கை | 300 | 300 | 150 | 350 | 200 | - |
| பாலை | - | 200 | - | 400 | - | 150 |
| வாளை | 50 | 150 | 150 | 300 | - | - |
| கொய் | 50 | 100 | 40 | 120 | 50 | - |
| மதனம் | - | 200 | 130 | 250 | - | - |



## மின்னல் வேகத்தில் பயணிக்கும்
# அதி நவீன ரக விமானம்

லண்டனிலிருந்து நியூயோர்க்குக்கு 30 நிமிடங்களில் சென்றடையக்கூடிய ஜெட் விமானம் ஒன்றை கனடாவைச் சேர்ந்த பொறியியலாளர்கள் வடிவமைத்துள்ளனர்.

இது ஒலி அலையை விடவும் 10 மடங்கு வேகமாகவும், கொன்கோட் விமானத்தை விட 5 மடங்கு வேகமாகவும் பறக்கக்கூடியதாக இருப்பதுடன், 75 பயணிகளை ஒரே நேரத்தில் தாங்கிச் செல்லக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

அதாவது மணிக்கு 12,250 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடிய இந்த விமானம் ஹைட்ரிஜனில் இயங்கக்கூடியவாறு இருக்கின்றது.

இதேவேளை இவ்வாறானதொரு ஜெட் விமானத்தை வடிவமைத்து விண்வெளி பயணத்துக்கு பயன்படுத்துவதற்கு நாசா நிறுவனம் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மர நடுகை மாதம்
## உணவுப் பயிர்களைப் பயிரிடுவோம்

*"எவரொருவர் ஒரு மரத்தை நடுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நடுபவர் ஆவார்."*

*லியூசி லார்கோம் (அமெரிக்கக் கலைஞர்)*

உணவு நெருக்கடிக்கு, பற்றாக்குறைக்கு பல காரணங்கள் உள்ளன. சரியான கொள்கையும், முகாமைத்துவம் இன்மையும் பிரதான காரணமாக அவதானிக்கப்படுகின்றது. ஆசிய நாடுகள் பலவும், கைத்தொழில்களில் முதலீடுகளை அதிகரித்து, விவசாயத்தின் மீது குறைந்தளவு கரிசனை காட்டுகின்றன. ஆசிய நாடுகள் தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப பொருள்கள் உற்பத்தி மற்றும் கைத்தொழிலில் அதீத கவனம் செலுத்துகின்றன. எவ்வாறாயினும் விவசாயத்துறையிலும் கவனம் செலுத்தி தோட்ட நிலங்களில் விவசாய உற்பத்திகளில் முதலீடு அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை உணரவேண்டும். அநேகமான ஆசிய நாடுகள் விவசாயத்தைப் பலமான அடித்தளமாகக் கொண்டவை. ஆனாலும் இந்தப் பெறுமதியான சொத்தான விவசாயத்தைப் பாதுகாத்து, உணவுப் பற்றாக்குறையை இவற்றால் ஏன் போக்க முடியவில்லை என்பது தெரியவில்லை. இன்றைய உணவு முறைமைக்கமைய விவசாயிகள் சந்தையில் கேள்விகோரல் அதிகளவு உள்ள உணவுப் பயிர்களையே உற்பத்தி செய்கின்றனர். இந்த நிலையில் எமது பிரதேசத்தில் விளைச்சலை ஏற்படுத்தக்கூடிய, உணவுப் பயிர்களை உற்பத்தி செய்து அந்தவகை உணவுகளை உட்கொள்ளப் பழகிக் கொள்ளவேண்டும். எமது முன்னோர் விரும்பி உண்ட ஒடியற் கூழ், ஒடியற் பிட்டு, தினைச்சோறு, பயறு, உழுந்து, உணவு வகைகள் எமது நிலத்திலேயே உற்பத்தியாகக் கூடியவை. உடல் நலத்துக்கும் உடல் உறுதிக்கும் உகந்தவை. வேலி ஓரங்களில் வளரும் முல்லை, முசுட்டையும் உடலுக்கு இன்றியமையாதவை. இந்த மாரிகாலத்துடன் எமது நிலங்களில் விளையத்தக்க உப உணவுப் பயிர்களை பயிரிடுவோம். பாகற்கொடி, வட்டக்கத்தரி, சுண்டங்கத்தரி என்பனவும் ஓரளவு வறட்சியையும் தாங்கி வளர்ச்சியடையும். பெருமளவு பணம் செலவழியாது. போதியளவு ஊட்டச் சத்தை வழங்கும் இத்தகைய உணவுப் பயிர்களை,நாம் காலமறிந்து பயிரிட வேண்டும். அது ஒரு பண்பாடாக மலரவேண்டும்.

**செ. செல்வராசா**

# சம்சுங் அறிமுகம் செய்யும் நவீன டப்லட்



முன்னணி மொபைல் சாதன வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றான சம்சுங் சில தினங்களுக்கு முன்னர் சம்சுங் கலெக்சி வியூ (Samsung Galaxy View) எனும் புத்தம் புதிய டப்லட்டினை அறிமுகம் செய்துள்ளது.


இந்த டப்லட் வைபை (WiFi) தொழில் நுட்பத்தை மாத்திரம் கொண்டதாகவும், வைபை மற்றும் எல்ரீஈ (LTE) தொழில் நுட்பத்தைக் கொண்டதாகவும் இரு பதிப்புக்களை வெளியிட்டுள்ளது.

இவற்றில் வைபை தொழில் நுட்பத்தைக் கொண்ட டப்லட்டின் விலை 599 டொலர்கள் ஆகவும், வைபை மற்றும் எல்ரீஈ தொழில் நுட்பத்தைக் கொண்ட டப்லட் 699 டொலர்களாகவும் காணப்படுகின்றது.

மேலும் இந்த டப்லட்டின் சிறம்பம்சங்களாக 18.4 அங்குல அளவு, 1920 மு 1080பிக்சல் றெசலூசன் (Pixel Resolution) உடைய தொடுதிரை, 1.6GHz வேகத்தில் செயல்படக்கூடிய ஒக்ராகோர் புறொசெஸ்ஸர் (Oocta Core Processor) பிரதான நினைவகமாக 2GB RAM என்பனவற்றுடன் சேமிப்பு நினைவகமாக 32GB மற்றும் 64GB தரப்பட்டுள்ளன.

தவிர அன்றோய்ட் 5.1 லொலிப்பொப்(Androi-5.1 Lollipop) இயங்குதளத்தில் செயல்படக் கூடியதாகவும், 5700அன்றொய்ட் -5.1 லொலிபொப் mA மின்கலத்தை உள்ளடக்கியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் கழுதைகளின் நடமாட்டம் அதிகரிப்பு



மன்னார்,நவ.10

மன்னாரில் கழுதைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளளோடு மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில் கழுதைகள் வேகமாக ஓடித்திரிவதால் விபத்துக்கள் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகமான கழுதைகள் உள்ளன. குறித்த கழுதைகள் மன்னார் நகர் பகுதியில் ஒன்றோடு ஒன்று சண்டை பிடிப்பதோடு அதிவேகமாக ஓடுகின்றன. இதனால் கழுதைகளின் தாக்குதல்களுக்கு பாதசாரிகள் உள்ளாவதோடு, விபத்துக்களும் ஏற்படுகின்றன. மன்னாரில் உள்ள கழுதைகளைப் பராமிப்பது தொடர்பாக, மன்னாரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று வெளிநாட்டுப் பணத்தைப் பெற்று நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றபோதும் உரிய முறையில் கழுதைகள் பராமரிக்கப்படுவதில்லை என மன்னார் மக்களும் சமூக ஆர்வலர்களும் விசனம் தெரிவித்துள்ளனர். தற்போது மன்னார் பகுதியில் பல நூற்றுக்கணக்கான கழுதைகள் உள்ளன. எனவே குறித்த கழுதைகளைப் பராமரிக்க உரிய அதிகாரிகள் முன் வர வேண்டும் என வும் குறிப்பாக கழுதைகளின் தாக்குதல்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க அதிகாரிகளும், மன்னார் நகர சபையும் உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-56)

# பனை வளத்தைப் பாதுகாக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மாரிமுத்து கணபதிப்பிள்ளை தெரிவிப்பு

தமிழர் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கும் பனை வளத்தை அழியவிடாது பாதுகாக்க வேண்டியது அனைவரதும் தார்மிகக் கடமையாகும். இதன் அபிவிருத்திக்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மாரிமுத்து கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி தொடர்பான பணியாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கும் போது; பனையை நம்பி வாழுகின்ற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் பனை வளத்தில் இருந்து வருடாந்தம் பெருமளவிலான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிகின்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வரும் இந்தப் பனைவளத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு சகலரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தற்போதைய நிலையில் நவீன திட்டங்கள் ஊடாக பனை வளத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உரிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. குறிப்பாக மீள்குடியேற்ற அமைச்சுடன் கலந்துரையாடி வடக்கில் பனை வளத்தை விருத்தி செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனைவிட பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பனம் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்தவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, பனை ஆராய்ச்சி நிலையத்தின் சேவை மேலும் விரிவுபடுத்தப் படும். அத்துடன் வடக்கில் உள்ள பனை தென்னை கூட்டுறவு சங்கங்கள் ஊடாகவும் எமது பிரதேசத்தில் பனம்பொருள் உற்பத்தி மேலும் அதிகரிக்கப்படும். இதற்கென சம்பந்தப்பட்ட சங்கங்கள் விரைவில் அழைக்கப்பட்டு இது தொடர்பான விரிவான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படும். இந்த வளர்ச்சிக்கு மீள்குடியேற்ற அமைச்சுடன் விரிவாக கலந்துரையாடி அதற்கான நிதி வளத்தைப் பெற்று சங்கங்கள் ஊடாக பெரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஆலோசிக்கப்பட்டுள் ளது. பனை வளத்தை நம்பியிருக்கும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதன் மூலம் நன்மையடைவார்கள் எனவும் தெரிவித்தார். (ஐ-17)


# பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பாராட்டத்தக்க புது முயற்சி



மட்டக்களப்பு,நவ.10

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நாளாந்தம் ஏற்படும் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்காக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக காத்தான் குடி நகர சபை, ஆரையம்பதி பிரதேச சபை ஆகியவற்றின் எல்லைக்குட் பட்ட பிரதான வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக் காலி மாடுகளைப் பிடிக்கும் அதிரடி நடவடிக்கையில் காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரு தினங்களில் மேற்படி நகர சபை, பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் பிரதான வீதிகளில் அலைந்து திரிந்த 9 கட்டாக் காலி மாடுகளைப் போக்குவரத்துப் பொலிஸார் பிடித்துள்ளனர். குறித்த கட்டாக்காலி மாடுகளினால் வீதி விபத்துக்கள் இடம் பெறுவதா கவும், இதனால் கட்டாக் காலி மாடுகளை வீதிகளில் அலைந்து திரிய விட வேண் டாம் என காத் தான் குடிப் போக்குவரத்து பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-10)

# ஓட்டப்பந்தயத்தில் தோற்ற முயல்




ஒரு நாள் முயலாருக்கு ஆமையாரைக் கேலி செய்ய வேண்டுமென்று ஒரு எண்ணம் தோன்றியது. "நாம் இருவரும் ஓட்டப் பந்தயமொன்றில் ஈடுபடுவோமா? முயல் ஆமையாரைப் பார்த்துக் கேட்டது . 'ஓடுவோம்; என ஆமை தயங்காமல் பதிலளித்தது. இருவரும் ஓட்டப்பந்தயத்தை ஆரம்பித்தனர். முயல் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து பாய்ந்து வேகத்துடன் ஓடியது. சிறிது தூரம் சென்றவுடன் முயலாருக்குக் களைப்பாக இருந்தது. அந்த வேளையில் முயலாருக்கு ஒரு யோசனை தோன்றியது. ஆமையாரின் பயணம் மெதுவாகத்தானே தொடரப் போகின்றது. அதனால் 'கொஞ்சம் நின்று ஏதாவது சாப்பிட்டு விட்டு மீண்டும் ஓடலாம்' என நினைத்தார் முயலார். வயிறார உண்டுவிட்டு மரத்தடியில் சாய்ந்த முயலாருக்கு நன்றாகத் தூக்கம் வந்தது. மெல்ல மெல்ல வந்த ஆமையார் முயலாரையும் முந்திக் கொண்டு வெற்றிக் கம்பத்தை அண்மித்தது. முயலாரோ ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தது. கடைசியாக முயலார் எழுந்து பார்க்கும் போது ஆமை ஓட்டப் போட்டியில் வென்றிருந்தது.

*ச.திருயினி,*
*மல்லாவி மத்திய கல்லூரி.*

## வர்ணம் தீட்டலாம் வாங்க



## உங்களுக்குத் தெரியுமா?

1. அமெரிக்க காந்தி என அழைக்கப்படுபவர் யார்?
   மார்ட்டின் லூதர் கிங்
2. உலகில் மிகப் பெரிய கோடீஸ்வரர் யார்?
   பில்கேட்ஸ்
3. எவரெஸ்ட் சிகரம் எவ்வளவு அடி உயரம் கொண்டது?
   26,724 அடி உயரம்
4. ஜேர்மனியை ஆண்ட சர்வாதிகாரி யார்?
   அடல்ப் ஹிட்லர்
5. நேபாளத்தின் தேசிய விலங்கு எது?
   பசு
6. "தெற்கே உள்ள பிரித்தானியா" என அழைக்கப்படும் நாடு எது?
   நியூஸிலாந்து
7. உலகில் எத்தனை வகையான வௌவால்கள் உள்ளன?
   21வகையான வௌவால்கள்
8. ஒரு யானையின் சராசரி எடை எவ்வளவு?
   5 தொன்கள்
9. பிரகலாதனை இரட்சிக்க கிருஷ்ணர் எடுத்த அவதாரம்?
   நரசிம்மர்
10. உடலின் மிகவும் குளிர்மையான பகுதி?
    மூக்கின் நுனிப்பகுதி

பி.சேயோன்,
தரம் 5 ,
அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.

# மகிழ்ச்சியான வாழ்வு எங்கே கிடைக்கும் ?

அறிவியலின் அனைத்துப் பிரிவுகளிலும் புதிய பரிமாணங்கள் எட்டப்படுவது போலவே, மகிழ்வியலிலும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றன. நாம் எல்லோருமே மகிழ்ச்சி நிறைந்த வாழ்வுக்குத்தான் ஆசைப்படுகிறோம். சரி. மகிழ்ச்சி என்றால் என்ன ?

1.நீங்கள் சாவுப்படுக்கையில் இருக்கும்போது ஒரு சின்னக் கணக்குப் போடுவதாக வைத்துக் கொள்வோம். உங்கள் வாழ்வின் மொத்த சந்தோசமான நிமிடங்களின் கூட்டுத் தொகை, உங்கள் வாழ்வில் வருத்தமான நிமிடங்களின் கூட்டுத் தொகையை விட அதிகமாக இருந்தால் நீங்கள் மிக மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்ததாகக் கொள்ளலாம்.

2."இந்தக் கணக்கெல்லாம் எனக்குச் சரியாக வராது. மற்றவர்களுக்கு பயனுள்ள வகையில் வாழ்ந்த திருப்தியான வாழ்வே போதும். அதுவே எனது மகிழ்ச்சி" என்று சொல்பவர்களும் உண்டு.

சரி, மகிழ்ச்சியைப் பற்றிய புதிய ஆராய்ச்சி முடிவுகள் என்ன சொல்கின்றன ? மகிழ்ச்சி பற்றிய மதிப்பீடுகள் மனிதருக்கு மனிதர் வேறுபட்டாலும் மகிழ்ச்சியான வாழ்வு வேண்டும் என்று விரும்பும் குறிக்கோள் அனைவருக்கும் பொதுவானது தான். மனோதத்துவ நிபுணர்கள் சொல்வதென்ன? மகிழ்ச்சியான வாழ்வென்பது 50 சதவிகிதம் எமது கட்டுப்பாட்டில் இல்லை. போச்சுடா என்று அலுத்துக் கொள்ளும் முன்னர் அது எப்படி என்று பார்ப்போம். எமது மற்ற பண்புகளைப் போலவே மகிழ்ச்சியான மன நிலை கூட மரபணு சார்ந்த விடயம் தான். உங்கள் பெற்றோர் எவ்வளவு மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்தார்கள் என்று ஆராய்ந்து கொண்டிருப்பதை விட நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக வாழக் கற்றுக் கொண்டால் உங்கள் குழந்தைகளுக்கு அந்தப் பண்புகள் போய்ச் சேரும்.





சரி மீதமுள்ள 50 சத விகிதம் பற்றிப் பார்ப்போம். இதைப் படிக்கும் நீங்கள் இந்த நொடியில் வாழ்க்கையின் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்பதுகூட உங்கள் மகிழ்ச்சியான வாழ்வுக்கு கொஞ்சம் பங்களிக்கலாம். அதாவது உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது? நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள்? நீங்கள் வாழ்கிற நாடு சகல வசதிகளும் நிறைந்ததா? உங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா? என்கிற சுற்றுப்புற விடயங்கள் உங்கள் மகிழ்ச்சியான வாழ்வுக்கு எந்த அளவுக்கு உதவி செய்யும்? தினசரி வாழ்க்கையில் நாம் ஈடுபடுகிற விடயங்கள் தான் எமது மகிழ்ச்சியைத் தீர்மானிக்கின்றன. புதிய அனுபவங்கள் அதிக சந்தோசத்தைக் கொடுக்கலாம். ஆனால் முதல் முறை கிடைக்கும் சந்தோசம் போகப் போகக் குறைகிறது. இதைத் தவிர்க்க என்ன செய்யலாம்? வித்தியாசங்கள் உதவலாம். திரும்பத் திரும்ப அதே ஹோட்டலுக்குப் போய் அதே உணவைச் சாப்பிடாதீர்கள். எதையுமே திரும்பத் திரும்ப அதே முறையில் செய்யும் போது சுவாரசியம் குறைந்து போகும். மரபணு சம்பந்தப்பட்டவரை நாம் எதுவும் செய்வதற்கில்லை. ஆக, நமது தினசரி நடவடிக்கைகள் தாம் நமது கட்டுப்பாட்டில் உள்ளவை. அப்படி என்றால் நீண்ட கால குறிக்கோள்களைக் கைவிட்டு விட்டு அன்றாட மகிழ்ச்சிகளோடு திருப்தி அடைந்து விடலாமா என்று நீங்கள் கேட்கலாம். அப்படி அல்ல. நீண்ட கால குறிக்கோள்களைத் திட்டமிட்டபடி அடையும் போதுதான் தினசரி நடவடிக்கைகளை மகிழ்ச்சியாக்கிக் கொள்ள நேரமும் சுதந்திரமும் கிடைக்கும். உங்கள் தினசரி நடவடிக்கைகளை ஒரே மாதிரி 'செக்கு மாட்டுத்தனம்' இல்லாமல் அடிக்கடி வித்தியாசமாக அணுகும்போது மகிழ்ச்சி என்றும் உங்களோடு நிலையாக இருக்கும்.

## கைதிகள்

பல ஆண்டுகள் விடுதலையின்றி, எதிர்காலமின்றி விடுதலைக்காகப் போராடுகின்றனர்.
இந்தக் கைதிகள் கடந்த 7ஆம் திகதிக்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார்களென்று ஜனாதிபதியும், அரசும் வாக்குறுதியளித்தனர். அதனால் கைதிகள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்தினர். விடுதலை கிடைக் காததால் ஏமாற்றமடைந்து மீண்டும் அவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
கடந்த 5ஆம் திகதியன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நேற்று 9ஆம் திகதியிலிருந்து முதற்கட்டமாக 32 பேரும், அடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் 30 பேரும் விடுவிக்கப்படுவார்கள் என்றும், மேலும் 68 பேர் அமைச்சரவைக் குழுவின் சிபார்சில் விடுவிக்கப்படுவார்கள் என்றும், குற்றவாளிகளாகத் தீர்ப்புப் பெற்றவர்கள் ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கத் தீர்மானமெடுத்து விடுவிக்கப்படுவார்களென்றும் அரசினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.
குறித்த சந்திப்பின்போது, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்குறுதி அளித்ததன் அடிப்படையில் இந்தக் கைதிகள் மன்னிப்பளித்து விடுதலைசெய்யப்படவேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்,எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனும்நாமும்அரசைவற்புறுத்தினோம். அத் துடன் அன்றைய தினமே ஜனாதிபதியிடமும் சந்தித்து வலியுறுத்தியிருந்தோம்.
இந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வருமுன்னரே விரக்தியும்,வெறுப்பும் நம்பிக்கையீனமும் அடைந்த கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். இருப்பினும் அவர்களின் விடுதலைக்காக, அவர்களின் போராட்டத்துக்கு நாமெல்லாம் ஆதரவு வழங்கவேண்டும். நாமும் அவர்கள் விடுதலைபெறும் வரை பொருத்தமான வடிவங்களில் ஜனநாயக வழியில், அமைதி வழியில் போராட்டங்களில் ஈடுபடவேண்டியதும் அவசியமாகும்.
ஜனாதிபதியும்,அரசும் வழங்கிய வாக்குறுதியின்படி சிறையில் போராடும் தமிழ் கைதிகளில் சில சிங்கள, முஸ்லிம் கைதிகளும் விடுவிக்கப்படவேண்டுமென மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றோம்.
எங்கள் குரலும் அறவழிப் போராட்டமும் வெற்றி பெறவும், கைதிகள் விடுதலை பெறவும் அனைவரும் கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு இயங்குவதும் அவசியமாகும்.
இதன் பொருட்டு நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் சமய நிறுவனங்கள்,வர்த்தகர் சபைகளுடனும் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளோம். இன்னும் இரண்டொருநாளில் பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுவிக்கப்படும்.
அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவதற்கும் நடவடிக்கை ஏற்படவேண்டுமென வலியுறுத்துவோம்.
எவ்வாறெனினும் எமது இலக்கு போராடும் கைதிகள் விடுதலைபெற வேண்டும் நீதி நிலை நாட்டப்படவேண்டும். அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாதவாறும் வன்முறைகளுக்கு எந்தவகையிலும் இடமளிக்காமலும் எமது நடவடிக்கைகள் மிகுந்த அமைதியாக இடம் பெறவேண்டும் என்று வற்புறுத்தி அழைப்பு விடுக்கின்றோம்.-என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## சட்டம்

தேசியக் கட்சியின் சார்பில் மாத்தறையில் போட்டியிட்டு வெற்றியீட்டியதுடன், சுவாமிநாதன் தேசியப் பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். தென் பிராந்திய அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக சாகல ரத்னாயக்கவும், புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சராக டி.எம்.சுவாமிநாதனும் பதவிவகித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

## உறுதியளித்தபடி

நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்திருந்தார்.
இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை 5 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் முதற்கட்டமாக 9 ஆம் திகதி 32 பேரும், 20 ஆம் திகதி 30 பேருமாக விடுவிக்கப்படுவர் என்றும், தண்டனை விதிக்கப்பட்ட 48 பேரையும் பொதுமன்னிப்பில் விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி பரிசீலிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இதற்கமைய முதல் கட்டமாக 32 பேர் நேற்றைய தினம் - தீபாவளிக்கு முன்னதாக - விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் எவருமே விடுதலை செய்யப்படவில்லை. அரசு தான் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்று அரசியல் கைதிகளின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
இதேவேளை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. மகசின் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளை, நேற்றுக் காலை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சென்று சந்தித்துள்ளனர்.
நேற்று மாலை, சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சுகத கம்லத் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
இன்று மூன்றாவது நாளாகவும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடரும் என்று தமிழ் அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர். (த-5)

## 119 இந்திய

பளை கடற்படையினர் முறைப்பாடு செய்திருந்தனர். அந்த வழக்கு அடுத்த தவணை நீதிமன்றுக்கு வரும்போது குறித்த 10 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவேண்டும் என்று கடந்த தவணை நீதிமன்று பணித்துள்ளது.
இந்திய மீனவர் 119 பேரும் கடந்த மாதம் மற்றும் அதற்கு முன்னைய மாதங்களில் பிடிபட்டனர். அதன்படி ஊர்காவற்றுறை நீதிமன்றில் 41 இந்திய மீனவருக்கு எதிராக இருந்த வழக்கில் அவர்கள் அனைவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். பருத்தித்துறை நீதிமன்றில் 79 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஏனைய 78 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். எனினும் அவர்கள் பயணித்த 12 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.
அவ்வாறே மன்னார் நீதிமன்றில் 41 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அனைவரும் விடுலை செய்யப்பட்டனர். அவர்களில் 4 பேர் சிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த 119 பேரும் வழமைபோன்று, இலங்கைக் கடற்படையினர் ஊடாக இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற-4-104-106)

## ஐ.நா. செயற்குழுவுக்கு

ளதாவது:-
15 ஆண்டுகளுக்குப் பின்னர், முதல் முறையாக, பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா செயற்குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறது.
இந்த முக்கியமான பயணம், இலங்கையில் காணாமற்போன ஆயிரக்கணக்கானோர் தொடர்பாக, அவர்களுக்கு என்ன நடந்தது, அவர்களின் நிலை என்ன, தமது உறவுகள் எங்கே என்ற அறிவதற்கும், தமது உறவுகள் காணாமற்போனமைக்கு நீதி தேடுவதற்கும் இழப்பீடுகளைப் பெறுவதற்கும், அவர்களின் குடும்பங்களுக்கு உதவியாக அமையும்.
எல்லாச் சமூகங்களிலும் காணாமற்போதல்கள் நிகழ்ந்துள்ளன. பெரும் எண்ணிக்கையான இலங்கையர்கள் உண்மையைத் தேடுகின்றனர். பொறுப்புக் கூறலை எதிர்பார்க்கின்றனர்.
எனவே, ஐ.நா. குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று, இலங்கை அரசு அனைத்து அதிகாரிகளுக்கும் உத்தரவிட வேண்டும் எனக் கோரியுள்ளது. (த-வ)

## கடத்தல்களின்

யுள்ளார்.
ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில்நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் கூறியவை வருமாறு:-
ஊழல், மோசடிகள் அம்பலப்படுத்தப்படும் என்றும் மோசடியாளர்களுக்குத் தண்டனைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என்றும் அரசியல் கட்சி என்ற அடிப்படையில் மக்களுக்கு ஜே.வி.பி. உறுதியளித்திருந்தது. அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இதற்கமைய, பெரிய மோசடி சம்பவங்கள் 24 தொடர்பில் கடந்த 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டோம். அவற்றில் அவன் கார்ட் விவகாரமும் உள்ளடங்கும்.
நாடாளுமன்றத்தில் இவ்வாறு மோசடிகளைச் சுட்டிக்காட்டும்போது, வாய் திறக்காது அமைதியாக இருந்த சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவன்கார்ட் விவகாரம் பற்றி பேசும்போது, அவன்கார்ட் விவகாரத்தை நியாயப்படுத்தும் வகையிலேயே நடந்துகொண்டனர். எனவே, அவன்கார்ட் கொடுக்கல் வாங்கல்களை நியாயப்படுத்துவதற்காக தற்போது புதியதொரு கூட்டணி உதயமாகியுள்ளது என்பது இதன்மூலம் புலனாகின்றது.
குறிப்பாக, அவன்கார்ட் விவகாரத்தில் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படவேண்டும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர் என்று நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். ஜே.வி.பிதான் இப்படி வலியுறுத்துகின்றது என்பதைத்தான் அவர் சூட்சுமமாக வெளியிட்டுள்ளார்.
இந்நிலையில், 2012 ஆம் ஆண்டில் குமார் குணரட்ணத்தைக் கைது செய்வதற்கு ஜே.வி.பி.தான் தகவல் வழங்கியது என்று கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார். கோத்தாவின் இந்தக் கூற்றை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். மேற்படி சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கோத்தபாயவுக்குப் புகைப்படம் வழங்கவேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது.
2012ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 10ஆம் திகதி வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குமார் குணரட்ணம் இலங்கை வந்த திகதி (2011 செப்ரெம்பர் 4) அவர் பயன்படுத்திய பெயர் உள்ளிட்ட விவரங்கள் இருக்கின்றன. கடவுச்சீட்டிலுள்ள படமும் அரசிடம் இருந்தது. இவ்வளவு தகவல்கள் அரசிடம் இருக்கும்போது நாம் எதற்காகப் புகைப்படத்தையோ அல்லது தகவல்களையோ வழங்கவேண்டும்?
எது எப்படியிருந்தபோதிலும், கோத்தாவின் கருத்து மூலம் 2012இல் குமார் குணரட்ணம் கைது செய்யப்படவில்லை; அவர் கடத்தப்பட்டார் என்ற விடயம் அம்பலமாகின்றது. 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குமார் குணரட்ணமும், திமுது ஆட்டிகலவும் கடத்தப்பட்டனர்.
கிரிபத்கொடையை அண்மித்த பகுதியொன்றில் குமார் குணரட்ணம் தங்கியுள்ள இடம் தொடர்பில் அங்குள்ள சிலர் தனக்குத் தொலைபேசி மூலம் தகவல் வழங்கினர் என்றும் அதன்பின்னரே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் கோத்தபாய ராஜபக்ச கருத்து வெளியிட்டுள்ளார்.
அது கைது அல்ல; கடத்தலாகும். காரணம், கைது உத்தரவு இருக்கவில்லை. வாக்குமூலம் பெறப்படவும் இல்லை. எனவே, இவர்களை கோத்தபாய ராஜபக்சவே கடத்தினார் என்பது தற்போது அவரது கூற்றின் ஊடாகவே உறுதியாகின்றது.
எனவே, கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக முன்னிலை சோலிஸக் கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். நிலவை காட்டும்போது சிலர் விரலைதான் பார்ப்பர். எனவே, இது விடயத்திலும் அப்படி இருந்துவிட முடியாது. கருப்பொருள் என்னவென்பதை புரிந்துகொள்ளவேண்டும்.
இந்தச் சம்பவம் மட்டுமல்ல, நாட்டில் இடம் பெற்ற சகல கடத்தல்களின் பின்னணியிலும் கோத்தபாய ராஜபக்சவுக்குத் தொடர்பு உள்ளது. சகல கடத்தல்களுக்கும் அவர் பொறுப்புக் கூறவேண்டும். ஒரு கடத்தல் சம்பவத்தை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். எனவே, இந்த விடயத்தை மூடிமறைத்துவிடமுடியாது.
ஊடகவியலாளர் கடத்தல், வெள்ளைவான் கலாசாரம், ஊடகவியலாளர்கள் படுகொலை, யாழில் லலித் குகன் கடத்தப்பட்டமை தொடர்பில் தகவல்கள் மூடிமறைக்கப்பட்டன. அவை பற்றி விசாரிப்பதற்குத் தற்போது கதவுகள் திறக்கப்பட்டுள்ளன -என்றார். (த-சி)

## வித்தியாவின்

பரிசோதனை மற்றும் ஆய்வுக்காக ஜீன் ரெக் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. அது பற்றிய ஆய்வில் பரிசோதனையை மேலும் உறுதிப்படுத்துவதற்குக் குறித்த மாணவியின் தாயாரது இரத்த மாதிரியும் தேவைப்படுவதாக ஜீன் ரெக் நிறுவனம் நீதிமன்றிடம் எழுத்து மூலமாகக் கோரியுள்ளது. அதனைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பித்து மேலதிக பரிசோதனை மற்றும் ஆய்வுக்காகக் குறித்த மாணவியின் தாயாரது இரத்த மாதிரியையும் எடுக்க அனுமதி கோரினர்.
அதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியது. அதற்கேற்ப குறித்த மாணவியின் தாயாரை யாழ்.போதனா வைத்தியசாலைச் சட்ட மருத்துவ நிபுணரிடம் அழைத்துச் சென்று இரத்த மாதிரியைப் பெறுமாறும், அதனைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஜீன் ரெக் எனும் தனியார் நிறுவனத்துக்கு அனுப்பி ஆய்வை மேற்கொள்வர் என்றும் கூறப்பட்டது. அதனையடுத்துச் சந்தேக நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.
குறித்த மாணவிக்கு நடந்த அவலம் தொடர்பாக ஒளிப்பதிவு செய்யப்பட்டதாகச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. அதனால் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கைத்தொலைபேசி,மடிக்கணினிஉள்ளிட்டவை ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. குறித்த கருவிகளில் சந்தேகிக்கப்படும் காட்சிகள் பதிவாகியதா? அவ்வாறு பதிவாகியிருந்தால் அவற்றை மீள எடுக்க முடியுமா? என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிமன்று ஏற்கனவே பணித்துள்ளது. அவை பற்றிய அறிக்கை நீதிமன்றுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அடுத்த வழக்குத் தவணைகளின் போது அவை சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டது.
சந்தேகநபர்கள் நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்படும்போதும் மீண்டும் சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்படும்போதும் வழமைபோன்று விசேட பொலிஸ் பாதுகாப்பு ஒழுங்கு செய்யப்படிருந்தமை குறிப்பிடத் தக்கது. (த-4)

## பதவி விலகினார்

வழங்கியிருந்த திலக் மாரப்பன, நாடாளுமன்றத்தில், அவன்கார்ட் விவகாரத்தில் எந்த முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்று வாதிட் டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, அவன்கார்ட் நிறுவனத்தின் சட்டத்தரணியாகவும், பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சராகவும் திலக் மாரப்பன கடமையாற்றியிருந்தார். இரண்டு விடயங்களில் காணப்படும் முரண்பாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு தாம் பதவி விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.
நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட முன்னாள் சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலக் மாரப்பன,
முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில் நான்அமைச்சுப்பதவியிலிருந்துவிலகிவிட்டேன் எவ்வாறெனினும், எமது கட்சிக்காரர் குற்றமற்றவர். எதிர்காலத்தில் அதனை நிரூபிக்க முடியும். ஊடகங்கள் வாயிலாக எமக்குத் தொடர்ந்து சேறு பூசுகின்றனர். எம்மீது சேறு பூசிக் கொள்ள எமக்கு விருப்பமில்லை என்பதனால் அமைச்சுப் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்தோம். அவன்காட் நிறுவனத்தின் சர்ச்சைக்குரிய ஆயுதக் கப்பலில் இருந்து நாளொன்றுக்குச் சுமார் 30 தடவைகளாவது ஆயுதங்கள் பரிமாறப்படுகின்றன.
கடற்படையினர் மற்றும் ரக்னா லங்கா நிறுவனத்தினர், குறித்த ஆயுதக் கப்பலில் இருந்து இவ்வாறு ஆயுதங்களைக் கொண்டு செல்வது மற்றும் மீண்டும் கொண்டு வருவது போன்ற நடவடிக்கையில் இந்த நிமிடம் வரைக்கும் ஈடுபட்டு வருகின்றனர்.
ரக்னா லங்கா என்பது முற்று முழுதாக அரசினால் இயக்கப்பட்டு வரக்கூடிய ஒரு நிறுவனம். இந்த ஆயுதக் கப்பலானது 24 மணித்தியாலமும் கடற்படையினராலே பராமரிக்கப்பட்டு வருகின்றது.
குறித்த ஆயுதக் கப்பல் இருக்கும் இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் காலி துறைமுகப் பொலிஸார் இருக்கின்றனர். இவ்வளவு காலம் வரை அதனை அவர்கள் காணவில்லை என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. திடீரெனக் கண்டுபிடித்துப் புள்ளிகள் போட முயற்சிக்கின்றனர். நான் அமைச்சுப் பதவியில் இருந்து விலகச் செய்தாலும் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவேன். அத்துடன் இந்த அரசு உருவாவதற்கு நாம் பெரியளவில் பங்களிப்பு வழங்கினோம்.
விசாரணைகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நாம் அமைச்சுப் பதவியில் இருந்து விலக முடிவெடுத்தோம். இதன் காரணமாக தற்பொழுது மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் இருந்து வெளிவரும் உண்மைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்- என்றார். (த-வ)

## யாழ்.மீள்குடியமர்வு

செயலகத்தினால் திரட்டப்பட்ட தகவல்களில் அண்மையில் தெரியவந்திருந்தது.
இவ்வாறானதொரு நிலையில், நாளை புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதன்போது யாழ்.மாவட்டத்தின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. எஞ்சிய மீள்குடியமர்வு நடவ டிக்கைகள் தொடர்பில் முக்கிய முடிவுகள் எடுக் கப்படக் கூடும் என்று தெரியவருகின்றது. (த-5)

## கண்ணீர் அஞ்சலி



**அருட்சகோதரி மரிய றொசாறியோ A.C**

(அதிபர் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

அருட்சகோதரி மரிய றொசாறியோ A.C அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்களும், பணியாளர்களும்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5542.

(C/19897) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



அருட்சகோதரி
**மரிய றொசாறியோ A.C**

(அதிபர் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

அருட்சகோதரி மரிய றொசாறியோ A.C அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடை கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

லைடன் புடவை நிலையம்,
உரிமையாளரும், பணியாளர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**தேவசகாயம் தாசீஸ்**

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை பெற்றோலிய தொகைசாலை ஊழியர்)

நீர் பிரிந்தாலும் உன் நினைவுடன் பரிதவிக்கும் குடும்ப உறவுகளுடன் சேர்ந்து நாமும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்!

அதிகாரியும், ஊழியர்களும்,
இலங்கை பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமனல்ஸ் லிமிட்டெட்.

தொகைசாலை,
காங்கேசன்துறை.

(66007)(10.17)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 | | 07 |
| 11 |  | 11 |
| 1939 | | 2015 |

### சங்கரபிள்ளை தருமகுலசிங்கம்

B.Sc., FPFA., Dip-in-Shipping(Oslo)., Dip-in-Bus & Fin. Adm., AMinstTA. (Former Internal Auditor Shipping Corporation and Auditor UNDP Kiribati & Indonesia)

யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சங்கரபிள்ளை தருமகுலசிங்கம் அவர்கள் 07-11-2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரபிள்ளை(சமாதான நீதவான்- வட்டுக்கோட்டை), நாகரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தயாவதனி அவர்களின் அன்புக் கணவரும், உதயசங்கர்(அவுஸ்திரேலியா), விஜயசங்கர (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ராஜசிங்கம், பூபாலசிங்கம், செல்வராணி, மற்றும் சிவநேசமலர், சாந்தகுலசிங்கம், பாலமுத்துசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கார்த்தியாயினி, சிவச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷிவானி, தருமன், தயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 10-11-2015 செவ்வாய்க்கிழமை மு.ப 12.00 இல. 44/29, Solomon Avenue, Pamankade Road, Colombo- 6 என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 11-11-2015 புதன்கிழமை பி.ப 04:00 மணியளவில் Borella Cemetery (Hindu Section) தகன கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் உதயசங்கர், விஜயசங்கர் — இலங்கை. தொடர்புகளுக்கு தொலைபேசி: 2 582 368

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் தேவராசா



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தேவராசா நேற்று (09.11. 2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்லம்மா அவர்களின் கணவரும் காலஞ்சென்ற ஜெயந்திமாலா மற்றும் சியாமளா (ஜேர்மனி), கோகிலராஜ் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவரத்தினராசா (கந்தரப்பா), சிவலிங்கம் (ஜேர்மனி), வசந்தி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, தங்கம்மா, முத்துக்குமாரசுவாமி, பொன்னம்மா, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் அகிலாண்டம் காலஞ்சென்ற வேலாயுதர் மற்றும் சிவலெட்சுமியம்மா காலஞ்சென்ற சிவயோக சுந்தரம் மற்றும் பரமானந்த தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லிதாபரன், ரணுசியா, தாட்சாயினி, சுகாசினி, தக்சினி, நித்தியா, கௌசிகன், திவ்வியா, யதிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. சிவரத்தினராசா
(கந்தரப்பா - மருமகன்)

தொ.பேசி: 077 600 5290

### சிவசுப்பிரமணியக் குருக்கள் சிவசரவணபவன் (சிற்பி)

(முன்னாள் அதிபர் யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

பிறப்பு: 28.02.1933
இறப்பு: 09.11.2015



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியக் குருக்கள் சிவசரவணபவன் (சிற்பி) நேற்று (09.11. 2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியக் குருக்கள்-சௌந்த ராம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுந்தரேஸ்வரன் (முகாமையாளர்- ஹற்றன் நஷனல் வங்கி, மெற்றோகிளை, யாழ்ப்பாணம்), சாயீஸ்வரன் (சத்திரசிகிச்சை நிபுணர்), சர்வேஸ்வரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன் புத் தந்தையும், சாந்தினி (ஆசிரியை, யா.இ.க), ஸ்ரீலதா (மருத்துவர்), சிந்துஜா ஆகியோரின் மாமனும், வித்யாசாகர், சாயிசங்கர், வித்யாபவன், யதுகேஷன், கேசாயினி, தனுஷாயினி, சுபஸ்ரீ, தரங்கினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2015) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் அவரின் கந்தரோடை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

(68008) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜலட்சுமி சிவராஜா



**பிறப்பு: 25.11.1941**
**இறப்பு: 08.11.2015**

யாழ் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் பழைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி சிவராஜா 08.11. 2015 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர்- தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவராஜாவின் அன்பு மனைவியும் சிவகுமார் (ஒப்பந்ததாரர்- இலங்கை), ஜெயக்குமார் (கிராம சேவகர், நல்லூர்- பிரான்ஸ்), சுபாஸ்குமார் (செல்வா- பிரான்ஸ்), சிவசுகந்தினி (ஜேர்மனி), தமயந்தினி (ஆசிரியர்- கொழும்பு), கிருஷ்ணகுமார் (விரிவுரையாளர், தொழில் நுட்பக்கல்லூரி - வவுனியா) சிவானந்தகுமாரன் (சிவமணி, ஆசிரியர்- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தாமி காலஞ்சென்றவர்களான இராசம்மா, ஞானசேகரம், குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிபவானந்தராசா (ஜேர்மனி), நகுலேஸ்வரி (ஆசிரியர்- யாழ்ப்பாணம்), தயாளினி (பிரான்ஸ்), அன்பரசி (பிரான்ஸ்), கமலி, அகிலா( பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் துரையம்மா, சின்னராசா, வரதலட்சுமி, வனித லட்சுமி, டில்லிமலர், யோகலட்சுமி காலஞ்சென்றவர்களான தம்பிராசா, துரைராசா, இராசதுரை, ராசலட்சுமி, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் மயூரினன், ஆதித்யன், ஆரதியர், லதுர்ஷன், கிரிஷிகா, நவலக்ஷன், லதுசிகா, லனிஸ்கா, திருலக்ஷன்,ஹரிலக்ஷன், அஸ்வின், ஆர்வின், ஆர்னிகா, நிதேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு காக்கைதீவு, கரையான்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு:
சிவகுமார் இலங்கை +94777267817
கிருஷ்ண குமார் - இலங்கை +94 777 585 920
முனிகோயில் வீதி, இருபாலை கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்

# அவன்கார்ட் குற்றம் நிரூபணமானால் மகிந்த, கோத்தபாய தண்டிக்கப்படுவர்

*அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு*

கொழும்பு, நவ.10

அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக் கப்பல் விவகாரத்தில் அரசின் போக்கு கண்டிக்கத்தக்கது. இந்த விவகாரத்தில் மிகப் பெரிய மோசடிகள் இடம்பெற்றும், ஊழலை மூடிமறைத்து குற்றவாளிகளைக் காப்பாற்ற முயற்சிப்பதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டால் மகிந்த, கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் தண்டிக்கப்பட நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவன்கார்ட் மோசடிகள் தொடர்பில் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச மற்றும் திலக் மாரப்பன ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துக்கள் அரசுக்குள் குழப்பங்களை ஏற் படுத்தியுள்ள நிலையில் இது தொடர்பில் வினவியபோதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்;

இந்த விவகாரத்தில் மிகப்பெரிய மோசடிகள் நடைபெற்றுள்ளன என்பது ஆரம்பத்தில் இருந்தே முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டாகும். புதிய அரசை அமைத்த சந்தர்ப்பத்தில் பிரதானமாக இந்த அவன்கார்ட் விவகாரமே அனைவராலும் அதிகம் பேசப்பட்டது.

அப்போது இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆதாரங்கள் இருப்பதாகவும், இந்த ஆயுதக் கப்பல் விடயத்தில்ஊழல்நடந்துள்ளதாகவும்குறிப்பிட்டனர். அதேபோல் இந்த நிறுவனம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான வகையில் சர்வதேச நபர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கியுள்ளதாகவும் பாதுகாப்பு தரப்பே குற்றஞ்சுமத்தியுள்ளது.

அதேபோல் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் இந்த விடயத்தில் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். நானும் அமைச்சர் ராஜிதவும் அமைச்சரவைக் கூட்டத்திலும் பல தடவைகள் இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் தெரிவித்துள்ளோம். அதேபோல் அமைச்சரவையில் இந்த விவகாரம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பதாகவே தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆனால், நாடாளுமன்றத்தில் அமைச்சர்களான விஜயதாச மற்றும் திலக் மாரப்பன ஆகியோர் முன்வைத்த கருத்துக்கள் அமைச்சரவை தீர்மானத்துக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். இந்த ஊழல் மோசடிகள் தொடர்பில் அமைச்சர்களின் கருத் துக்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விவகாரத்தில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டால் இறுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுமே குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள்.

ஆகவே, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு எண்ணத்தில் இந்த ஊழல் மூடிமறைக்கப்பட்டு வருகின்றது. மக்கள் இந்த அரசின் மீது முழு நம்பிக்கையும் வைத்துள்ளனர். அந்த நம்பிக்கையை சிதைக்கும் வகையில் எவரும் நடந்து கொள்ளக் கூடாது.

அவன்கார்ட் விவகாரத்தில் பாரதூரமான ஊழல் நடைபெற்றுள்ளது. ஆகவே இது தொடர்பில் நேர்மையான வகையில் ஒரு விசாரணையை முன்னெடுக்க வேண்டும். அதேபோல் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்துகளும் குழப்பமானதாகவே அமைந்துள்ளன.

ஆரம்பத்தில்குற்றம்நடந்துள்ளதாகக் கூறியவர்கள் இப்போது மாற்றுக் கருத்தை முன்வைக்கின்றனர். ஒரு சிலர் இந்த விவகாரத்தில் வழக்கு தொடர முடியும் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இன்னொருதரப்பினர் அவ்வாறு வழக்கு எதையும் தொடரமுடியாது எனக் கூறுகின்றனர். ஆகவே இந்த விவகாரத்தின் பின்னணியில் மறைந்துள்ள உண்மைகளைக் கண்டறியும் வரையில் நான் போராடுவேன் எனக் குறிப்பிட்டார்.

(த)

# மு.காவின் பேராளர் மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றம்

கொழும்பு, நவ.10

நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கண்டி,பொல்கொல்லையில் இடம்பெற்ற இந்தப் பேராளர் மாநாட்டில் இலங்கையில் வாழும் சகல சமூகங்களும் திருப்திப்படத்தக்க அதிகாரப் பகிர்வையும் கௌரவமான சகவாழ்வையும் உறுதிப்படுத்தும் அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் இந்தத் தீர்வைச் செயற்படுத்து வதற்கான அரசமைப்புச் சீர்திருத்தங்களை நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்புவாக்குறுதியளித்தவாறு நிறைவேற்றவேண்டும், நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப் பட்ட சகல அதிகாரங்களையும் முழுமையாக செயற்படுத்துவ தற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்களை மீள் குடியேற்றாமைக்கு மாநாடு கண்ட னம் தெரிவிக்கின்றது. அத்துடன் வடபுலத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக் குடியேற்றுவதற்கு பொருத்தமான தேசியமீள்குடியேற்றக்கொள் கையை உடனடியாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்துமாறு அரசை வலியுறுத்துகின்றோம். இதற்காகப் பொது உட்கட்டமைப்பு வசதிகளைச் சீர்திருத்திச் சுயமான மீள் குடியேற்றத்தை ஊக்குவிப்பதுடன் அவர்களின் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளைப் பேணுவதற்கான உரிமைகளை உறுதிப்படுத்துமாறு அரசை வலியுறுத்துதல் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், நாட்டில் பெரியளவில் இடம்பெயர்ந்து பூர்வீக இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலையில் நாட்டுக்குள்ளேயும் வெளியேயும் அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் துயரங்களில் நாமும் பங்கு கொள்வதுடன் அவர்களை உடனடியாகச் சகல வசதிகளுடனும் அவர்களுக்குரிய பூர்வீக இடங்களில் குடியேற்ற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசை வலியுறுத்துகின்றோம், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந் துரைகளையும் அந்த ஆணைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களையும் அதற்கான தீர்வுகளையும் உடனடியாக செயற்படுத்துமாறு அரசை வலியுறுத்துதல், உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி, பொறுப்புக் கூறுதல் தொடர்பாக ஏற்றுக் கொள்ளத்தக்கதும் சுயாதீனமானதுமான பொறிமுறைகளை அரசு நடைமுறைப்படுத்துவதாக வழங்கப்பட்ட உறுதிமொழிகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கின்றது, உள்நாட்டுப் போரினால்பாதிக்கப்பட்டவர்களுக்கான புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் நீதி வழங்கு வதற்கும் உருவாக்கப்படும் பொறி முறைக்குள் குறைந்தபட்சம் 1985 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதி உள்ளடக்கப்பட வேண்டும், வடகிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பல்வேறு காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வெளிப்படைத்தன்மைமிக்க பொறி முறையொன்று உருவாக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கல்முனை, சம்மாந் துறை, பொத்துவில் தொகுதிகள் உள்ளடங்கிய தமிழ்பேசும் மக்களுக் கான கரையோர மாவட்ட கோரிக்கையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்துகின்றது, சிலாபத்துறை, கருமலையூற்றுப் பள்ளி, அஸ்ரப் நகர் பிரதேசங்கள் உட்பட பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்ட தனியார் உரித்துக் காணிகளையும் அரச அனுமதிப்பத்திர உரித்துக் காணிகளையும் இழந்த முஸ்லிம் களுக்கு மீண்டும் அக் காணிகளின் உரிமைகளை வழங்குவதுடன் அவ்வுடமைகள் மீளளிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது, மதசார் வன்முறைகளுக்கு உட்படுத் தப்பட்டவர்களை சுதந்திரமான தங்களது மத அனுஷ்டானங்களைப் பேணுவதற்கும் பேச்சுரிமைகளை வழங்குவதற்கும் நீதி வழங்குவதற்கும் தேவையான நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், நாட்டில் வாழும் சகல இனங்கள தும் அர சியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மத, கலாசார, மொழிசார் உரிமைகளை அனுப விப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், குற்றப்பத்திரிகை வழங்கப்படாமல் தடுப்புக்காவலில் வைக்கப்பபட்டுள்ள சகல தமிழ் பேசும் கைதிகளையும் விடுவிக்க வேண்டும், ஜெருசல மில் ஒரு தலைப் பட்சமாக இஸ்ரேலினால் மேற்கொள் ளப்பட்டு வரும் சர்வதேச சட்டத்திற்கு முரணான சகல செயற்பாடுகளையும் வன்மையாக பேராளர் மாநாடு கண்டிக்கின்றது என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(த-10)









**கணினி அறிவுடைய பெண் அலுவலக உதவியாளர் தேவை**

நேரில் வரவும்

11/11/2015 - மாலை - 4.00 P.M

RiNi Ads, 4.Clock Tower Lane, Jaffna.

**கடை இடமாற்றம்**

இந்த இனிய தீபாவளித்திருநாளில் Sara Enterprise எமது வாடிக்கையாளர்களுக்கு நல்வாழ்த்துக் களை தெரிவிக்கும் அதேவேளை Sara Enterprise ஸ்தாபனம் இராமநாதன் வீதியிலிருந்து (01.10. 2015) தொடக்கம் ரெக்னிக்கல் கொலிச்சுக்கு முன்பாக உள்ள 28A,பிறவுண் வீதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

எமது சில்வர், அலுமினிய சீலிங் வேலை மற்றும் இது தொடர்பான சகல வேலைகளும் திருப்திகரமான முறையில் செய்து தரப்படும்.

தொடர்புக்கு : சே.கணேசமூர்த்தி
077 4371 556

**சமூகத் தொண்டர்கள் தேவை**

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவானது ஒரு சமூக மட்ட அமைப்பாகவும் அரச சார்பற்ற நிறுவனமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. "தன்னிறைவு கொண்ட நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குதல்" இதன் தூரநோக்காகும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்றிணைந்த அமைப்பாக சமூக, பொருளாதார, கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்தல், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகளைப் பேணிப்பாதுகாத்தல், நீதி, உண்மை வழிநின்று சமாதானத்திற்காகவும் இலஞ்சம், ஊழல், மோசடி அற்ற வெளிப்படைத்தன்மை கொண்ட நிர்வாகத்தை உருவாக்குதல், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல். என்பன இவ்வமைப்பின் முக்கிய நோக்கங்களாகும். இதற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் 95 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் ஒவ்வொரு சமூகத் தொண்டர்களை இணைத்துக்கொள்ளவுள்ளது. சமூகத்தின் மீது அக்கறையும் சமூக சேவை செய்வதற்கு ஆர்வமும் நேர்மையுமுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் இருபந்தைந்து (25) வயதிற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் விண்ணப்பிக்க முடியும். தகுதியான சமூகத் தொண்டர் நேர்முகத்தேர்வு மூலம் இணைத்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பங்களை தமக்குரிய கிராம அலுவலர் பிரிவைக் குறிப்பிட்டு சுயவிபரங்களை **"செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு, இல.02, கச்சேரி அருகாமை, கிளிநொச்சி."** என்ற முகவரிக்கு அல்லது kdcc2012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2015.11.20 முன்பு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு – 0778049166

செயலாளர்,
கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு.

விளம்பர அனுசரணை- AFRIEL
அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு

(63565)(10.17)


## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில். 2016 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்.

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், என்பவற்றை 2016ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 23.11.2015 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 02.00 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 24.11.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை **செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய **உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 23.11.2015ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக்கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 01.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### 2016ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள், (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15000.00 | 17,491,100.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 243,100.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5000.00 | 355,100.00 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5000.00 | 250,300.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு- நிலையத்துடன்) | 1000.00 | 10000.00 | 891,000.00 |
| 2. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 331,450.00 |
| 3. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 413,600.00 |
| 4. | கோக்குவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக்கடையும் | 500.00 | 5000.00 | 164,450.00 |
| 5. | கொக்குவில் உப அலுவலக இல. 329, பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 219,450.00 |
| 6 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 60,000.00 |
| 7 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 360,000.00 |

திருமதி.தி.அன்னலிங்கம்
செயலாளர்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி
10.11.2015

(E/19888)(10.17)

## கைதிகள்

பல ஆண்டுகள் விடுதலையின்றி, எதிர்காலமின்றி விடுதலைக்காகப் போராடுகின்றனர். இந்தக் கைதிகள் கடந்த 7ஆம் திகதிக்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார்களென்று ஜனாதிபதியும், அரசும் வாக்குறுதியளித்தனர். அதனால் கைதிகள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்தினர். விடுதலை கிடைக்காததால் ஏமாற்றமடைந்து மீண்டும் அவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதியன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நேற்று 9ஆம் திகதியிலிருந்து முதற்கட்டமாக 32 பேரும், அடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் 30 பேரும் விடுவிக்கப்படுவார்கள் என்றும், மேலும் 68 பேர் அமைச்சரவைக் குழுவின் சிபார்சில் விடுவிக்கப்படுவார்கள் என்றும், குற்றவாளிகளாகத் தீர்ப்புப் பெற்றவர்கள் ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கத் தீர்மானமெடுத்து விடுவிக்கப்படுவார்களென்றும் அரசினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த சந்திப்பின்போது, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்குறுதி அளித்ததன் அடிப்படையில் இந்தக் கைதிகள் மன்னிப்பளித்து விடுதலைசெய்யப்படவேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனும்நாமும்அரசைவற்புறுத்தினோம். அத் துடன் அன்றைய தினமே ஜனாதிபதியிடமும் சந்தித்து வலியுறுத்தியிருந்தோம்.

இந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வருமுன்னரே விரக்தியும், வெறுப்பும் நம்பிக்கையீனமும் அடைந்த கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். இருப்பினும் அவர்களின் விடுதலைக்காக, அவர்களின் போராட்டத்துக்கு நாமெல்லாம் ஆதரவு வழங்கவேண்டும். நாமும் அவர்கள் விடுதலைபெறும் வரை பொருத்தமான வடிவங்களில் ஜனநாயக வழியில், அமைதி வழியில் போராட்டங்களில் ஈடுபடவேண்டியதும் அவசியமாகும்.

ஜனாதிபதியும், அரசும் வழங்கிய வாக்குறுதியின்படி சிறையில் போராடும் தமிழ் கைதிகளில் சில சிங்கள, முஸ்லிம் கைதிகளும் விடுவிக்கப்படவேண்டுமென மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றோம்.

எங்கள் குரலும் அறவழிப் போராட்டமும் வெற்றி பெறவும், கைதிகள் விடுதலை பெறவும் அனைவரும் கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு இயங்குவதும் அவசியமாகும். இதன் பொருட்டு நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் சமய நிறுவனங்கள், வர்த்தகர் சபைகளுடனும் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளோம். இன்னும் இரண்டொருநாளில் பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுவிக்கப்படும்.

அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவதற்கும் நடவடிக்கை ஏற்படவேண்டுமென வலியுறுத்துவோம்.

எவ்வாறெனினும் எமது இலக்கு போராடும் கைதிகள் விடுதலைபெற வேண்டும் நீதி நிலை நாட்டப்படவேண்டும். அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாதவாறும் வன்முறைகளுக்கு எந்தவகையிலும் இடமளிக்காமலும் எமது நடவடிக்கைகள் மிகுந்த அமைதியாக இடம் பெறவேண்டும் என்று வற்புறுத்தி அழைப்பு விடுக்கின்றோம்.-என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## சட்டம்

தேசியக் கட்சியின் சார்பில் மாத்தறையில் போட்டியிட்டு வெற்றியீட்டியதுடன், சுவாமிநாதன் தேசியப் பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். தென் பிராந்திய அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக சாகல ரத்நாயக்கவும், புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சராக டி.எம்.சுவாமிநாதனும் பதவிவகித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

## உறுதியளித்தபடி

நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை 5 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் முதற்கட்டமாக 9 ஆம் திகதி 32 பேரும், 20 ஆம் திகதி 30 பேருமாக விடுவிக்கப்படுவர் என்றும், தண்டனை விதிக்கப்பட்ட 48 பேரையும் பொதுமன்னிப்பில் விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி பரிசீலிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய முதல் கட்டமாக 32 பேர் நேற்றைய தினம் – தீபாவளிக்கு முன்னதாக – விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் எவருமே விடுதலை செய்யப்படவில்லை. அரசு தான் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்று அரசியல் கைதிகளின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. மகசின் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளை, நேற்றுக் காலை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சென்று சந்தித்துள்ளனர். நேற்று மாலை, சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சுகத கம்லத் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இன்று மூன்றாவது நாளாகவும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடரும் என்று தமிழ் அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர். (த-5)

## 119 இந்திய

பளை கடற்படையினர் முறைப்பாடு செய்திருந்தனர். அந்த வழக்கு அடுத்த தவணை நீதிமன்றுக்கு வரும்போது குறித்த 10 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவேண்டும் என்று கடந்த தவணை நீதிமன்று பணித்துள்ளது.

இந்திய மீனவர் 119 பேரும் கடந்த மாதம் மற்றும் அதற்கு முன்னைய மாதங்களில் பிடிபட்டனர். அதன்படி ஊர்காவற்றுறை நீதிமன்றில் 41 இந்திய மீனவருக்கு எதிராக இருந்த வழக்கில் அவர்கள் அனைவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். பருத்தித்துறை நீதிமன்றில் 79 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஏனைய 78 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். எனினும் அவர்கள் பயணித்த 12 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே மன்னார் நீதிமன்றில் 41 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அனைவரும் விடுலை செய்யப்பட்டனர். அவர்களில் 4 பேர் சிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 119 பேரும் வழமைபோன்று, இலங்கைக் கடற்படையினர் ஊடாக இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-4-104-106)

## ஐ.நா. செயற்குழுவுக்கு

ளதாவது:-

15 ஆண்டுகளுக்குப் பின்னர், முதல் முறையாக, பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா செயற்குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறது.

இந்த முக்கியமான பயணம், இலங்கையில் காணாமற்போன ஆயிரக்கணக்கானோர் தொடர்பாக, அவர்களுக்கு என்ன நடந்தது, அவர்களின் நிலை என்ன, தமது உறவுகள் எங்கே என்ற அறிவதற்கும், தமது உறவுகள் காணாமற்போனமைக்கு நீதி தேடுவதற்கும் இழப்பீடுகளைப் பெறுவதற்கும், அவர்களின் குடும்பங்களுக்கு உதவியாக அமையும்.

எல்லாச் சமூகங்களிலும் காணாமற்போதல்கள் நிகழ்ந்துள்ளன. பெரும் எண்ணிக்கையான இலங்கையர்கள் உண்மையைத் தேடுகின்றனர். பொறுப்புக் கூறலை எதிர்பார்க்கின்றனர்.

எனவே, ஐ.நா. குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று, இலங்கை அரசு அனைத்து அதிகாரிகளுக்கும் உத்தரவிட வேண்டும் எனக் கோரியுள்ளது. (த-வ)

## கடத்தல்களின்

யுள்ளார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில்நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஊழல், மோசடிகள் அம்பலப்படுத்தப்படும் என்றும் மோசடியாளர்களுக்குத் தண்டனைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என்றும் அரசியல் கட்சி என்ற அடிப்படையில் மக்களுக்கு ஜே.வி.பி. உறுதியளித்திருந்தது. அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, பெரிய மோசடி சம்பவங்கள் 24 தொடர்பில் கடந்த 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டோம். அவற்றில் அவன் கார்ட் விவகாரமும் உள்ளடங்கும்.

நாடாளுமன்றத்தில் இவ்வாறு மோசடிகளைச் சுட்டிக்காட்டும்போது, வாய் திறக்காது அமைதியாக இருந்த சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவன்கார்ட் விவகாரம் பற்றி பேசும்போது, அவன்கார்ட் விவகாரத்தை நியாயப்படுத்தும் வகையிலேயே நடந்து கொண்டனர். எனவே, அவன்கார்ட் கொடுக்கல் வாங்கல்களை நியாயப்படுத்துவதற்காக தற்போது புதியதொரு கூட்டணி உதயமாகியுள்ளது என்பது இதன்மூலம் புலனாகின்றது.

குறிப்பாக, அவன்கார்ட் விவகாரத்தில் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படவேண்டும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர் என்று நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். ஜே.வி.பிதான் இப்படி வலியுறுத்துகின்றது என்பதைத்தான் அவர் சூட்சுமமாக வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், 2012 ஆம் ஆண்டில் குமார் குணரட்ணத்தைக் கைது செய்வதற்கு ஜே.வி.பி.தான் தகவல் வழங்கியது என்று கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார். கோத்தாவின் இந்தக் கூற்றை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். மேற்படி சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கோத்தபாயவுக்குப் புகைப்படம் வழங்கவேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது.

2012ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 10ஆம் திகதி வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குமார் குணரட்ணம் இலங்கை வந்த திகதி (2011 செப்ரெம்பர் 4) அவர் பயன்படுத்திய பெயர் உள்ளிட்ட விவரங்கள் இருக்கின்றன. கடவுச்சீட்டிலுள்ள படமும் அரசிடம் இருந்தது. இவ்வளவு தகவல்கள் அரசிடம் இருக்கும்போது நாம் எதற்காகப் புகைப்படத்தையோ அல்லது தகவல்களையோ வழங்கவேண்டும்?

எது எப்படியிருந்தபோதிலும், கோத்தாவின் கருத்து மூலம் 2012இல் குமார் குணரட்ணம் கைது செய்யப்படவில்லை; அவர் கடத்தப்பட்டார் என்ற விடயம் அம்பலமாகின்றது. 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குமார் குணரட்ணமும், திமுது ஆட்டிகலவும் கடத்தப்பட்டனர்.

கிரிபத்கொடையை அண்மித்த பகுதியொன்றில் குமார் குணரட்ணம் தங்கியுள்ள இடம் தொடர்பில் அங்குள்ள சிலர் தனக்குத் தொலைபேசி மூலம் தகவல் வழங்கினர் என்றும் அதன்பின்னரே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் கோத்தபாய ராஜபக்ச கருத்து வெளியிட்டுள்ளார்.

அது கைது அல்ல; கடத்தலாகும். காரணம், கைது உத்தரவு இருக்கவில்லை. வாக்குமூலம் பெறப்படவும் இல்லை. எனவே, இவர்களை கோத்தபாய ராஜபக்சவே கடத்தினார் என்பது தற்போது அவரது கூற்றின் ஊடாகவே உறுதியாகின்றது.

எனவே, கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக முன்னிலை சோலிஸக் கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். நிலவை காட்டும்போது சிலர் விரலைதான் பார்ப்பர். எனவே, இது விடயத்திலும் அப்படி இருந்துவிட முடியாது. கருப்பொருள் என்னவென்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தச் சம்பவம் மட்டுமல்ல, நாட்டில் இடம் பெற்ற சகல கடத்தல்களின் பின்னணியிலும் கோத்தபாய ராஜபக்சவுக்குத் தொடர்பு உள்ளது. சகல கடத்தல்களுக்கும் அவர் பொறுப்புக் கூறவேண்டும். ஒரு கடத்தல் சம்பவத்தை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். எனவே, இந்த விடயத்தை மூடிமறைத்துவிடமுடியாது.

ஊடகவியலாளர் கடத்தல், வெள்ளைவான் கலாசாரம், ஊடகவியலாளர்கள் படுகொலை, யாழில் லலித் குகன் கடத்தப்பட்டமை தொடர்பில் தகவல்கள் மூடிமறைக்கப்பட்டன. அவை பற்றி விசாரிப்பதற்குத் தற்போது கதவுகள் திறக்கப்பட்டுள்ளன –என்றார். (த-சி)

## வித்தியாவின்

பரிசோதனை மற்றும் ஆய்வுக்காக ஜீன் ரெக் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. அது பற்றிய ஆய்வில் பரிசோதனையை மேலும் உறுதிப்படுத்துவதற்குக் குறித்த மாணவியின் தாயாரது இரத்த மாதிரியும் தேவைப்படுவதாக ஜீன் ரெக் நிறுவனம் நீதிமன்றிடம் எழுத்து மூலமாகக் கோரியுள்ளது. அதனைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பித்து மேலதிக பரிசோதனை மற்றும் ஆய்வுக்காகக் குறித்த மாணவியின் தாயாரது இரத்த மாதிரியையும் எடுக்க அனுமதி கோரினர்.

அதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியது. அதற்கேற்ப குறித்த மாணவியின் தாயாரை யாழ்.போதனா வைத்தியசாலைச் சட்ட மருத்துவ நிபுணரிடம் அழைத்துச் சென்று இரத்த மாதிரியைப் பெறுமாறும், அதனைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஜீன் ரெக் எனும் தனியார் நிறுவனத்துக்கு அனுப்பி ஆய்வை மேற்கொள்வர் என்றும் கூறப்பட்டது. அதனையடுத்துச் சந்தேக நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த மாணவிக்கு நடந்த அவலம் தொடர்பாக ஒளிப்பதிவு செய்யப்பட்டதாகச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. அதனால் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கைத்தொலைபேசி, மடிக்கணினி உள்ளிட்டவை ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. குறித்த கருவிகளில் சந்தேகிக்கப்படும் காட்சிகள் பதிவாகியதா? அவ்வாறு பதிவாகியிருந்தால் அவற்றை மீள எடுக்க முடியுமா? என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிமன்று ஏற்கனவே பணித்துள்ளது. அவை பற்றிய அறிக்கை நீதிமன்றுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அடுத்த வழக்குத் தவணைகளின் போது அவை சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டது.

சந்தேகநபர்கள் நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்படும்போதும் மீண்டும் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படும்போதும் வழமைபோன்று விசேட பொலிஸ் பாதுகாப்பு ஒழுங்கு செய்யப்படிருந்தமை குறிப்பிடத் தக்கது. (த-4)

## பதவி விலகினார்

வழங்கியிருந்த திலக் மாரப்பன, நர்டாளுமன்றத்தில், அவன்கார்ட் விவகாரத்தில் எந்த முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்று வாதிட் டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அவன்கார்ட் நிறுவனத்தின் சட்டத்தரணியாகவும், பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சராகவும் திலக் மாரப்பன கடமையாற்றியிருந்தார். இரண்டு விடயங்களில் காணப்படும் முரண்பாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு தாம் பதவி விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட முன்னாள் சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலக் மாரப்பன,

முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில் நான் அமைச்சுப்பதவியிலிருந்துவிலகிவிட்டேன் எவ்வாறெனினும், எமது கட்சிக்காரர் குற்றமற்றவர். எதிர்காலத்தில் அதனை நிரூபிக்க முடியும். ஊடகங்கள் வாயிலாக எமக்குத் தொடர்ந்து சேறு பூசுகின்றனர். எம்மீது சேறு பூசிக் கொள்ள எமக்கு விருப்பமில்லை என்பதனால் அமைச்சுப் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்தோம். அவன்காட் நிறுவனத்தின் சர்ச்சைக்குரிய ஆயுதக் கப்பலில் இருந்து நாளொன்றுக்குச் சுமார் 30 தடவைகளாவது ஆயுதங்கள் பரிமாறப்படுகின்றன.

கடற்படையினர் மற்றும் ரக்னா லங்கா நிறுவனத்தினர், குறித்த ஆயுதக் கப்பலில் இருந்து இவ்வாறு ஆயுதங்களைக் கொண்டு செல்வது மற்றும் மீண்டும் கொண்டு வருவது போன்ற நடவடிக்கையில் இந்த நிமிடம் வரைக்கும் ஈடுபட்டு வருகின்றனர்.

ரக்னா லங்கா என்பது முற்று முழுதாக அரசினால் இயக்கப்பட்டு வரக்கூடிய ஒரு நிறுவனம். இந்த ஆயுதக் கப்பலானது 24 மணித்தியாலமும் கடற்படையினராலே பராமரிக்கப்பட்டு வருகின்றது.


குறித்த ஆயுதக் கப்பல் இருக்கும் இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் காலி துறைமுகப் பொலிஸார் இருக்கின்றனர். இவ்வளவு காலம் வரை அதனை அவர்கள் காணவில்லை என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. திடீரெனக் கண்டுபிடித்துப் புள்ளிகள் போட முயற்சிக்கின்றனர். நான் அமைச்சுப் பதவியில் இருந்து விலகச் செய்தாலும் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவேன். அத்துடன் இந்த அரசு உருவாவதற்கு நாம் பெரியளவில் பங்களிப்பு வழங்கினோம்.

விசாரணைகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நாம் அமைச்சுப் பதவியில் இருந்து விலக முடிவெடுத்தோம். இதன் காரணமாக தற்பொழுது மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் இருந்து வெளிவரும் உண்மைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்– என்றார். (த-வ)

## யாழ்.மீள்குடியமர்வு

செயலகத்தினால் திரட்டப்பட்ட தகவல்களில் அண்மையில் தெரியவந்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், நாளை புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதன்போது யாழ்.மாவட்டத்தின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. எஞ்சிய மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படக் கூடும் என்று தெரியவருகின்றது. (த-5)


தீபத்திருநாளின்
தெய்வீக ஒளி
உங்கள் வாழ்வில்
பிரகாசிக்கட்டும்
இத் தீபத்திருநாளில் உங்கள் உள்ளமெங்கும் மகிழ்ச்சி பொங்க
நல்லதிஷ்டங்களும் நலன் தரும் சௌபாக்கியமும் செழித்தோங்க
பிரகாசமான எதிர்காலக் கனவுகள் நனவாகிட
இலங்கை வங்கி மனமுவந்து வாழ்த்துகின்றது
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்
www.boc.lk

# ஆமையிடம் தோற்கும் வேகத்தில் வடமாகாண விளையாட்டு அமைச்சு

## ஆரம்பித்து ஐந்து வருடங்கள் கடந்தும் இன்னமும் பூர்த்தி செய்யப்படாத கூடைப் பந்தாட்டத் திடல்

மாங்குளம், நவ. 10

கடந்த 2011ஆம் ஆண்டு வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் கூடைப்பந்தாட்டத்திடல்அமைப்பதற்கெனஆரம்பிக்கப்பட்டவேலைத் திட்டம் இன்னமும் முழுமையடையாததையிட்டு விளையாட்டு ஆர்வலர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

வடமாகாணவிளையாட்டுத்திணைக்களத்தினால் வவுனியா மாவட்ட வீர, வீராங்கனைகள் பயன்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குறித்த மைதானமே இன்னமும் பூர்த்தியடையாமல் காணப்படுகின்றது. 2011ஆம் ஆண்டளவில் இதன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் இற்றைக்கு சுமார் 5வருடங்கள் கடக்கின்ற நிலையிலும். இதன் வேலைகள் பூர்த்தியடையவில்லை. இதற்கான தள வேலைகள் நடைபெற்று கூடைப்பந்தாட்ட தூண் போடப்பட்ட போதும் அதன் உறுதியற்ற தன்மையினால் இடைநடுவில் முறிந்தது. அவ்வாறே பல மாதங்கள் கழிந்தன. அதன் பின்னர் சீர் செய்யப்பட்ட தூண்களிலும் வெடிப்புக்கள் உருவாகி உள்ளிருக்கும் கம்பிகள் தெறித்து காணப்படுகின்றன. அதன் பின்னர் பல தரப்பினராலும் இது தொடர்பாக விசனம் தெரிவிக்கப்பட்ட போது கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தூண் செப்பனிடப்பட்டு கூடைப்பந்தாட்ட பலகையும் பொருத்தப்பட்டுள்ளது. ஆயினும் இன்னமும் நிலத்தின் வேலைகள் பூர்த்தியடையாமலும் அளவுத் திட்டங்கள் குறிப்பிடப்படாமலும் மைதானம் காணப்படுகின்றது. இதனால் அந்தத்திடலைப் பாவிக்க முடியாத நிலையில் வீரர்கள் காத்திருக்கின்றனர்.





**இந்நிலை தொடருவதற்கான காரணம்**

பிரதேச செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டு கூறுவிலைகள் கோரப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையில் நடைபெறும் இவ் வேலைகள், மேலதிகாரிகளின் அசமந்தப் போக்கால் பூர்த்தியடையாமல் காணப்படுகின்றது. இதன் அவசியம் மற்றும் தேவை என்பவற்றை புரிந்து கொள்ள இயலாத அதிகாரிகளால் இப்படிப்பட்ட வேலைகளில் அக்கறை காட்ட முடியாது இருக்கின்றது. உரியவர்கள் தமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளுக்கு வகை கூறும்வகையிலும் உயர் மட்டங்களில் உள்ளவர்கள் உரிய முறையில் நெறிப்படுத்தாமையுமே இதற்குரிய காரணம் என ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

**பொருத்தமான இடத்தில் மைதானம் அமையாமை**

ஏ-9 வீதியியை அண்டிய மைதானத்தை அமைக்கத் திட்டமிட்டமை பொருத்தமுடையாதாகக் காணப்பட்ட போதிலும், மைதானம்அமைக்கப்படும் ஓமந்தை மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட தொடரில் இதுவரை பங்குபற்றவில்லை என்பது இதன் முக்கிய குறைபாடாகும். வவுனியா வடக்கு கல்வி வலயத்திலேயே சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் தான் பாடசாலை மட்டத்தில் இந்தப் போட்டிகளில் பங்கு பற்றி வருகின்றது. அப்பாடசாலையில் இம் மைதானம் அமைக்க திட்டமிட்டிருந்தால் மிகவும் பொருத்தமானதாக அமைந்திருக்கும்.

அவ்வாறில்லாமல் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் இது பயன்பட வேண்டுமெனக் கருதினால் அவர்களுக்கான பயிற்சிகள் இன்றுவரை ஆரம்பிக்காதமை பெரிய தவறாக அமைகின்றது.

(ம-422)

### மாஸ்டரிடம் வீழ்ந்தது டயமன்ஸ்

யாழ்ப்பாணம், நவ. 10

இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் 7ஆவது வருடமாக நடத்தும் தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் திருகோணமலை சொக்க மாஸ்டர் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் திருகோணமலை சொக்க மாஸ்டர் அணி 2.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது. (ம-23)

### சென்றலைட்ஸ் சொக்ஸிடம் விபுலானந்தன் கிண்ணம்

யாழ்ப்பாணம், நவ. 10

பொ.விபுலானந்தன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டு வரும் கூடைப் பந்தாட்டத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ்சொக்ஸ்அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதிக் கொண்டது. இதில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 35:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. ஆட்டநாயகனாக தயாளன் தெரிவானார். (ம-23)

## யாழ். மாவட்டத்துக்கு இரு தங்கம்; தேசிய மட்ட பெண்கள் பளுதூக்கலில்

யாழ்ப்பாணம், நவ. 10

இலங்கைப் பளுதூக்கும் சங்கம் நடத்திய இளையோருக்கான பளுதூக்கும் போட்டியில் யாழ். மாவட்டத்துக்கு இரண்டு தங்கப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

பொல்காவலையில் இடம்பெற்ற குறித்த போட்டியில் 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆர்சிகா 58 கிலோ எடைப் பிரிவில் 129 கிலோ பளுவைத்தூக்கி தங்கப்பதக்கத்தையும், 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஜே.ஜே.பி. டினேசா 63 கிலோ எடைப் பிரிவில் 105 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (ம-23)





## டிறிபேக்குக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், நவ. 10

தேசியமட்ட இளையோருக்கான பளுதூக்கலில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

பொல்காவலை பெனடிற் மகாவித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் பளுதூக்கல் போட்டியில் 17 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவன் புசாந்தன் 105 கிலோ எடை பிரிவுக்கு மேற்பட்ட பிரிவில் 180 கிலோ எடையை தூக்கி வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ம-23)

## யாழ். இந்துவுக்குச் சில பதக்கங்கள் தேசிய மட்ட பளுதூக்கலில் கிடைத்தன



மாங்குளம், நவ. 10

இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவரும் இளையோருக்கான பளுதூக்கல் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு ஒரு வெள்ளியும் இரண்டு வெண்கலப் பதக்கங்களும் கிடைத்துள்ளன.

பொல்காவலை பெனடிற் மகாவித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் பளுதூக்கல் போட்டியில் 17வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 56கிலோ எடைப் பிரிவில் பி.விதுசன் 156 கிலோ பளு வைத்தூக்கி வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். அதே வயதுப் பிரிவில் 77கிலோ எடைப் பிரிவில் கலந்துகொண்ட ஏ.எட்வீன்வூட் 157 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 20 வயதுப் பிரிவில் 105 கிலோ எடைப் பிரிவில் எல்.டிறோசன் 165 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

(ம-422)



சங்கானை ஐக்கிய நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் கு.கயானன் முதலாம் இடத்தையும், வி.விஜிதரன் இரண்டாம் இடத்தையும், ம.டல்சன் மூன்றாவது இடத்தையும் கைப்பற்றியுள்ளனர். குறித்த மரதன் ஓட்டத்தின் ஆரம்ப நிகழ்வின் ஓர் பதிவு... (ம-422)

# முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில்
# ஆஸி. பதட்டமில்லாத வெற்றி

ஆஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று நியூசிலாந்தை 207 ஓட்டங்களால் வீழ்த்தி 1-0 என்று முன்னிலை பெற்றுள்ளது ஆஸ்திரேலியா.

பிரிஸ்பெய்ன் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் இன்னிங்ஸிற்காக 4 இலக்குகள் இழப்புக்கு 556 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சவுத்தி, நீஸ்கம், போல்ட், வில்லியம்சன் நால்வரும் தலா ஓர் இலக்கை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்தின் இன்னிங்ஸ் 317 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ராக் 4 இலக்குகளையும் ஜோன்சன் 3 இலக்குகளையும் கசில்வூட், லையன், மார்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



239 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலியாவுக்கு மீண்டும் சதமடித்து வலுச் சேர்த்தார் வோர்ணர். வோர்ணரின் பாணியில் தனது பங்கையும் ஆரம்பித்தார் பேர்ண்ஸ். அவரும் சதம் கடக்க இலக்குச் சரிவில்லாமல் 200 ஓட்டங்களை எட்டியது ஆஸி. 200 ஓட்டங்களை கடந்த சிறிது நேரத்தில் இருவரதும் இன்னிங்ஸும் கிறைக்கால் முடிவுக்கு வந்தது. சிமித் வந்த வேகத்தில் ஆட்டமிழந்தார் 264-4 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது ஆஸ்திரேலியா.

நியூசிலாந்து 142-3 என்ற நிலையில் இருந்த பொழுது நான்காம் நாள் முடிவடைந்திருந்தது. ரெய்லர் 20 ஓட்டங்களுடனும் மக்கலம் 4 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக களமிறங்கினர். மேலதிகமாக 6 ஓட்டங்களையே சேர்க்க முடிந்தது ரெய்லரால். பவிலியனுக்கு அனுப்பி வைத்தார் கசில்வூட். மக்கலம் தனக்கேயுரிய பாணியில் விளாசிக் கொண்டிருந்தாலும் வற்லிங், நீஸ்கம் இருவரும் அணியைக் கைவிட்டுச் சென்றனர். பின்வரிசை வீரர்கள் எவரது இன்னிஸ்ஸும் கரைசேர்ப்பதாக இல்லை. முடிவில் 295 ஓட்டங்களில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது நியூசிலாந்து.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன் 3 இலக்குகளையும் மார்ஸ், கசில்வூட், ஸ்ராக் மூவரும் தலா இரண்டு இலக்குகளையும் ஜோன்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## கோடிகளைக் கொட்டிக் கொடுக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை

அதிக அளவான டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய இந்திய வீரர்களுக்கு ஊக்கத்தொகையாக பெரும்தொகைப் பணத்தை வழங்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முன்வந்துள்ளது.

இந்த ஊக்கத் தொகையை மாதம் தோறும் பெறும் வகையிலும், ஒரே ஒரு முறை பெறும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2003-2004 ஆம் ஆண்டு சீசனோடு ஓய்வு பெற்ற வீரர்கள் 100 இற்கும் மேற்பட்ட டெஸ்டில் விளையாடி இருந்தால் அவர்களுக்கு ஒரே முறையில் ஒன்றரைக் கோடி ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும். 75 முதல் 99 டெஸ்ட்வரை விளையாடிய வீரர்களுக்கு ஒரு கோடியும், 50 முதல் 74 டெஸ்ட் வரை விளையாடிய வீரர்களுக்கு ரூ.75 லட்சமும் ஊக்கத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை 109 கோடிகளை செலவழிக்க உள்ளது. (ம)

# ஆடுகளத்தில் பேய்கள் இல்லை
## பந்துவீச்சாளர்களே வெற்றிக்குக் காரணம்
### *கோக்லி காட்டமான கருத்து*



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் கிடைத்த வெற்றிக்கு பந்து வீச்சாளர்களின் துல்லியத்தன்மையே காரணம் என்றும்,ஆடுகளம் மோசமாக இருந்தது, இந்திய அணிக்கு சாதகமாக அமைக்கப்பட்டது என்ற கருத்துக்களை ஏற்க முடியாது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார் இந்திய அணித்தலைவர் கோக்லி.

குறித்த விடயம் தொடர்பாக கோக்லி தெரிவித்துள்ளதாவது; ஆடுகளம் மோசமானதாகவும் இந்திய அணிக்கு சாதகமாகவும் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கின்றனர். இந்தக் கருத்தை ஏற்க முடியாது. ஆடுகளத்தில் பேய்கள் எதுவும் இல்லை. எந்த ஒரு பந்தும் மிக மோசமாக சுழன்று வரவில்லை. பந்துவீச்சாளர்களின் துல்லியத் தன்மைக்கு ஏற்ப ஆட்டம் அவர்களுடயதாய் அமைந்தது.

இதுபோன்ற ஆடுகளங்களில் துடுப்பாட்டம் செய்யும் பொழுது பந்தைத்தேடி மட்டையைக் கொண்டு செல்லக்கூடாது. பந்தை மேலெழும்பவிட்டு தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இதற்கு மன பலம்தான் முக்கியம். முரளி விஜய், புஜாரா ஆகியோர் இத்தகைய ஆடுகளங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணம். இரு இன்னிங்ஸ்களிலும் அவர்கள் தங்களது பங்களிப்பை சிறப்பாக அளித்தனர். ஜடேயா தன்னால் முடியும் என்பதை நிரூபித்துள்ளார். எதிர்காலத்தில் அவர் இந்திய அணியின் சொத்தாக இருப்பார்.' என்றார். (ம)

# தொடரைக் கைப்பற்றியது பங்களாதேஷ்

பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 58 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பங்களாதேஷ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளம் என்பதனால் முடிவு கிட்டத்தட்ட சரி என்று சொல்லிக்கொள்ளலாம். 19 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது இக்பாலின் இன்னிங்ஸ். டாஸ் முகமதுல்லா இருவரும் பத்து ஓட்டங்களை முழுமையாக நிறைவுசெய்யவில்லை. ஆனால் மறுமுனையில் நம்பிக்கை கொடுத்தார் கையிஸ். ரகிம் சிறிது நேரம் தாக்குப் பிடிக்க கையிஸ் அரைச்சதத்தை நிறைவு செய்தார். 21 ஓட்டங்களுடன் ரகிமின் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது. கையிஸை 76 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் வில்லியம்ஸ். ரகுமானம் மோர்ரசாவும் பின்வரிசையில் அணியைக் கரைசேர்க்க ஒருவாறாக 241 ஓட்டங்களைக் குவித்தது பங்களாதேஷ்.



எட்டக்கூடிய இலக்குத்தான் இருப்பினும் பழக்கப்பட்ட ஆடுகளத்தில் பங்களாதேஷை வீழ்த்துவத கடினம். சிம்பாப்வேயின் ஆரம்பம் வழக்கம்போல் எடுபடவில்லை. 23 ஓட்டங்களில் சக்கபவ, சிப்கபா இருவரும் ஆட்டமிழந்திருந்தனர். பதின்மத்துடன் பவிலியன் திரும்பினார் வில்லியம்ஸ். ரண்அவுட் ஆனார் எர்வின். தொல்வியை நோக்கி நடைபோட ஆரம்பித்தது சிம்பாப்வே. சிக்கும்புரா, ரசா இருவரும் மத்திய வரிசையில் நிலைத்துநிற்க மீண்டும் போராட ஆரம்பித்தது சிம்பாப்வே. இணைப்பாட்டம் நீடிப்பதையோ அல்லது இருவரும் அரைச்சதம் கடப்பதையோ அனுமதிக்கவில்லைஅமின்கொசைன். சிக்கும்புரா 47 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஆனால் எடுத்த ஓட்டத்துக்கும் மேலாக 30 பந்துகளை வீணடித்திருந்தார். இதுவும் ஒருவிதமான பின்னடைவே. பின்வரிசை வீரர்களால் தோல்வியைத் தவிர்க்க முடியாதுபோக 183 ஓட்டங்களில் சுருண்டு 58 ஓட்டங்களால் மீண்டும் அடிவாங்கியது சிம்பாப்வே. (ம)

# சீனிவாசன் திடீர் நீக்கம்
## ஐ.சி.சி. தலைவர் பதவியில் இருந்து

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவராக (ஐ.சி.சி.) இருந்த சீனிவாசனை பதவி நீக்கியுள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

சீனிவாசனுக்குப் பதிலாக தற்போதைய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் மனோகர் சர்வதேச கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையின் தலைவர் ஆகிறார். கடந்த ஜூன் மாதம் முதல் அடுத்த ஜூன் மாதம் வரை ஐ.சி.சியின் தலைவர் பதவி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடமே உள்ளது. தலைவராக யாரை நியமிப்பது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே முடிவெடுக்கும். இந்த நிலையில் சீனிவாசனை நீக்கி தலைவராகியுள்ளார் மனோகர். அடுத்த ஜூன் வரை மனோகரே தலைவராக இருப்பார். (ம)

## இரண்டாவது டெஸ்ட்டில் ஸ்ரெய்ன் சந்தேகம்

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஆட்டத்தில் ஸ்ரெய்ன் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது நாளில் ஸ்ரெய்னுக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவர் குறித்த ஆட்டத்தின் 2ஆவது இன்னிங்ஸில் பந்து வீசவில்லை. இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் 14ஆம் திகதி (சனிக்கிழமை) தொடங்குகிறது. இந்த ஆட்டம் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் ஸ்ரெய்னுக்கு உடல்தகுதி பரிசோதனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இரண்டாவது டெஸ்ட்டில் அவர் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (ம)

# சம்பியனானார் வீனஸ்

சீனாவில் நடைபெற்ற ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்று சாதித்துள்ளார் வீனஸ் வில்லியம்ஸ்.

இறுதியாட்டத்தில் கரோலினா பிளிஸ்கோவாவை எதிர்கொண் டார் வீனஸ் வில்லியம்ஸ். முதல் செற்றில் கரோலினா வீனஸ் வில்லியம்ஸிற்கு கடும் நெருக்கடி கொடுத்தார். இருந்தாலும் நெருக்கடியை சிறப்பாக சமாளித்த வீனஸ் அந்த செட்டை 7-5 என்ற கணக்கில்தனதாக்கினார். 2ஆவது செற்றிலும் கரோலினா கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் இந்தசெற்றும் இழுபறியாகியது. இறுதியில் வீனஸ் 7-6 என்ற கணக்கில் கைப்பற்றி 2-0 என வெற்றி பெற்று கிண்ணம் வென்றார். (ம)





பரிஸில் நடைபெற்ற ஆயிரம் புள்ளிகளுக்கான ரென்னிஸ் தொடரில் முர்ரேயை வீழ்த்தி தனது முதலிட அந்தஸ்தை வலுவாக பலப்படுத்திக் கொண்டார் ஜோகோவிக். ஆயிரம் தரவரிசை புள்ளிகளை தரக்கூடிய மாஸ்டர்ஸ் பட்டங்களை வெல்வது இது 26ஆவது முறையாகும். ஒட்டுமொத்தத்தில் ஜோகோவிக்குக்கு 58ஆவது மகுடம் இதுவாகும். இதனால் அடுத்த மூன்று மாதங்களுக்கு அவர் எந்தவொரு தொடரிலும் பங்கு பற்றாவிடினும் அவரது முதலிட அந்தஸ்து பறிபோகாத நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

# நரைனின் பந்தில் மீண்டும் சந்தேகம்

இலங்கைக்கு எதிரான இறுதி ஒருநாள் ஆட்டத்தில் நரைனின் பந்து வீச்சில் தவறு இருப்பதாக மீண்டும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இதனால் அடுத்த 14 நாள்களுக்குள் அவர் தனது பந்து வீச்சை பரிசீலிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த வருட ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணிக்காக நரைன் கலந்துகொண்டார். அவரது பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாகக் கூறி, பந்து வீச தடை விதிக்கப்பட்டது. ஆனால், கொல்கத்தாவின் மிரட்டலால் அவர் பந்து வீச அனுமதிக்கப்பட்டார். ஆனால், நரைன் தனது கையை அனுமதிக்கப்பட்ட 15 டிகிரிக்கு மேல் வளைப்பதாக பரவலான கருத்துக்கள் வெளிவந்தன. இதனால் நடப்பு வருட உலகக்கிண்ணத் தொடரில் இருந்து அவர் விலகியிருந்தார். இந்நிலையில் இலங்கைக்கு எதிரான தொடரில் நரைனின் பந்து வீச்சில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்த 14 நாள்களுக்குள் அவர் தனது பந்து வீச்சை பரிசீலிக்க வேண்டும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பிறகு, பாகிஸ்தானின் அஜ்மல், மொகமது கபீஸ் பங்களாதேஷின் சோகக் கசி நியூசிலாந்தின் வில்லியம்சன், இலங்கையின் சேனநாயக்க, திரிமந்து கௌசால் சிம்பாப்வேயின் உட்செயா மற்றும் மல்காம் வாலர் ஆகியோர் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நடவடிக்கைக்கு உள்ளாகியுள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா சின்னத்தம்பி யோன்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், பளையை வசிப்பிடமாகவும், பண்டியந்தாழ்வு, சுண்டுக்குளியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சின்னத்தம்பி யோன் 08.11.2015 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி யோனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-சிவகாமி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம்-பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், திலகரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஆரியதாசன் (முன்னாள் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர், லலிதா, செல்வநாயகம், சந்திராதேவி (முன்னாள் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்க எழுதுவினைஞர்) ஆகியோரின் பாசமிகு தாயும், வசந்தி, சறோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான தியாகராசா (ஸ்தாபகர், ஐடியல் கிறீம் ஹவுஸ்- யாழ்ப்பாணம்), விமலா மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்புச் சகோதரியும், பிறேமாவின் பாசமிகு மைத்துனியும், மயூரக்காந்-கஜந்தி, இறோசன்காந்-துஷானி, கௌசிகா-சுபந்தனன், பிரசன்னா-ஜனா, ஆரணி, வாசுகி-வெற்றிவேல், கஜன்-யசோதா, கீர்த்தன சங்கர், சுகந்தினி-தியாகராசா, தர்மிகா-சஞ்சீவன், சுறஜ், பபித்திரா, கிரிஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மைரித்தா, பைரவ், சரணியா, அஷான், நிஷோதன், விஷ்ணு ஜன், விதுஷிகன், மதுஷ்ஜா, விஜீஷ்மன், கஜானி, பபிஷானி, தியாந்தினி, தனுஷன், தனுப்பிரியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கொழும்புத்துறை தூண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தணமாதா கோவில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்: பொ.வெற்றிவேல்
தி.கஜன்
(ஐடியல் கிறீம் கவுஸ்)
மருதனார்மடம், யாழ்ப்பாணம்.
0777 250 444

(66012) (10.17)

# ரியல் மட்ரிட் அணி அதிர்ச்சித் தோல்வி

நடைபெற்றுவரும் லா லிகா தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் செவிலியா அணியிடம் வீழ்ந்தது ரியல் மட்ரிட் அணி.

குறித்த தொடரில் இதுவரை முடிவடைந்த ஆட்டங்களில் மாட்ரிட் அணியே கணிசமான ஆதிக்கம் செலுத்தி வந்தது. இதனால் இந்த ஆட்டத்திலும் மட்ரிட் அணியே வெற்றிபெறும் என்ற நிலை இருந்தது. ஆனால் 3:2 என்ற கோல் கணக்கில் மட்ரிட் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது செவிலியா. செவிலியா சார்பாக இமோபிலி, பெங்கா, லியோ மூவரும் தலா ஓர் கோலை அடித்தனர். மட்ரிட் சார்பாக றேமோஸ், ஜேம்ஸ் இருவரும் தலா ஓர் கோலை அடித்தனர். (ம)



ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
தீபாவளி நல் வாழ்த்துகள்
THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக
2880 DPI
Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)
NEW Photo Quality Printing
Jana Digital 0770731654
Photo Quality 40/- 60/=
Normal Quality 30/=
• பந்தல் பிறிண்டிங்
• பனர் பிறிண்டிங்
• விளம்பரப் பதாகைகள்
• ஸ்ரிக்கர்கள்
• லைட் பதாகைகள்
ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
0770731654

அன்பான வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
யாழ் நகரில் தூய்மையான சைவ உணவு வகைகளுக்கு
ஸ்ரீ நிகேதபவன்
163, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 221 9597

German Institute
German, Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் 7 வருட காலமாக நடைபெறுகின்றது.
10,Palaly Road, Jaffna.
Mrs.P.Kajenthini
077 160 4823
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
(#19864) (11,15,16)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


30
அகவையில்
உதயன்
தீபத்திருநாள் சிறப்பிதழ்
10.11.2015
(10.17)


சுவை
Mf
தரம்
MAHARAJA
FOOD PRODUCTS
பாரம்பரியம்
Roasted
Red Rice Flour
FARINE DE RIZ GRILLE
Jaffna Curry Powder
CHAKKI FRESH ATTA
100% WHOLE WHEAT GRAIN
MAHARAJA
Steamed
WHEAT FLOUR
நாடுங்கள் மாகாராஜா உணவு உற்பத்திகள்
இல 225 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் 011 2 360 926


ABI
Fashion World
அபி பஷன் வேல்ட்
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தித்திக்கும் தீப திருநாள் வாழ்த்துக்கள்
வர்ணஜால திருவிழாவின்
பரவசம் ததும்பும் புத்தாடைகள்
மயில் இறகின் தோகைக்கு இணையான
மென்மையான பட்டுப்புடைவைகளும்
புதுமையும் பல வர்ணங்களையும் கொண்ட
அதி நவீன டிசைன்களினாலான சுடிதார்கள்
மற்றும் ஆடவர், சிறுவர்களுக்கான
அதி நவீன ஆடைகளின் சாம்ராஜ்யம்
112, காங்கேசன்துறை வீதி,
(H.S.B.C. வங்கிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
abifashionworld
021 222 3738,
077 324 6503

மதுரகவி காரை எம்.பி அருளானந்தன்
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்



# தீபாவளிப் பண்டிகை இந்து மக்களால் கொண்டாடப்படும் ஆன்மிக விழா

தீபாவளிப் பண்டிகை இந்து மக்களால் கொண்டாடப்படுகின்ற குடும்ப ஆன்மிக விழாவாகும். இதை சமூக விழாவாகவும் கொள்ளலாம். இந்தியா முழுவதிலும் வாழுகின்ற இந்து மக்களும், எமது இலங்கை நாட்டிலும், கடல் கடந்த நாடுகளிலும் வாழுகின்ற இந்து மக்களும் சமய, சமூக, கலாசார ஒருமைப்பாட்டை உணர்த்தும் முறையில் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

நரகாசுரன் எனும் அசுரன் இறைவனை நோக்கித் தவஞ்செய்து வரங்கள் பலவற்றைப் பெற்றான். வரங்கள் அவனுக்கு வல்லமைகளை வழங்கின. வல்லமைகள் அகங்காரத்தையும் ஆணவத்தையும் வாரி இறைத்தன. நல்லவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். வரங்கள் தந்த இறைவனையும் மறந்தான். ஆலயங்களில் பூசைகள், ஆராதனைகள், விழாக்கள் நடைபெறுவதற்குத் தடை விதித்தான். ஏன் விளக்குகள் தன்னிலும் ஏற்றப்படக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தான். எங்கும் ஒரே இருள்மயம். மக்கள் படும் துயர்கள் சொல்லுந்தரமல்ல.

கொடுமைகள் விளைத்த நரகாசுரனைக் கிருஷ்ண பரமாத்மா சங்காரம் செய்தார். நரகாசுரன் இறக்கும் தருணத்தில் அவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. தான் மக்களுக்கு இழைத்த கொடுமைகளையும், அநீதிகளையும் எண்ணி மனம் வருந்தினான். தனது தவறுகளை உணர்ந்து கொண்டான். கடைசி நேரத்தில் கிருஷ்ண பரமாத்மாவை வணங்கி பலவாறாகத் துதித்து பகவானிடம் ஒருவரம் கேட்டான்.

தந்தையே என் வாழ்நாளில் நான் செய்த குற்றங்களுக்கு இந்தத்தண்டனைசரியானதேஎன்பதைஉணர்ந்துகொண்டேன். மரணத்தை ஏற்கச் சித்தமாயுள்ளேன். இந்த நேரத்தில் எனது ஒரேயொருவேண்டுதலைத்தந்தருளவேண்டும்என்று இரந்து நின்றான். நரகாசுரனுடைய கோரிக்கை என்ன என்று கிருஷ்ண பகவான் கேட்டார். நான் தவறுகளை உணர்ந்து மரணத்தைத் தழுவிய இந்த நாளில் உலகத்தவர் என்னை நினைவு கொள்ளும் வகையில் வரமொன்று அருள வேண்டும் என நரகாசுரன் வேண்டினான். கிருஷ்ண பகவானும் நரகாசுரனை நோக்கி நீ இறக்கும் நாள், ஆண்டு தோறும் நரக சதுர்த்தசி என்று அழைக்கப்பெறும். அதனால் உன் நினைவு நிலைபெறும். இந்தத் தினத்தில் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தபின் புத்தாடை அணிந்து என்னை வழிபாடு செய்பவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க அருள்புரிவேன். ஆண்டுக்கொருதரம் மக்கள் கொண்டாடுவர் என்று கூறி அவன் வேண்டிய வரத்தை வழங்கினார். அதேவேளை நரகாசுரனின் தாயாகிய பூமாதேவியும் கிருஷ்ண பகவானிடம் ஒரு வரம் வேண்டினாள். தனது மகன் இறந்த இந்தத் தினத்தில் ஆண்டு தோறும் மக்கள் ஆயிரம் விளக்குகள் ஏற்ற வேண்டும் என்பதே அந்த வரம். அதனையும் பகவான் வழங்கினார்.

அறியாமை இருள் அகன்ற நாள், அறிவொளி பரந்த நாள், அசுரத்தன்மைகள் விலகிய நாள், தெய்வீகம் பொங்கியெழுந்த நாள்,அகங்காரத்தை ஒழித்த நாள், அன்பு மலர்ந்த நாள், அச்சம் கழிந்த நாள், அமைதி பிறந்த நாள், தீயனவெல்லாம் தொலைந்த நாள், நல்லன யாவும் பொழிந்த நாள், அந்த நாள் தீபாவளித் திருநாள்.

தீபாவளித் தினத்தன்று வைகறையில் துயிலெழுந்து நல்லெண்ணெய் தலையில் தேய்த்து சிரசு ஸ்நானம் செய்ய வேண்டும். அதன் பின்பு புத்தாடை அணிந்து ஆலயம் சென்று இஷ்டதெய்வங்களை வணங்குதல் வேண்டும். தாய் தந்தையர், குரு மற்றும் பெரியோர்களை வணங்கி அவர்களிடம் நல்லாசிகள் பெறுதல் வேண்டும். இயன்ற தான தருமங்களைச் செய்தல் அடுத்து இடம்பெறும். பின்னர் உற்றார் உறவினர், நண்பர்களுடன் விருந்துண்டு மகிழ்வர்.

புறத்தூய்மையை நீராடிப் பெற்றுக் கொள்ளுதல் போன்று தீபாவளித்தினத்தில்அகத்தூய்மையும்பெற்றுக்கொள்ளுதல்இன்றியமையாதது. நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள் என்பனவற்றை நல்லெண்ணெய் ஆகவும்,அரப்பாகவும் கொண்டு அழுக்காறு, அவா, கோபம், அகந்தை, செருக்கு, மோகம், மமதை, பொறாமை, சுயநலம் ஆகிய மனஅழுத்தங்களைத் தேய்த்துக் கழுவி நீக்குதல் வேண்டும். புறத்தே ஏற்படும் விளக்குகள் கரிய இருளை அகற்றுகின்றன.அஞ் ஞானம் என்னும் அக இருளையும் போக்குதல் அவசியம். அதற்கு உண்மையென்ற ஒளியை உள்ளத்தில் ஏற்றுதல் வேண்டும். எமது உள்ளங்களில்அமர்ந்து எம்மை ஆட்டிப் படைக்கும் கொடிய நரகாசுரன் வேறு யாருமன்று. எம்மிடம் உள்ள தீயகுணங்கள் கொடிய தன்மைகள்தான் என்பதையும் உணர்வோமாக. தீபாவளியின்பொருளைஅறிந்து கொண்டாடுவதன் மூலம் மானுடம் மிக்க மனிதர்களாக வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்வோமாக.



# தீய சக்திகளை நசுக்கி, நல்ல சக்திகளை வளர்ப்போம்

இ.குமாரசாமி சர்மா
ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர்,
வண்ணார் பண்ணை.



இன்று தீபாவளிப் பண்டிகை. நாம் எல்லோரும் நீராடி, புத்தாடை உடுத்து, ருசியான பலகாரங்கள் உண்டு, குதூகலமாக இருக்கும் நாளாகும். சிறுவர்கள் தீய சக்திகளை சுட்டெரித்து விடும் வகையில் வெடிகளை வெடித்து களிப்புடன் சந்தோசமாக துள்ளி விளையாடும் நாள்.

பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் நரகாசுரன் என்னும் அரக்கனை கிருஷ்ண பரமாத்மா கொன்ற நாளாக இது கருதப்படுகிறது. ஓர் அசுரன் வதைக்கப்பட்ட தினத்தை பழங்காலம் முதல் ஒவ்வொரு வருடமும் நாம் ஏன் கொண்டாடுகிறோம்? நரகாசுரன் என்னும் அரக்கன் ஒருவன் இருந்து அவன் கிருஷ்ண பகவானால் கொல்லப்பட்டானா என்ற விடயத்தில் சிலர் நம்பிக்கை வைக்கலாம், சிலர் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் நரகாசுரனைப் போன்ற அசுர அம்சங்கள் மக்களிடையே எந்தக் காலத்திலும் நிலவி வருகின்றன.

அறியாமை, பிணி, ஏழ்மை இவைகளே நரகாசுரனின் அடிப்படை யான அம்சங்கள் இவை ஒரு நாட்டில் நிலவுகின்ற வகையில் நரகாசுரனைத் தோற்கடித்து வெற்றி கண்டதாகச் சொல்ல முடியாது.

நரகாசுரனுக்கு துணை புரிபவை, அறியாமையிலிருந்து வரும் துவேசம், பொறாமை, வெறுப்புணர்வு முதலானவை ஆகும். இவைகளால் மனித சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டு அல்லற்படுகின்றது. இந்தத் தீய சக்திகளை ஒழித்தால்தான் நாம் சந்தோசமாக வாழமுடியும்.

அறியாமை காரணத்தால் மனித சமூகம் பல பிரிவுகளாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று சண்டை போடுகின்றது. இவைகளுக்கு அடிப்படையான காரணங்கள் மனிதனிடத்தேயுள்ள அசுர குணங்கள் தான். நரகாசுரனின் வாரிசுகள் நம்மை இன்னும் விட்டபாடில்லை. மனிதன் இந்தத் தீய சக்திகளை எப்பொழுது வென்று நல்ல சக்திகளை நிலைத்தோங்க வளரச் செய்கின்றனவோ அன்று தான் மனிதனுக்கு உண்மையான விடுதலை நாள் என்று நாம் கொள்ள முடியும். தீயசக்திகள் எல்லாம் பலாத்காரத்தையும் கொண்டு இயங்குபவை ஆகும். நற்சக்திகள் யாவும் அகிம்சையையும்சத்தியத்தையும்அடிப்படையாகக்கொண்டு அன்பின் மூலம் இயங்குகின்றன. ஆகவே, மனித சமூகம் உய்ய வேண்டுமானால் பலாத்காரத்தை ஒழித்து அன்பின் வழியைப் பின்பற்றுவதுதான் மிக அவசியம்.

நாம் தீய சக்திகளுக்கு இடம்கொடுக்கலாகாது. இந்தத்தீயசக்திகள் வெவ்வேறு வடிவமாக நம்மிடையே வந்து புகுந்து கொள்கின்றன. இனத்துவேசம், மதத்துவேசம், மொழித்துவேசம், சாதித்துவேசம் என்ற வடிவங்களில் இன்று நரகாசுரன் வேலை செய்து வருகிறான். அவனுடைய குணங்கள் இன்னும் மனிதனிடத்தில் நிலவி வருகின்றன. நாம் மிகவும் கவனமாக இந்தத் தீய சக்திகளை நசுக்கி மனிதனுக்கென்று உண்மையாக ஏற்பட்டிருக்கும் நல்ல சக்திகளை வளர்ப்பது நமது கடமை என்று வலியுறுத்தவே தீபாவளிப் பண்டிகையை வருடந்தோறும் கொண்டாட வேண்டுமென எம் முன்னோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த இலட்சியத்தை அடைய நாம் எல்லோரும் முயற்சிக்க வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.






# தேசத்து மக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்

தமிழ் மதுரகலா

நேசத்தை வைத்து உறவுளைப் பேணி
நீள நினைத்து வாழ தீபாவளி வாழ்த்துக்கள்
வாசத்தைப் பெருக்கும் தமிழர் பண்பாடு காத்து
வையத்துள் உயர்ந்திட தீபாவளி வாழ்த்துக்கள்
பேதத்தை அகற்றி பெருமைகள் பேசியே
புஞூீறந்த பொன்னாட்டை காத்திட தீபாவளி
வாழ்த்துக்கள்
தீபத்தை ஏற்றி இருளெல்லாம் போக்கிட
தேசத்து மக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்



Jaffna College
Undergraduate department
Chartered Accounting course
Banking Course
aat ( Sri Lanka )
Pharmacy Course
English Course
External Degree(BA,Bcom)
CA
IBSL INSTITUTE OF BANKERS OF SRI LANKA
aat SRI LANKA
464, Hospital Road, Jaffna.
Tel No :- 021 222 3382, 021 222 9149

# வாகனங்களில் எரிபொருள் ஊக்கியாக செயற்படும் Soltron

**கேள்வி: Soltron என்றால் என்ன?**
பதில் : இது ஒரு எரிபொருள் ஊக்கியாகும். Soltron எரிபொருளில் கலந்து பயன்படுத்தலாம்.

**கேள்வி: எந்தநாடு இதனை உற்பத்தி செய்கிறது?**
பதில்: ஜப்பான் இதனை உற்பத்தி செய்கிறது. பிறநாடுகளில் வேறு வேறு பெயர்களில் விற்பனை செய்யப்படுகிறது.

**கேள்வி: எப்போது இது உற்பத்தி செய்யப்பட்டது?**
பதில்: 24 வருடங்களுக்கு முன்னர் இது உற்பத்தி செய்யப் பட்டது. எனினும் 14 வருடங் களுக்கு முன்னரே இலங்கை யில் அறிமுகப் படுத்தப்பட் டது.



**கேள்வி: Soltron எவ்வாறு செயற்படுகிறது?**
பதில்: எரிபொருளின் தகன மடையும் சக்திக்கு ஏற்பவே அதன் இயக்க சக்தி உரு வாக்கப்படுகின்றது. எரி பொரு ளுடன் Soltron கலக்கப் படும் போது எரிபொருளின் அடர்த் தியான மூலக்கூறுகள் ஐதாக் கப்படு வதால் அவை தகன மடைவது இலகுவாக்கப்படு கிறது. இதனால் எரிபொருள் தகன சக்தியும் அதன் மூலம் இயக்க சக்தியும் பெரு மளவில் அதிகரிக்கின்றன.
இது பெரியதொரு மரக்குற்றி தனித்து எரிவதைக்காட்டிலும் சிறிய விறகுகளுடன் சேர்ந்து எரிக்கப் படும்போது கூடு தலாக தகன மடைந்து கூடுதலான எரிசக்தியைத் தருவது போன்றதாகும். இவ்வாறு Soltron கலக்கப்பட்ட எரிபொருளின் தகன சக்தி சுமார் 50 மடங்கு அதிகரிப்பதுடன் இயக்க சக்தியும் வேகமும் 60 தொடக்கம் 70 மடங்கு வரையில் அதிகமாகின்றன. இதனால் இயந்திரம், பிஸ்டன் மற்றும் இயக்கத்துக்கான பாகங்களின் இயக்கமும் வேகமும் பெருமளவில் அதிகரிக்கின்றன.
அடுத்ததாக அடர்த்தியான எரிபொருள் தகனமைடையும் போது ஏற்படும் எரிபொருள் கழிவுகள் Soltron கலக்கப்படும்போது பெருமளவில் குறைவடைகின்றன. இதற்குக் காரணம் Soltron எரிபொருளை ஐதாக்குவதால் எரிபொருள் கழிவுகளும் இன்றி பெரும்பாலும் முற்றிலும் தகனமடைவதாகும்.

**கேள்வி: வாகன எஞ்சின்களுக்கு இதனைப் பயன்படுத்துவது எவ்வாறு நன்மை பயக்கிறது?**
பதில்: இதன் காரணமாக காபன் கழிவுகள் கரித்துகள் மற்றும் தூசுகள்


(Soltron) (சோல்றோன் ஊக்கு பயன்படுத்த புதிய வாகனம்

10% -15% வரை எரிப் பொருள் மீதப் படுத்தப்படு வதாகவும் காபன் புகை வெளியேற்றம் 70% வரை யில் குறைக்கப்படு வதாக வும். உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

**கேள்வி: Soltron யை பயன் படுத்தியதால் அதன் நன் மையை எவ்வாறு அள விடலாம்?**
பதில்: மாற்றம் தெரியும். வாகனத்தில் இருந்து வெளி வரும் புகை குறைவடையும். வாகனத்தின் வேகமும் உற்பத்தித் திறனும் அதிகரிப்பதால் குறிப் பிட்ட தூரத்தை விரைவில் சென்றடைய முடியும்.

**கேள்வி: எந்த நாடுகளில் இதற்கான சான்றிதழ்கள் வழங் கப்பட்டுள்ளன?**
பதில்: பிரித்தானியாவின் பெல்பெர்ஸ் நகரின் கம்பஸில் பரிசோதனை செய்யப்பட்டு 10%- 15% எரிபொருளை சேமிக்க முடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங் கையின் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட பரிசோதனையின் போது 15% எரிபொருளைச் சேமிக்க முடியும் எனவும் நிரூபிக் கப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களுக்கு இதனைப் பயன்படுத்திப் பார்த்தபோது 6 தொடக்கம் 7% எரிபொருளை சேமிக்க முடிந்ததுடன் 70% புகை குறைவடைந்தமையும் காணமுடிந்தது.

**கேள்வி: Soltron எவ்வாறான எண்ணெய்களுக்கு இதனைப் பயன்படுத்த முடியும்?**
பதில்: டீசல், மண்ணெண்ணெய்.

**கேள்வி: Octane 95சுப்பர் டீசல் உடன் இதனைப் பயன்படுத்தும் போது நன்மை உள்ளதா?**
பதில்: நிச்சயமாக ஆம். இவற்றுக்குப் பாவிப்பதால் எவ்வித பிரச்சினையும் இல்லை.

**கேள்வி: Soltron ஏனைய எரிபொருள் ஊக்கிகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?**
பதில்: எண்ணெய்களில் Soltron னை மட்டுமே இதற்குப் பயன்படுத்த முடியும். இந்த தொழில்நுட்பம்Soltron இல் மட்டுமே பயன்படுத் தப்படுகிறது. இது எரிபொருளை சுத்த மாக்குவதால் சிறந்த முறையில் தகனமடையச் செய்கிறது.

**கேள்வி: டீசல் ஒழுங்காக தகன மடையாவிட்டால் எமது உட லுக்கு ஏற்படும் பாதிப்பு என்ன?**
பதில்: அதிகளவு கரிப்புகை படிவ தால் எமது நுரையீரல் பாதிப்படை கிறது. கண்கள், மூக்கு, தொண்டை என்பனவும் பாதிப் படைவதுடன் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுவதுடன் மாரடைப்பு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. சிலவேளை களில் மரணமும் ஏற்படலாம்.


(Soltron) சோல்றோன் ஊக்கி பயன்படுத்திய பின் அதே வாகனம்

**கேள்வி: Soltron பாவிப்பதால் ஏனைய நன்மைகள் எவை.?**
பதில்: எரிபொருள் முறை மைக்கு தடை ஏற்படாது. டீசல் பில்டரை அதிக காலத்துக்கு பாவிக்க முடி யும். எஞ்சின் எண்ணெயில் காபன் கலக் கப்படாததால் அதிக காலத்திற்கு பாவிக்கலாம். புகை படிவது குறைவு. சுற்றாடலுக்கு நன்மை பயக்கும். எஞ்சின் பழுதடைவது குறைவடை யும். Soltron இல்லாமல் இந்த நன்மையைப்பெற வேண்டும். எனின் ஒரு லீற்றர் எரிபொருள் 30 ரூபாவினால் குறைவடைய வேண்டும்.


(Soltron) ஊக்கியுடன் 45000 Km ஓடியபின்பு டீசல் வாகனத்தின் பிஸ்டன்

**கேள்வி: Soltron இதனால் ஏற்படும் பிரயோசனங்கள்?**
பதில்: புகைபடியாததால் நோய்கள் ஏற்படாது ,வைத் தியசாலைக்கு செல்லத் தேவையில்லை. எரி பொருளை சேமிக்க முடிவ தால் அரசாங்கமும் நன்மை பெறும். சுற்றாடலுக்கு நன்மை பயப்பதால் சுற்று லாப்பயணிகள் அதி களவில் இங்கு வருகைபுரிவர்.
உதாரணமாக இலங்கையில் 2014 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட டீசல், பெற்றோலுக்கு Soltron னை பயன்படுத்தியிருந்தால் 1000 மில்லியன் அமெரிக்க டொலர் களை சேமித்திருக்கலாம். 50ml Soltron போத்தல் 110 ரூபா வாகும். 50 லீற்றர் எரிபொருளுக்கு பயன்படுத்த முடியும். நீங்கள் இதனை இதுவரை பயன்படுத் தாவிட்டால் உடனடியாக பெற்றோல் , டீசல் நிலையங்களுக்கு விரைந்து Soltron னை கொள்வனவு செய்யுங்கள்
மேலதிக தகவல்களுக்கு 011 5289500 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


எம் இனிய உறவுகள், அன்பர்கள்,
வாடிக்கையாளர்கள், அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
காலங்கள் மாறலாம். அதுபோல் நாமும்,
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...
தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்
Carat Machine
நியூ உதயா
ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Thank You
NEW Uthayaa
JEWELLERS
021 222 2031
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jwellrs
uthaya.new

இலங்கையின் மிகப்பாரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு

ESOFT
Shaping Lives, Creating Futures.

# ESOFT METRO CAMPUS

# தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## IT + ENGLISH

assured by PEARSON

Diploma in Information Technology

Diploma in ENGLISH

DUAL CERTIFICATION (ESOFT + Pearson)

NEW BATCHES
2015.11.14
2015.11.16
9.00AM

DiSE — Diploma in Software Engineering — Duration : 6 Months — Free Text books — assured by PEARSON

DiWE — Diploma in Web Engineering — Duration : 6 Months — Free Text books — assured by PEARSON

DiBM — Diploma in Business Management — Duration : 4 Months — assured by PEARSON

DiHN — Diploma in Hardware & Networking — Duration : 4 Months — Free Text books — assured by PEARSON

DiBE — Diploma in Business English — Duration : 4 Months — Free Text books — assured by PEARSON

DiCA — Diploma in Computerized Accounting — Duration : 5 Months — Free Text books — assured by PEARSON

HND Programmes
DEGREE Programmes
MASTER Programmes

நவம்பர் மாதத்திற்கான பதிவுகள் ஆரம்பம்

## PEARSON edexcel — BTEC HND Computing & Sytems Develoment

Highlights in Computing
- Computer Systems
- Programming Languages (C++, C#.net, Asp.net, Java)
- Web Application Development
- Object Oriented Programming
- Network Technology
- Knowledge based systems

Including 16 Modules

MBA M.Sc
Degree - Final Year
B.A (Hons) Business Administration
B.Eng. (Hons) in Software Engineering
B.Sc. (Hons) in Computing
HND in Computing & Systems Development / in Business Management
OL's / AL's / DiTEC

Success to Degree
Final Year
BEng (Hons) in Software Engineering
BSc (Hons) in Computing
BA (Hons) in Business Administration
Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY
UGC Recognised

## PEARSON edexcel — BTEC HND Business Management

Highlights in Business Management
- Human Resource Management
- Business Environment
- Organizational Behaviour
- Marketing Management
- Financial Management
- Business Law
- Quality Management

Including 16 Modules

Investment Rs.12,500 Monthly

Success to Degree
Final Year
BA (Hons) in Business Administration
Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY
UGC Recognised

Networking
Business Management
Computing & Systems Development




Graduation Ceremoney 2015

### Testimonial from HND Student



எனது பெயர் சு.திருச்செந்தூரன், நான் உயர்தரச் சித்தியுடன் வங்கித்துறையில் பணிபுரிந்து கொண்டிருக்கையில் எனது அறிவுத்திறனை வளப்படுத்துவதற்காகவும் பதவி முன்னேற்றத்திற்கான வாய்ப்பினை அதிகரித்துக் கொள்வதற்காகவும் பட்டத்துடனான உயர் கல்வியினைத் தொடரவேண்டிய சமயத்தில் இலங்கையின் முதற்தரக் கல்வி வலையமைப்பையுடைய நூனூகுழு நிறுவனம் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டேன். ESOFT நிறுவன விரிவுரையாளர்களின் வழிகாட்டலுக்கமைய இலங்கை மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட HND in Business Management கற்கைநெறியினைக் கற்று வருகின்றேன். இக் கற்கை நெறியானது பட்டப்படிப்பினது இரண்டு வருட பூர்த்திக்கு நிகரானதாகும்.

ESOFT Metro Campus யாழ் கிளையின் அனுபவமிக்க விரிவுரையாளர்களினால் எனது விடுமுறை நாட்கள் கருத்திற் கொண்டு விரிவுரைகளை நவீன தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிநேகபூர்வமான முறையில் கற்று வருகிறேன்.

இக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த பின்பு தொழில்துறையில் பெற்றுள்ள அனுபவத்தினைக் கொண்டு முதுமாணி (MBA) கற்கைநெறியினைத் தொடர்வதற்கான தகுதியைப் பெற்றுள்ளேன் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.





ESOFT Metro Campus has fulfilled my requirement in IT field through innovative studies and appropriate paracical projects. The way of taking lectures has been very motiveted and understandable even i had not a strong knowledge on IT and made me an enthusiastic person for getting a succussful future in the field of IT. Therefore thank to ESOFT for their enormous cooperetion

V.Divagar (B.Sc.in Agriculture)
Designation : Temporary Lecturer, Faculty of Agriculture, UOJ


LONDON METROPOLITAN UNIVERSITY | Kingston University | PEARSON | Registered Course Provider | Microsoft IT Academy Program Member | ORACLE ACADEMY | intel

ESOFT
Shaping Lives, Creating Futures.

## ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna |
Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142

HOTLINE 077 309 9 308

# மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2015
# BCAS Campus - Jaffna



**இனிய தீபாவளி**
**நல் வாழ்த்துக்கள்**

தனியார் உயர் கல்வித்துறையில் 16 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)




கற்கை நெறிகள்

- **Civil Engineering**
- **Biomedical Science**
- **Quantity Surveying**
- **Computing & System Development**
- **Business Management**
- **Business Marketing**
- **HR Management**

| | |
|---|---|
| காலம் | : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி) |
| கட்டணம் | : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும் |
| மொழிமூலம் | : ஆங்கிலம் |
| அனுமதி | : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்) |

மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

## டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**

க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**

Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

## கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**

நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **Information Technology (IT)**

Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **IELTS**

சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:

**077 710 2131**

16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

15 YEARS of Trust & Excellence in Higher Education

Design@www.MacroAdz.com

# தீபாவளித் தினம்

இந்து மக்களின் பண்டிகைத் தினங்களில் தீபாவளியும் ஒன்று. இந்தத் தினத்தை ஏன் பெரிதாகக் கொண்டாடுகின்றார்கள் என்பதைச் சிந்திப்போரின் கவனத்துக்குச் சிலகதைகளை முன்வைக்கின்றேன். ஆண்டு தோறும் ஐப்பசி மாதத்தில் தேய்பிறைச் சதுர்த்தியில் இந்தத் தினம் வருகின்றது.

நரகாசுரன் என்ற அசுரன் தேவர்களுக்கும், பூவுலகத்தினருக்கும் தொல்லைகள் கொடுத்து வருத்தி வந்தான். இவனது கொடுமை தாங்க முடியாதவர்கள் கிருஷ்ண பரமாத்மாவுக்கு முறையிட்டனர். அவர் சத்திய பாமாவின் துணைகொண்டு நரகாசுரனுடன் வதம் செய்து அசுரனைக் கொன்றார்.

நரகாசுரன் உயிர் பிரியும் போது மன்னிப்புக் கேட்டு, இந்தத் தினத்தைக் கொண்டாடும்படி வரமளிக்குமாறு கிருஷ்ணரைக் கேட்டதாகவும் புராணக்கதை உண்டு. இந்தத் தினம் பற்றி வேறுபல கருத்துக்களும் நூல்களில் உண்டு. அவற்றையும் பார்ப்போம்.

1. விஷ்ணு புராணம் கூறுவது மகாபலி பேரரசர் முடிசூடிய இந்த நாள்.
2. விக்கிரமாதித்தன் முடி சூடிய நாள் என்றும் கூறுவர்.
3. இராவணனைக் கொன்று வெற்றியீட்டிய நாள் என்று இராமாயணம் கூறுகின்றது.
4. முகமதியரால் சிறை வைக்கப்பட்ட குருகோவிந்த சிங் என்னும் சீக்கிய குரு சிறையிலிருந்து தப்பிய நாள் என்று சீக்கியர் கூறுகின்றனர்.
5. மகா வீரரான சமணத்துறவி முத்தி பெற்ற நாளாகச் சமணர் கூறுவர்.
6. மகா விஷ்ணுவாக (பன்றி) அவதாரத்தில் பூமாதேவியை மணந்து கொண்டபோது அவர்கள் இருவருக்கும் நரகாசுரன் பிறந்தான் என்பர்.

பூமாதேவியை மணந்தார் என்றால் பூமியை மணஞ் செய்தாரா? பூமாதேவி என்ற பெண்ணை மணந்தாரா? எத்தனை ஆயிரம் தீபாவளி காட்டிற்பனையாகிறது.

(XVII ஆம் பக்கம் பார்க்க...)



















# தீபாவளி ஒரு நாள் கொண்டாட்டம் அல்ல

( XIX பக்கத் தொடர்ச்சி)

**ஐந்தாம் நாள்**

தீபாவளியின் ஐந்தாவது நாளை கோவர்தன் பூசை என்றும் அழைப்பார்கள். தனது சக மனிதர்களை வெள்ளத்தில் இருந்தும், மழையில் இருந்தும் காப்பாற்ற கோவர்தன மலையை கிருஷ்ண பரமாத்மா தூக்கியத்தைக் குறிப்பதே இந்த நாளாகும். கர்நாடகா மற்றும் தமிழ் நாடு போன்ற தென்னக மாநிலங்களில் இந்த ஐந்தாம் நாளை பாலி பட்யமி என அழைப்பார்கள். இந்த நாளில் தான் விஷ்ணு பகவான் அசுர அரசனான பாலியை அழித்துள்ளார். மராத்தியர்கள் இந்த நாளை நவ தியாஸ் அல்லது புதிய தினம் என அழைக்கிறார்கள்.

ஆறாம் நாள்

ஆறாவது நாளை பாய்துஜ் எனவும் அழைக்கிறார்கள். சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு இடையேயான அன்பை நினைவுபடுத்தும் விதமாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. வங்காள நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த நாளை பாய் போட்டா எனவும், குஜராத்தியர்கள் இந்த நாளை பாய் பிஜ எனவும் அழைப்பார்கள். இந்த நாளின் போது தான் சாவின் கடவுளான யமதர்மன் தனது தங்கையான யாமியை யமுனை நதி சந்தித்தார் என புராணம் கூறுகிறது. இந்த நாளின் போது, எப்படி தனது சகோதரனான எமனுக்கு யாமி விருந்து படைத்தாரோ, அதே போல் இந்த நாளில் சகோதரர்களும், சகோதரிகளும் உணவைப் பகிர்ந்து கொள்வார்கள்.








menus magazines flyers invitation cards posters books calendars tags brochures letter heads certificates t shirt business cards profiles banners Stickers Lables Leaflets boxes & packaging event tickets digital name boards

**PRINTING**

We Print Miracles

Our excellent customer service and high quality printing make us the most reliable printing partner for all the projects you need done "right now".

உங்கள் தேவைகளை
எமது தேர்ச்சி மிக்க வடிவமைப்பாளர்களால்
உங்களுக்கென்று தனித்துவமாக வடிவமைத்து
எமது உயர்தர பிறிண்டிங் சேவையினை
பெற்றுக் கொள்ளுங்கள்.




**ideas PRINTERS**

All kind of Offset Printing & Digital Printing

936A, K.K.S Road, Jaffna. (near the naachimar kovil) 021 221 2505 / 021 222 7788



BLOOMING BUDS The Wisdom of children

## Blooming Buds International School

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

### பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

**English Medium (Gr 1 - 11) All Subjects**

**10 மாதங்கள் தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

**மேலதிகமாக**

சிங்களக்கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா, சிங்கள டிப்ளோமா ( பேசும் ஆங்கிலம் அடங்கியது ) ஆங்கில இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்திடிப்ளோமா, கணினி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக் கப்படும்.

ஐந்து வருடங்களாக சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுநர் ஆசிரியர்களைப் பயிற்றுவித்த எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித் தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத் துக்கொள்ள முன் வந்துள்ளோம்.

❋ தகைமைகள் ❋

- க.பொ.த சாதாரண தரம் 6பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60நாள்களிற்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப் படுவீர்கள்.
- போயாதினம் உட்பட அரசவிடுமுறை தவிர ஏனைய நாள் கள் காலை 8.30 - 5.00 மணி வரை வேலை நாள்களாகும்.

**கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும்.**
(நிபந்தனைக்கு உட்பட்டது)

**பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கட்டணம் 34,000/= ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.**

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தரா தரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் [9X4] அள வுள்ள தபாலுறையில் 45 ரூபாய் முத்திரை ஒட்டி தராதரப்பத்திரத்துடன் இணைத்து பதிவுத்தபாலில் அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் மேல் மூலையில் 01 - 11 வகுப்பு வரை என்று எழுதி அனுப்பவும்.

### முன்பள்ளி மாணவர்களுக்கான அனுமதி - 2016

**உங்கள் பிள்ளைகளுக்கு இரண்டரை வயது நிறைவடைந்து விட்டதா?**

**எந்தவொரு பாடசாலை நாள்களிலும் Play Group இல் இணைந்து கொள்ளலாம்**

**British and National Curriculum**

**Local Syllabus**

**ADMISSIONS FOR .MONTESSORI**

***GRADE : 01 - 03***

**Hotline: 071 566 9641**

கிளைகள்: தெமட்டகொட, புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் [சுதுமலை], கல்முனை

*பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி*

***Officer***

**Blooming Buds International Teacher Training Institute**

***Thavadi Road, Suthumalai, Manipay***

PV 94034

| | | |
|---|---|---|
| Thavadi Road, Sudumali,Manipay P.N 021 225 6641 | 390/2/1 Base Line Road, Dematagoda, P.N 011 267 7641 | No- 5 Rathamalyaya, Puthalam, P.N 032 226 6641 |

## தீப ஒளியில் தீமைகளை வெல்வோம்


(XI தொடர்ச்சி.. )

பசிக்கு விருந்தாக நோய்க்கு மருந்தாக நல்ல அறிவூட்டும் மந்திரியாக, கைதரும் தோழனாய், பணிசெய்யும் சேவகனாய் அருள்பாலிக்கும் தெய்வமாய் நின்றாலும் அற்புதன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

'கார்மேகச் செங்கண் கதிர் மதியம் போல முகத்தான" என ஸ்ரீ ஆண்டாள் போற்றும் நெடுமால் சோதி வடிவானவன் என்பதை முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ எனப் புகழ்ந்தேத்தும் 'நம்மாழ்வார் கட்டுரைக்கின் தாமரையின் கண்பாதம் கையயாவ்வா கட்டுரைத்த நன் பொன்னுள் திருமேனி ஒளியொவ்வா பரஞ்சோதி நின்னுள்ளே படர் உலகம் படைத்து ஆளும் பெருமானே மறையாப நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே. பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும் இறையாதல் அறிந்தேத்த வீற்றிருந்த ஆதிமூலம்' எனவும் கசிந்துருகி பணிந்து நின்றார்.

திருமாலின் திருவுருவத்தை 'கதிரோனின் கதிர் வண்ணத்தில் கண்டு களிப்பெய்தி பொன்போலும் சக்கரர் படையை ஒரு கரத்திலும் வலம்புரி சங்கை மறுகரத்திலும் கண்டேன் எனக் கண்ணன் பேரழகை வியந்து திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும் அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்களரும் பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக் கண்டேன். என்னாழி வண்ணன் பால் இன்று எனப் பேயாழ்வார் போற்றி நின்றார். திருமாலின் அவதாரங்கள் ஒவ்வொன்றும் அர்த்த முள்ளவை. 'நானிலம் எங்கணும் வாழ்வார் எவர்க்கும் நன்மைகள் ஓங்கச் செய்வன.' நலன்களைப் பெருக்குவன. நாமங்கள் ஆயிரம் உடைய நாரணநம்பி அருவும் உருவும் ஆகிய முன்னிய மூவகைத்தையும் படைத்து துன்னுகர சரணம் முதலாக எல்லா உறுப்பும் படைத்து சுவையொலி, யூறொலி, நாற்றம் முற்றுமாகி அருள்பாலிப்பவன். 'கண்ணன் கழலினை நம்புவார் நன்னு வார்க்கு கேடு சூழாது வைகுந் தமும் சென்றேகுவர்.' இன்றைய தீபத் திருநாளில் விளக்கேத்தி மகிழும் இன்ப நாளில் புன்னெறிகளைப் புறமே தள்ளி 'புதியதோர் உலகம் காண மனதில் உறுதி வேண் டும். வாக்கினில் இனிமை வேண்டும். நினைவு நல்லது வேண்டும். நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்னும் பாரதி பாடலை நெஞ்சில் வைத்து இன்முகம் காட்டி இன்சொல் பேசி நல்லன எண்ணி இனிதே வாழ திடம் கொள்வோம்.

■ கந்த தியாகராசா











# தீப ஒளியில் தீமைகளை வெல்வோம்

பூதலத்து மாந்தர் பெருநாளாய்க் கொண்டாடும் பண்டிகைத் தினங்கள் யாவும் புனிதமானவை. புண்ணியம் நிறைந்தவை. இயற்கையின் மாற்றங்களுக்கு ஏற்பவும் சூரியனின் செல்திசையைத் தழுவியும், சமய நெறிகளைச் சார்ந்தும் ஆண்டுக்கோர் முறை கொண்டாடும் நன்னாள்.

சிறுவர் முதல் பெரியோர் வரை குதூகலத்துடன் கொண்டாடும் இந்தத் திருவிழா புத்தாடை புனைதல், இறைவழிபாடு, வாழ்த்து மடல்கள் மூலம், அன்பைப் பரிமாறல், விருந்தோம்பல், கலைநிகழ்ச்சிகள் கேளிக்கைகள், விளையாட்டுக்கள் போன்ற இன்னோரன்ன கோலாகலச் செயற்பாடுகளைக் கொண்டது. மாந்தரிடம் சிறந்த பண்பு நெறிகளைப் பண்டிகைத் தினங்கள் தோற்றுவித்தன. கூட்டுக்குடும்பம், கட்டுக்கோப்பான வாழ்வு, இனசன உறவு, அயலவர் நேசம், சமூக ஒற்றுமை, இனப்பற்று, மொழிப்பற்று இவையாவும் எமது இனத்தை எழுச்சி பெறச்செய்தன. பெற்றோரைப் போற்றல், பெரியோரை வணங்கல், மூத்தோர் சொல் கேட்டல், குருவைப் பணிதல், தமிழோடு இசைபாடித் தெய்வம் தொழல், நல்லனவையை எண்ணி கூட்டுப்பிரார்த்தனை செய்தல் குலவொழுக்கம் மேவுதல் போன்ற மேலானவற்றைக் கைக்கொண்டு நம்மவர் வாழ்ந்தனர். மக்களிடை தோன்றும் பிரச்சினைகள், பிணக்குகள் கூட தெய்வத்திருமுன் சூடமேத்தி இறைவன் பெயரால் தீர்வுகண்டு நீதியை நிலைநாட்டி நிறைவு கொண்டவர்கள் எமது முன்னோர். அவர்கள் வாழ்வும் செழித்து வளமும் வளர்ந்தது. இத்தகைய நற்பண்புகள் இன்று அருகி வருவதால் கேடுகள் எம்மைச் சூழ்கின்றன. மாற்றங்கள் மலிகின்றன. இடர்கள் பெருகிப் பாரம்பரியத்தை, கலாசாரத்தை அழித்து எமது இனம் வீழ்ச்சியுற வழிகோலுகின்றன. எமது கண்களை நாமே குத்திக்கொள்ள மாற்றானின் வஞ்சகம் வலுப்பெற்றுவிடும். எனவே இந்தப் புனித நாளில் மீட்சி காண இணைவோம்; எழுவோம்.

தீய குணங்களைத் தீயிலிட்டு அன்பு, கருணை, பொறுமை, கனிவு, பணிவு, மென்மை, மன்னிப்பு போன்ற மேலான குணங்களை வளர்க்கும் பண்டிகைத் தினங்கள் பலவுள. இவற்றுள் தைப்பொங்கல், புது வருடம், தீபாவளி என்பனவும் அடங்கும். இதில் தீபாவளி எனும் தீபநாள் சமயத்தோடு தொடர்புடையது. இன்று தீபாவளித் திருநாள். இது ஒரு நற்பெருவிழா. நன்னாள். தீபத் திருநாள் சைவர், வைஷ்ணவர் எனும் வேறுபாடின்றி அனைவரும் கொண்டாடும் பெருமை பெற்றது. இந்தியாவின் பல பாகங்களிலும் இலங்கையிலும் இந்து சயம் வேரூன்றி வாழும் பிற நாடுகளிலும் கோலாகலமாகக் கொண்டாடும் வழக்கம் உடையது. இதுக்கு இடம் வேறு வேறு பெயர்களைக் கொண்டிருந்தாலும், தீபாவளிப் பண்டிகை எங்கும் கொண்டாடும் நல்லதொரு நாளாகத் திகழ்கின்றது. ஐப்பசி மாதத்து தேய்பிறை சதுர்த்தசியில் வரும் இந்தப் பொன் நாள் பூமாதேவியின் வேண்டுதலின்பேரில் மகா விஷ்ணுவால் அருளப்பட்டது. அந்தஸ்தில் உயர்தோர் ஆயினும் மேல்நிலையில் உள்ளவர் பிள்ளைகளே ஆயினும் அவர்கள் துஷ்டர்கள் எனின் பாரபட்சமின்றி தண்டிக்கப்படுவது நீதி வழுவா நெறிமுறை என்பதை எடுத்தோதுவது இந்தப் பெருநாள். வரங்கள் பல பெற்ற பூமாதேவியின் மகனான நரகாசுரனின் அகம்பாவமும் அளவுக்கு மீறிய அட்டூழியங்களும் அவனின் அழிவுக்கே வழிசெய்தது. அவனின் கொடுமை கண்டு



மனம் பொறாது கொடியவன் பூமாதேவியின் புதல்வனே ஆயினும் தீயாரை அழித்து நல்லோரை வாழவைக்கும் நாராயணமூர்த்தி அவனை வதம் செய்தார். இந்தத் துயரைப் பொறுக்க இயலாத பூமாதேவி புலம்பிப் பின் மனம்தேறி பகவானிடம் மன்றாடினாள்.

தனது மகன் இறந்து பட்ட இந்த நாளை இந்த உலகில் உள்ளோர் யாபேரும் நினைவு கொள்ளத் தக்க வகையில் வரிசையாகத் தீபங்களையேற்றிப் புத்தாடை புனைந்து இறைவழிபாடு செய்து விருந்தோம்பி வெகுவிமரிசையாக, இனியதோர் இன்பநாளாகக் கொண்டாடிக் களிப்புற வேண்டும் என வேண்டுதல் செய்தாள்.

வேண்டத்தக்கதையறிந்து வேண்ட முழுதும் ஈய்ந்துவக்கும் நெடுமால் அவளின் விருப்பத்தை நிறைவேற்றினார். இதுவே தீபாவளி பிறந்த புராணக்கதை. இந்தத்தினத்தில் எண்ணெய் தேய்த்து நீராடினால் புனித கங்கையில் ஸ்நானம் செய்த பயனைப் பெறுவர் என நூல்கள் செப்புகின்றன. துன்மார்க்கரை வதம் செய்யவும் நல்லோர் நலனைக் காக்கவும் யுகம்தோறும் அவ தாரம் செய்வேன். கீதையில் ஓதிய ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா சுடர் ஆழிப்படையான், ஆழியில் துயில் கூரும் விழுப்பொருள், மெய்வருந்தி அழைத்தவர் குரலுக்கு வந்தருள் அனாதரட்சகன்.

(XIX பக்கம் பார்க்க)

ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி

* இலங்கையில் FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் உலகின் மிகப்பெரிய வலையமைப்பைக் கொண்ட சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
* 136 நாடுகளில் 1092 கிளைகள் எமது தலைமை நிறுவனம் 1883 PARIS இல் நிறுவப்பட்டது.
* ஆசிரியர்கள் பிரான்ஸிலிருந்து வருகைதரும் நிபுணர்களால் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள்.
* இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட INTERNATIONAL CERTIFICATES ஐ வழங்குகிறது. இச்சான்றிதழ்களை எந்தவொரு நாட்டிலும் சமர்ப்பிக்க முடியும்
* பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள்: www.amitafrance-lk.org
* இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல், COURSES பாவனை...
* யாழ். வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... திருமணம் மூலம்/ தொழில்/படிப்பிற்காக) செல்கிறார்கள்.
* எமது மாணவர்கள் விரைவாக பிரெஞ் பேசுகிறார்கள்.

ஆரம்பம்: 15.11.2015 உடன் பதிவை உறுதிப்படுத்துக
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மதில்கட்டடம்)

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

நுவான் கன்ராக்ஸ்

Nuwan Contract

திறமையான வேலையாள்களால் தரமான வேலைகள் செய்து கொடுக்கப்படும்.

1 சதுர அடி 50/=

➤ ரைல்ஸ் வேக்ஸ்
➤ பிளம்பிங்வேக்ஸ்
➤ பாத்ரூம் பிற்றிங்ஸ்
➤ பிற்றிங் வேக்ஸ்

தொடர்புகளுக்கு: 077 329 1745(நுவான்)

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

V.K.Rajaratnam

Sony T.V, Radio, CD Player, Home theater & Spares



V.K.Rajaratnam
No.1c, Stanly Road, Jaffna.

அனைத்து உள்ளங்களுக்கும் தித்திக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்



கன்னிஹா ஜுவல்ஸ்

KANNIHA JEWELS

இல.99E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

021 222 4448


# கண்ணன் எமக்கு காட்சி தரும் தீபாவளி



தீபாவளியாம் தீபாவளி
தேசமே போற்றும் தீபாவளி
கண்ணன் எங்கள்
கண்ணன் - எமக்கு
காட்சி தரும் தீபாவளி
கோடிச் சட்டைகள் போட்டே நாம்
குதூகலிக்கும் தீபாவளி
வெண்ணெய்
உண்ணும் கண்ணன்
மண்ணிலே எழுகின்ற தீபாவளி
வண்ண வண்ணப் பூவாணங்கள்
விசிறியே மகிழும் தீபாவளி
வரிசை வரிசையாய்
தீபங்கள் ஏற்றியே
அருளைக் கேட்கும் தீபாவளி

■ மீசாலையூர் கமலா

# ஆனந்தம் பெருகட்டும்! அறிவொளி நிறையட்டும்.. !



பரிபூரண ஆனந்தம் தான் நம்முடைய உயர் இலட்சியம். இதுதான் மனிதனின் வரலாறு. நாகரிகத்தின் வரலாறு அல்லது முன்னேற்றத்தின் வரலாறு. நீங்கள் எதைப் பிறருக்கு வழங்குகிறீர்களோ அதுவே பல்லாயிரம் மடங்காகப் பெருகி உங்களிடமே திரும்பி வருகிறது. எல்லா ஆற்றல்களும் பெற்றிருந்தும் நரகாசுரன் துன்பங்களை மற்றவர்களுக்கு கொடுத்தான். அது பலமடங்காகப் பெருகி அவனை அழித்தது. அவன் அழிந்த நாளே ஆனந்தத் தீபாவளி யாகியது. நீங்கள் அன்பையும் நன்றியையும் பிறருக்குக் கொடுத்தால் அது பல்லாயிரம் மடங்காக உங்களிடம் திரும்பி வருகிறது. இதுவே பேரானந்தம். ஆனந்தத் தீபாவளி அறிவுறுத்தும் அற்புதமான பாடம் இதுதான். நீங்கள் செல்வத்தைப் பெறவிரும்பினால் பிறருக்கு உங்கள் செல்வத்தை வழங்குங் கள். பெயரையும், புகழையும் நீங்கள் விரும்பினால் மற்றவர்களுக்குப் புகழும், பெருமையும் ஏற்படுத்தக்கூடியபணிகளைச்செய்யுங்கள். தீபாவளித் திருநாள் தீமையை வென்ற திருநாள். எல்லாத் தீமைகளையும் எதிர்த்து நீங்கள் போரிட வேண்டும். எண்ணத்தில் ஏற்படும் தீமைகள் செயலில் ஏற்படும் தீமைகள் முதலிய எல்லாத் தீமைகளுடனும் போரிட்டுக் கொண்டே முன்னேறிச் செல்ல வேண்டும். இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்ற பிறகுதான் ஆனந்தம் பிறக்கிறது. ஆனந்தத் தீபாவளி மலர்கிறது.ஒரு சாது நடந்து கொண்டிருந்தார். அப்போது குரங்குக் கூட்டம் ஒன்று அவரைத் துரத்தியது. சாது ஓடத் தொடங்கினார். அப்போது அருகிலிருந்த ஒருவர் ஐயா... நீங்கள் ஓடவேண்டாம்... எதிர்த்து நில்லுங் கள் என்று குரல் கொடுத்தார். உடனே அந்த சாது ஓடுவதை நிறுத்தி விட்டு, குரங்கு கூட்டங்களை எதிர்க்கத் தயாரானார். உடனே அந்தக் குரங்குக் கூட்டம் பின்வாங்கி ஓடி மறைந்தது. எல்லாத் தீமைகளும், துன்பங் களும் இந்தக் குரங்குக் கூட்டங்களைப் போன்று தான். நீங்கள் அவற்றுக்குப் பயந்து ஓடினால் அவை உங்களை துரத்தும். நீங்கள் எதிர்க் கத் தொடங்கி விட்டால், அவை உங்களை விட்டு ஓடும். எந்தக் குற்றத்தையும் பொறுத் துக் கொள்ளலாம். ஆனால் கோழைத் தனத்தைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது. நீங்கள் வீரத்தையும் தைரியத் தையும் மற்றவர்களுக்கு வழங்குங்கள். ஒரு நாளிலோ ஒரு வருடத்திலோ வெற்றி வந்து விடாது. மிக உயர்ந்த இலட்சியத்தையே நீங்கள் பற்றியிருக்க வேண்டும். உறுதியாக நில்லுங்கள். பொறாமை, சுயநலம் இவற் றைத் தவிர்த்து விடுங்கள். சத்தியத்துக்கும் மனித குலத்துக்கும் உங்கள் நாட்டுக்கும் எப்போதும் உண்மையாக நடந்து கொள் ளுங்கள். அப்போது உலகத்தையே அசைத்து விடும் வலிமை சேருவதைக் காண்பீர்கள். இதுவே ஆளுமையின் இரகசியம். ஆனந் தத் தீபாவளி அறிவுறுத்தும் அற்புதமான பாடமும் இதுதான். இருள் உங்களை சூழ் கின்ற போதெல்லாம் உங்களின் உண்மையான இயல்பை வலியுறுத்துங்கள். ஏனெனில் நீங்கள் அழியாத ஒளிவடிவங்கள். இருளுக்கும் உங்களுக்கும் எந்தச் சம்பந் தமும் இல்லை. இருள் என்பது மாயை. ஒளி என்பது தான் சத்தியம். இந்த அறிவொளி ஒவ்வொருவரின் இதயங்களிலும் ஒளிரட்டும். அனைவருக்கும் தீபாவளி நல்லாசிகள். ஆனந்தத் தீபாவளித் திருநாளில், ஆனந்தம் பெருகட்டும் ! அறிவொளி நிறையட்டும் !

*சிவஸ்ரீ சோமாஸ்கந்த*
*தண்டபாணிக தேசிகர் துஷ்ண*
*இந்துமதகுரு பீடாதிபதி, பிரதம குரு*
*வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன்*
*தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.*

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## தென்னிந்திய திருத்தல யாத்திரை

ஆரம்பம்: 05.12.2015 நிறைவு:- 20.11.2015 நாள்கள்: 16, யாத்திரீகர்:10

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளுக்காக குறைந்த கட்டணத்தில் நடைபெறும் யாத்திரை.

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஆகிய 5 மாநிலங்களுக்கூடான யாத்திரை.

செல்லும் ஆலயங்கள் சுருக்கமாக,

திருச்சி மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார் பட்டி விநாயகர், பழனி உட்பட 6 படை வீடுகள், திருப்பதி, பத்மாவதித் தாயார் மேல்மருவத்தூர் திருவெண்ணாமலை உட்பட பஞ்சபூதத் திருத்தலங்கள், திருநள்ளாறு, சனி பகவான் உட்பட 9 நவக்கிரக ஆலயங்கள், ஸ்ரீரங்கம் பொற்கோவில், சமயபுரம், குருவாயூர், கொடுங்களூர் பத்ம நாதசுவாமி, மைசூர் சாமுண்டீஸ்வரி, பஞ்சவடி, ஆஞ்சனேயர், இராமேஸ்வரம், மணக்குள விநாயகர், பிரம்மபுரீஸ்வரர், கன்னியாகுமரி உட்பட 65இற்கும் அதிக ஆலயங்களை தரிசிப்பதுடன் மைசூர் பாலஸ் பிருந்தாவனம் தோட்டம், பூம்புகார் ஸ்ரீ ரெங்கப்பட்டினம், பாண்டிச்சேரி பீச், மெரினா பீச்கும் காணலாம்.

தங்களின் கட்டணத்துள் அடங்குபவை:-

இருவழி விமானச்சீட்டு, மூன்றுவேளை சுத்தமான உயர்தர சைவ உணவு, 2 லீற்றர் மினரல் வோட்டர், யாத்திரை முடியும் வரை V.D.O , O.D.O இணைந்த AC வாகன வசதி, 4 மணி காப்பி, ரீ, இரண்டு பேருக்கு கட்டில் மெத்தை, T.V வெண்ணீர் குளியல் அறை, இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள், கொழும்பில் இருந்து விமான நிலையம் செல்ல வாகனவசதி, இவை அனைத்தும் எமது சேவை.

கட்டணத்துள் அடங்காத எமது சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புவரவும் திரும்ப யாழ்ப்பாணம், செல்லவும், ரயில் அல்லது பஸ் கட்டணம், ஆலயங்களில் குறூப்பாக எடுக்கும் புகைப்படங்கள் 60 படங்கள் (இராமேஸ்வரம், திருப்பதி) தவிர்ந்த ஆலய தரிசனக் கட்டணங்கள் (மட்டும்) இவை அனைத்தும் எமது சொந்த சேவை.

**விருப்பமுடையவர்கள் மேலும் விவரம் தேவையானால் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.**

மேலும் விவரங்களுக்கு: கலாநிதி ஸ்ரீரெங்கநாதன், மகன் ராஜன்
59,3/6 செட்டியார்தெரு, கொழும்பு.
077 768 0102, 077 736 2154

**January 21st of 2016 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்**

## IELTS

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 &8.5

21st January 2016 யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்.



இப்பொழுது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**IELTS பாடங்களை படிப்பிக்கும் அதே வேளை Grammar and Vacabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.**

**வகுப்புக்கள் ஆரம்பம் 16.11.2015**

### COURSE SCHEDULE

| Mon, Tues, Wed, Thur | Saturday & Sunday |
|---|---|
| 10 Week | Duration 10 Week |
| 8.30 - 10.30 , 5.00 - 7.00 | Time 8.30 - 11.00 |

## IELTS LIFE SKILLS A1

கடந்த காலங்களில் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் City and Guild பரீட்சைக்கு எமது கல்லூரியில் இருந்து தோற்றி 100% பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். அதே போன்று இப்பொழுதும் IELTS Life Skill பரீட்சைக்கு தோற்றி பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

**இன்றே எமது வகுப்புகளில் சேர்ந்து பரீட்சையில் சித்தியடையுங்கள்.**

## BRITISH COLLEGE OF ENGLISH

No 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 தொ.பே : 0778803887



# வாழ்வு தரும் தீபம்

தீபம் வந்து சோக நெஞ்சை
பறக்க விட்டது – புது
இன்பம் வந்த பாதை எங்கும்
வெளிச்சம் பரவுது
மின்வெட்டைக் கூட ஒளி
மிரட்டிப் பார்க்குது – மனம்
மத்தாப்பு போல

இங்கே ஒளிருகின்றது.
சாதிமத பேதமின்றி
நாடு காணுது – ஒரு
வீடுகூட மீதியின்றி
மகிழ்ச்சி துள்ளுது.

அக்கம் பக்கம் பாத்துப் பாத்து
மக்கள் நடக்குது – பிணி
கண்டவரின் வீட்டை மட்டும்
விட்டு வைக்குது!
மின்னல் போல வெட்டும் ஒளி
கையில் மின்னுது – ஏழை
பட்டாசைக் கண்டு
மனம் ஊஞ்சலாடுது

பார்த்துப் பார்த்து செய்த வெடி
பற்றி வெடிக்குது – லட்ச
பணம் அங்கே இங்கே கருகிக்
கிடக்குது
கந்தகப் பொடி பட்டுப் பட்டு
தோல் இற்றது – வெடி
விபத்து வந்து உயிரும் கூட
பாழாய்ப் போனது

காலை மாலை உழைத்த வெடி
மகிழ்ச்சிப் படுத்துது – அதில்
மடிந்துபோன
தொழிலாளியை
அது நினைத்து அழுகுது!


ஸ்ரீதேவி ஜுவல்லறி

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தித்திக்கும்
தீபாவளி நல் வாழ்த்துக்கள்



ஓடர்
நகைகள்
22 கரட்டில்
குறித்த
தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்து
கொடுக்கப்படும்.




ஸ்ரீதேவி ஜுவல்லறி
இல.80/7 , கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 021 720 1787, 077 104 2848



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள்






குழந்தைகள்
தாய்மார்களுக்கு
வேண்டிய
அனைத்து
பொருள்களையும்
பெற்றுக்
கொள்ளலாம்



Ahtus
Ahtus Enterprises (Pvt) Ltd.
ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்
இல. 30, கன்னாதிட்டி றோட்
(வண்.சிவன் கோயில்
முன்பாக) யாழ்ப்பாணம்.
Tel: 0777 427322



Lakeland Inter-American School




முற்று முழுதான ஆங்கில மொழி (ENGLISH MEDIUM) மூலம் முன்பள்ளிச் சிறார்களுக்கு எமது பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எமது பாலர் முன்பள்ளிக்கான விண்ணப்பப்படிவங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எமது பாடசாலை செயற்பாடுகளாவன:-

- Dr.Maria Montessori இன் எண்ணக் கருவில் பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சிக்கேற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் (AMI) முறை மூலமான கற்றல் செயற்பாடுகள்.
- இலகு முறையிலான உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தல் முறையில் கற்பித்தல்.
